இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை

2020

உள்ளடக்கம்

- இணைப்புத் தகவல்கள் 01
- தொலைநோக்கும் பணிக்கூற்றும்.....02
- கூட்டுத்தாபனத் தகவல்கள் 03-09
- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அறிக்கை 10-39
- நிதியறிக்கை ....
  - நிதி நிலைமைக் கூற்று..... 40
  - வருமானக் கூற்று 41
  - பங்குரிமை மாற்றற் கூற்று 42
  - காசுப் பாய்ச்சற் கூற்று 43
- கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும்.....44-59
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 60-77
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் 78-89



தலைமைக் காரியாலயம்

இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி : 0115757539
தொலைநகல் : 011243863
மின்னஞ்சல் : slspc@sltnet.lk
இணையம் :- WWW.SLSPC.LK

பிராந்திய அலுவலகம்

பிராந்திய அலுவலகம், கல்பில்ல, பன்விலை
தொலைபேசி : 0815634903
தொலைநகல் : 0815634902
மின்னஞ்சல் : regionalofficegp@gmail.com

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை

தொலைநோக்கும் பணிக்கூற்றும்

தொலைநோக்கு

பெருந்தோட்டத் துறையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மிகவும் பலமான வர்த்தக முயற்சியாக விருத்திசெய்தல்.

பணிக்கூற்று

தொழிலாளர் பங்கேற்பினூடாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை சிறப்பாக நிர்வகித்து நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் அயற் கிராமங்களுக்கு அதிகபட்ச பங்களிப்புக்களை வழங்குதல்.

பணிப்பாளர்கள் சபை

பெயர்	பதவி	நியமனத் திகதி
திரு. எம்.ஜீ.ஜீ திலகசிறி	தலைவர்	2020.01.23
திருமதி. ஆர்.ஏ.ஆர்.எஸ் மாயாதுன்ன	பணிப்பாளர் சபை அங்கத்தவர் /அமைச்சின் மேற்பார்வையாளர்	2020.10.12
திருமதி. டீ.ஏ மனோரத்ன	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. ஜே.எல்.ஏ சம்பத் நலிந்த	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. எஸ்.எம்.கீ.எஸ் சிறிவர்தன	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. ஆர். சுசன்த சேனாரத்ன	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. ஏ.எம் சுமேத ரேணுக பண்டார	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. குஷான் வேகொடபொல	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.01.28
திரு. டப்.டப்.எம்.பீ.பீ கும்புராதெனிய	பணிப்பாளர் சபை அங்கத்தவர்	2020.10.12


முகாமைத்துவம் – பிரதான காரியாலயம் – 2020

பெயர்	பதவி
• சட்டத்தரணி திரு. ஸ்ரீமால் விஜேசேகர	தலைவர்
• திரு. எச்.என்.பீ ஜினசேன	பொது முகாமையாளர்
• திரு. ஜே.எச்.அய் ஜயசுந்தர	பதில் பிரதிப் பொது முகாமையாளர் – நிர்வாகம்
• திரு. எஸ்.அய்.எம் ஹஸன்	பிரதிப் பொது முகாமையாளர் – நிதி
• திருமதி. கே.ஏ.எச்.டீ பெரேரா	முகாமையாளர் – பெறுகை
• திரு. கே முனசிங்ஹ	முகாமையாளர் – சட்டம்
• திருமதி பீ.வீ.எல்.அய் பெனரகம	முகாமையாளர் - காணி
• திரு. டப்.டீ.டப். கீர்த்தி	முகாமையாளர் – சந்தைப்படுத்தல்
• திரு. ஈ.ஆர்.அய்.பீ.எஸ்.எஸ் பண்டார	உள்ளகக் கணக்காய்வாளர்
• திரு. ஆர்.ஜீ.எஸ்.எச். குணதிலக	கணக்காளர்
• திரு. ஆர்.வை.ஜீ.எஸ் யாபா	உதவி முகாமையாளர் - போக்குவரத்து
• செல்வி. ஜீ.டீ.எஸ்.சீ சுதசிங்ஹ	உதவி முகாமையாளர் (நிர்வாகம் / மனித வளம் – ஒப்பந்தம்)
• திரு. பீ. வீ ப்ரதீப்	உதவி முகாமையாளர் – காணிகள்
• திருமதி. எச்.எம்.எஸ்.என் ஹேரத்	உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)

- திரு. பீ.சீ.ஜே பனாகொட — உதவிக் கணக்காளர்
- திரு. குருப்பு — கணக்காய்வு உத்தியோகத்தர்
- திரு. ஜே.பீ.சீ பொன்சேகா — நிர்வாக உத்தியோகத்தர்

முகாமைத்துவம் – பெருந்தோட்டங்கள் - 2020


பெயர்	பதவி
திரு. பீ.அய்.எல் பெரேரா	தோட்ட அதிகாரி – கெலேபொக்கை அரச தோட்டம்
திரு. ஏ.சீ அபேவர்ண	தோட்ட அதிகாரி – ரங்களை அரச தோட்டம்
திரு. கே.டீ.எம்.பீ வீரசிங்ஹ	தோட்ட அதிகாரி – ஹெயார்பார்க் அரச தோட்டம்
திரு. எஸ். வய் லியனகே	தோட்ட அதிகாரி - கொடகங்கை அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.ஆர்.எம் ரனவக	தோட்ட அதிகாரி – ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம்
திரு. டீ.எம்.பீ.அய். தென்னகோன்	தோட்ட அதிகாரி – கல்பிஹில்லை அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.எம் தயாரத்ன	தோட்ட அதிகாரி – கோமரை அரச தோட்டம்
திரு. டப்.டீ.கே சமரதுங்க	தோட்ட அதிகாரி – மிட்லன்ட்ஸ் அரச தோட்டம்
திரு. டீ.ஆர்.எச் ஹேவகே	தோட்ட அதிகாரி – பாகலை அரச தோட்டம்
திரு. வய்.ஏ.டீ.பீ வடுகொடபிடிய	தோட்ட அதிகாரி – அலகொல்லை அரச தோட்டம்
திரு. ஜீ.டப்.ஜீ விஜேரத்ன	தோட்ட அதிகாரி – ஓபல்கலை அரச தோட்டம்
திரு. அய்.டப்.ஆர் ஜயவர்தன	வலஹந்துவை அரச தோட்டம்
திரு. டீ.டப்.டீ.சீ தன்தசிங்ஹ	தோட்ட அதிகாரி – வைதலாவை அரச தோட்டம்
திரு. ஜீ.கே.ஆர்.பீ கிரியல்ல	தோட்ட அதிகாரி (விஹாரகலை அரச தோட்டம்)
திரு. எம்.எம்.சீ.பீ அஹெலமல்பே	தோட்ட அதிகாரி – வுட்சய்ட் அரச தோட்டம்
திரு. சீ.ஜே தஸநாயக	தோட்ட அதிகாரி (வெளிநாட்டு விடுமுறை)
திரு. சீ.எச்.எச்.கே.ஜீ லக்ருவிர	கடமை நிறைவேற்றல் தோட்ட அதிகாரி (நிகோலேய அரச தோட்டம்)
திரு. எஸ்.டப்.எம்.சீ.எஸ் அலெதெனிய	குடாஓய அரச தோட்டம்



தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகம் மற்றும் தோட்டங்களின் ஆளணி		
HM 2-1	பொது முகாமையாளர்	1
HM 1-1	பிரதிப் பொது முகாமையாளர் - நிதி, நிர்வாகம்	3
MM 1-1	முகாமையாளர் - நிதி, நிர்வாகம், கணனி, பெருந்தோட்டக் கட்டமைப்புக்கான பொதுகை	21
JM 1-1	கணக்காய்வு உத்தியோகத்தர், உதவிக் கணக்காளர், கணக்காளர், தோட்ட அதிகாரி	24
MA 5-2	உதவி தோட்ட அதிகாரி, நிர்வாக உதவியாளர்	2
MA 1-1	பிரதிநிதித்துவ உதவியாளர் - தலைவர் மற்றும் பிரதிநிதித்துவ உதவியாளர் - பொது முகாமையாளர்	30
PL 3	முகாமைத்துவ உதவியாளர்	5
PL 1	ஓட்டுநர்	3
	தினக்கூலி உதவியாளர்	89
	மொத்தம்	

உரு – 01 நிறுவனக் கட்டமைப்பு

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் பரவல்.



MAP SHOWING SLSPC PLANTATIONS

உரு 02 - இலங்கையில் பெருந்தோட்டங்களின் பரவல்

தலைவரின் மீளாய்வு



"பெருந்தோட்டத் துறையில் மிகவும் பலம்வாய்ந்த வர்த்தக முயற்சியாக விருத்தி செய்தல்" என்பதே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தொலைநோக்காகும். அந்த வகையில், 2020 ஆம் ஆண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் வைத்தியர் கௌரவ ரமேஷ் பதிரன அவர்கள் 1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை நிர்வகிப்பதற்காக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக புதியதொரு பணிப்பாளர் சபையை நியமித்து அதற்கு என்னை தலைவராகவும் நியமித்தார். எனவே, நான் "சுபீட்சத்தின் நோக்கு" அரச கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளை கொண்டு நடாத்தும் பணியை 2020.02.06 ஆம் திகதி ஆரம்பித்தேன்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தை பெறுப்பேற்கும் போது கடந்த காலங்களில் (அதாவது, 2020 க்கு முன்பு) அதன் உள்ளக நிர்வாகம் மற்றும் முகாமை கீழே குறிப்பிடப்படுகின்ற காரணங்களால் அதன் செயற்றிறனை இழந்திருப்பதை அவதானித்ததுடன், நிறுவனத்திற்குள் மேலும் தாமதிக்காது சிறந்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவப் கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

1. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2012 முதல் 2109 வரையான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 2009 க்கு பிறகு இலாபம் உழைக்காத அரச வர்த்தக முயற்சியாக இருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு அது அடைந்திருந்த மொத்த நட்டம் 329 மில்லியன் ரூபாவாக இருந்தது.

3. கூட்டுத்தாபனத்தின் வேதனங்கள் மற்றும் ஊழியர்களின் நியதிச்சட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 2013 முதல் 2019 வரையான 07 ஆண்டுகளில் ரூபா. 1,550 மில்லியன் திறைசேரியினால் இந்நிறுவனத்திற்கு வருடாந்தம் வழங்கப்பட்டு வந்தது. மேலும், 2003 முதல் 2016 வரை கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் பழைய நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் செலுத்தப்படாமையினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் கணிசமானளவு வழக்குகள் தாக்கலிடப்பட்டிருந்தன.

4. நிறுவனத்தின் உள்ளக நிதி முகாமைத்துவம் செயலிழந்து காணப்பட்டதுடன் 2020 ஆம் வருடத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கள் கணிசமானளவு இருந்தன. 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தோட்டங்களில் இருந்த ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு 22 ஆகும்.

5. அரச வர்த்தக முயற்சியாக இந்நிறுவனத்திற்கு வியாபாரத் திட்டமோ, அதன் அடிப்படையிலான செயல்பாட்டுத் திட்டமோ இருக்கவில்லை என்பதுடன், கலந்துரையாடல் கட்டத்தில் இருந்த அங்கீகரிக்கப்படாத ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று அமுலில் இருந்தது.

6. கூட்டுத்தாபனத்தின் 17 தோட்டங்களிலும் பணியாற்றுகின்ற 3,500 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் (தோட்டங்கள்) பதவி உரிய திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்காது வெற்றிடமாக இருந்தது. தலைமை அலுவலகத்திலோ அல்லது பிராந்திய அலுவலகங்களிலோ அல்லது தோட்டங்களிலோ அன்றாட வரவு மற்றும் செலவினங்கள் உரிய முறையில் மேற்பார்வை செய்யப்படவில்லை.

7. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் கண்டி, மாத்தளை, காலி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 17 அரச பெருந்தோட்டங்கள் முகாமை செய்யப்படுவதுடன் அந்தத் தோட்டங்களில் 10 தேயிலைத் தொழிற்சாலைகள் இருந்தாலும் அவற்றுள் 03 தொழிற்சாலைகள் மாத்திரம் இயங்கும் நிலையில் இருந்தன.

8. கெலேபொக்கை மற்றும் ரங்களை ஆகிய இரு தொழிற்சாலைகளின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நவீனமயப்படுத்தி நிர்வகிக்காமையினால் தரமான தேயிலை உற்பத்தி கிடைக்கவில்லை என்பதுடன் ஏலத்தில் கூட்டுத்தாபனத்தின் தேயிலைக்கு மிகவும் குறைந்த விலையே கிடைத்தது. அந்தத் தொழிற்சாலைகள் மிகவும் ஆபத்தான நிலையிலேயே இயங்கிக்கொண்டிருந்தன.

9. தோட்டங்களிலிருந்து பறிக்கப்படுகின்ற பச்சைத் தேயிலைக் கொழுந்துகளை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளில் முடிவுத் தேயிலையாக உற்பத்தி செய்யாது பச்சைத் தேயிலைக் கொழுந்தினை கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யும் ஒரு முறை பின்பற்றப்பட்டு வந்ததுடன், குறித்த விலைகளை பகிரங்கமாக பத்திரிகைகள் மூலம் அறிவிக்காது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை முறைமைகளுக்கு அப்பால் வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்து விற்பனை செய்யும் ஒரு நடைமுறை அமுலில் இருந்தது.

10. அரச தோட்டங்களின் காலத்துக்காலம் ஏற்படும் முகாமைத்துவத் திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளும் வணிக நோக்கிலான வெட்டுமரம் பிரித்தெடுத்தல் செயன்முறையை உரிய முறையில் அரச நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்கின்ற மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

11. கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் அரச கணக்காய்வாளர் அதிபதி கணக்காய்வு அறிக்கைகளில் பாதகமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், குறித்த பாதகமான கருத்துக்களை சரிசெய்வதற்கு முகாமையினால் பொருத்தமான வேலைத்திட்டம் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2020 ஆம் ஆண்டில் நிறுவனத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மீளாய்வு

முக்கியமாக நிறுவனத்தில் செலவுகளைக் கட்டுப்படுத்தி அரச சுற்றுநிருபங்கள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கேற்ப உரிய பெறுகை முறையின் கீழ் தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலும் மற்றும் தோட்டங்களிலும் முகாமையை நிர்வகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கொவிட் தொற்று நிலையுடன் விதிக்கப்பட்ட பயணக் கட்டுபாடுகள் காரணமாக தலைமை அலுவலகத்தில் மிகவும் குறைவான எண்ணிக்கையான உத்தியோகத்தர்களே கடமைக்கு சமூகமளித்ததுடன், அதன் விளைவாக பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறான நிலையிலும் 2019 வருடத்தின் இறுதி வரையில் திறைசேரியில் தங்கியிருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு 2020 ஆம் ஆண்டினுள் திறைசேரிக்கு எவ்வித சுமைகளையும் ஏற்படுத்தாது கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை கொண்டு நடாத்த முடிந்தது.

வருமானம் மற்றும் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்காக தோட்டங்களின் நடவடிக்கைகளை அன்றாடம் மேற்பார்வை செய்வதற்கான ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனூடாக செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமானது. பச்சைத் தேயிலைக் கொழுந்து விற்பனை மற்றும் வணிக நோக்கிலான வெட்டுமர விற்பனை உரிய பெறுகை நடைமுறைகளின் அடிப்படையில் இடம்பெற்றதால் நிறுவனத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்த வகையில், 2019 ஆம் ஆண்டில் ரூபா. 329 மில்லியனாக இருந்த நட்டத்தினை 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 149 மில்லியன் வரை ரூபா. 180 மில்லியனால் குறைத்துக்கொள்ள முடிந்தது.

வருமானத்தை அதிகரிப்பதற்கு தோட்டங்களின் பச்சைக் கொழுந்தின் விளைச்சலை அதிகரிக்க வேண்டும். இது பாரியதொரு சவாலாக இனங்காணப்பட்டது. கடந்த காலங்களில் உரிய முறையில் வளமாக்கிகள் மற்றும் விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்தாமையே விளைச்சல் குறைவதற்கான பிரதான காரணமென அடையாளப்படுத்தப்பட்டது. அந்த வகையில், கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை காரணமாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அரச தோட்டங்களில் உரிய முறையில் நிர்வகிக்கப்படாத தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு உரம் மற்றும் ஏனைய விவசாய உள்ளீடுகளை முடியுமானவரை மிகவும் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2020 இல் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விளைச்சல் 8,101,974 கிலோ கிராமாக இருந்ததுடன், முந்திய வருடத்தில் (2019 இல்) பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விளைச்சல் 6,535,701 கிலோ கிராமாகவே இருந்தது. அதற்கேற்ப, கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விளைச்சல் முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 123.96% ஆக அதிகரித்திருந்தது. அத்துடன், 2020 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட பச்சைத் தேயிலை விளைச்சல் 2013 ஆம் வருடத்தின் பிறகு பெற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் கூடிய விளைச்சலாக இருந்தது.

முடிவுத் தேயிலையினால் பெற்றுக்கொள்ளும் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக பகிரங்க ஏலத்தில் உயர்ந்த விலை கிடைக்கும் விதத்தில் தரமான தேயிலையை உற்பத்தி செய்வது அவசியம். இதற்கு பிரதான தடையாக அமைந்திருந்த காரணம் யாதெனில், கெலேபொக்கை மற்றும் ரங்களை தொழிற்சாலைகள் உரிய முறையில் நிர்வகிக்கப்படாமையும் நவீன தொழிநுட்பத்துடன் ஈடுகொடுக்கும் வகையில் அதனை நவீனமயப்படுத்தாமையாகும். எனவே, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நிறுவனத்தின் நிதிநிலைமைகளைக் கருத்திற்கொண்டு கெலேபொக்கை தொழிற்சாலையை நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கும் போது வெளி நிறுவனங்களுக்கு கொழுந்துகளை விற்பனை செய்வதை அரச நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெளிவான விடயமாகும். எனவே, ஆரம்ப கட்டமாக நிறுவனத்தின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு சில தோட்டங்களின் பச்சைத் தேயிலைக் கொழுந்தினை கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி அங்கு தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற்பாட்டுச் செலவுகளுக்கான நிதி நிலைமையை சீரமைத்துக்கொள்ளும் வரை வெளித் தரப்பினர்களுக்கான பச்சைத் தேயிலை விற்பனையில் உரிய பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டது. அந்த வகையில், 02 மாதங்களுக்கு ஒரு தடவை பகிரங்கமாக பத்திரிகை அறிவித்தலைப் பிரசுரித்து போட்டி அடிப்படையில் உரிய தரப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர். அவ்வாறே, வர்த்தக நோக்கிலான வெட்டுமர விற்பனை தொடர்பாக அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலிருந்து மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றின் பெறுபேறாக, பச்சைத் தேயிலை விற்பனை மற்றும் வணிக நோக்கிலான வெட்டுமர விற்பனையின் மூலம் கிடைத்த வருமானங்களை முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக்கொள்ள முடியுமானது.

நிறுவனத்தின் நிதி முகாமைத்துவத்தினால் கிடைக்கும் வருமானத்தை உரிய முறையில் பேணிவர முடியாதிருப்பதற்கான பிரதான காரணம் உத்தியோகத்தர்களின் பழைய நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் உரிய முறையில் செலுத்தப்படாது குவிந்துள்ளமையாகும். இதன் காரணமாக, 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மிகை விதிப்புகளுடன் சேர்த்து செலுத்த வேண்டியிருந்த நியதிச்சட்டச் கொடுப்பனவுகள் ரூபா. 1050 மில்லியனாக இருந்ததுடன், நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் செலுத்தாமையின் அடிப்படையில் கிட்டத்தட்ட ரூபா. 388.383 மில்லியன் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்காக நீதிமன்றங்களில் கணிசமான வழக்குகள் தாக்கலிடப்பட்டுள்ளன. திறைசேரியிலிருந்து எவ்விதமான ஒதுக்கீடுகளையும் பெறாது பற்றாக்குறையாக இருந்த நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்காக கிட்டத்தட்ட ரூபா. 21.34 மில்லியன் பெறுமதியான தொகையை நீதிமன்றங்களுக்கு செலுத்தி 77 வழக்குகளை முடிவுக்குக்கொண்டு வந்தது. இவ்வாறு செலுத்த வேண்டியேற்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அரச வங்கியிலிருந்து எடுத்திருந்த வங்கிக் கடன் மற்றும் மேலதிகப் பற்றுக்களுக்கான மாதாந்த தவணைகள் மற்றும் வட்டிப் பணத்தைச் செலுத்துவதற்காக நிறுவனம் உழைத்த வருமானத்தை பயன்படுத்த வேண்டியிருந்ததன் அடிப்படையில் இந்த வருடத்தில் (2020 இல்) உத்தியோகத்தர்களுக்கான நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை வெறும் மூன்று மாதங்களுக்கு மாத்திரமே உரிய முறையில் செலுத்தக்கூடியதாக இருந்தது.

நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் சிறந்த நிதி ஒழுங்கினைப் பேணுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில், ஆரம்பமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்படாதிருந்த வருடாந்த அறிக்கைகளை 2012 முதல் 2016 வரை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறே, நிறுவனத்தின் முறையான முகாமைத்துவத்திற்காக வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயார்செய்து அமைச்சுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்த அடிப்படையிலான அதிகமான ஆட்சேர்ப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன், கொவிட் 19 தொற்று நோய் காரணமாக அரசாங்கத்தினால் அடிக்கடி வெளியிட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில் சில ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்காக சரியான நடைமுறைகளின் கீழ் 2020 இல் வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை.

கடந்த காலத்தில் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்திசெய்த முடிவுத் தேயிலை "கூட்டுத்தாபனத் தேயிலை" எனும் நாமத்தில் சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது மிகவும் சிறந்த நடவடிக்கையாக இருந்ததுடன் கொவிட் நிலைமையிலும் அந்த உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்க முடிந்தது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களின் பிரதான வருமானமாக இருந்த தேயிலை மற்றும் இறப்பர் வருமான அதிகரிப்பு வீதம் 2020 இல் 41.52% ஆக இருந்ததுடன், தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் வருமானம் 55.64% அதிகரித்துள்ளது. 2020 இல் தேயிலை உற்பத்தி 22.65% இனாலும் ஒட்டுமொத்த தேயிலை விற்பனை விலையின் சாதாரண பெறுமதி 15.63% இனாலும் அதிகரித்துள்ளது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2020 இல் கூட்டுத்தாபன தேயிலையின் ஒரு கிலோ கிராமுக்கான உற்பத்திச் செலவு 10.30% இனால் குறைந்துள்ளது. அத்துடன், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நட்டம் 54.64% இனால் குறைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் எய்துள்ள நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகைகளுக்கு பணிப்பாளர் சபையின் சரியான தீர்மானங்கள் வழிவகுத்துள்ளன. அத்துடன், கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களதும் அர்ப்பணச் சிந்தையுடனான பணிகளை பெரிதும் மதிக்கிறேன்.

அதற்கேற்ப, இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக முன்வைக்க விரும்புகிறேன்.

சட்டத்தரணி ஸ்ரீ மால் விஜேசேகர.

தலைவர்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

நியதிச்சட்டப் பின்னணி

சட்ட நிலைமை :

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 1958 ஆம் ஆண்டு, 4 ஆம் இலக்க லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், பின்னர் 1962 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மற்றும் 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கச் சட்டங்களால் குறித்த சட்டம் திருத்தப்பட்டது.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றுப் பின்னணி.

1958 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டுள்ளது .விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் கையளிக்கப்படுகின்ற தோட்டங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பயிரிடப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதும் பயிர்ச்செய்கையை முறையாக முகாமைத்துவம் செய்வதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்கான பிரதான நோக்கங்களாக அமைந்திருந்தன. மேலும் காணி ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கு உரிமை மாற்றம் வழங்கப்படுவதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கான இதர நோக்கங்களாகும்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் துவக்கத்திலிருந்தே அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்ட பல தோட்டங்களுடன் மாத்திரம் செயற்பட்டதால் அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை சிறந்த வகையில் நடைமுறைப்படுத்தியது. ஆதலால், கிட்டிய காலத்தில் சுமார் 15,000 ஹெக்டயர் தோட்டங்களைக் கொள்வனவு செய்ய முடிந்தது. உறுதியான சட்டத்தை நிறுவி அதற்கமைய முறையான முகாமைத்துவத்தை பேணிச் சென்றதன் காரணமாக இவ்வளர்ச்சி ஏற்பட்டது எனக் கூறலாம்.

1972 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் மக்கள் மயப்படுத்தப்பட்ட தோட்டங்களுள் கிட்டத்தட்ட 250 தோட்டங்கள் மற்றும் அதுவரை காணப்பட்ட உரிமங்களை இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களில் சுமார் 250 தோட்டங்களை அதுவரை உரிமம் பெற்ற சுமார் 25 தோட்டங்களை முகாமை செய்து வந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு விருத்தி செய்து மேம்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டன.
அவ்வாறே, கையகப்படுத்தப்பட்ட அடுத்த காணிகளை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டு பின்பு அந்த நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டன.

பாரியளவில் விஸ்தரிக்கபட்படிருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை விருத்தி செய்வதற்காக முகாமைத்துவக் கட்டமைப்பினை மாற்ற வேண்டியேற்பட்டது. ஆதலால், தோட்டங்களை மிகவும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதற்காக 1977 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டன. அதற்கமைய தோட்டங்களின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது.

லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டம் 1979 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதன் 2 ஆம் உறுப்புரைக்கேற்ப அதுவரை லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பெயர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமாக திருத்தியமைக்கப்பட்டது.

மேலும், 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 6 ஆம் இலக்க உறுப்புரையின் படி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. அதற்கமைய,

அ) தோட்டங்களிலுள்ள நிலங்களை விவசாய ரீதியாக முகாமை செய்து அதிகபட்சப் பயனுறுதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மேம்படுத்தல்.

ஆ) நிலத்தில் காணப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை மறுசீரமைப்புச் செய்து முறையான முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புடன் விவசாயப் பயிர்களை பல்வகைப்படுத்துதல்.

இ) விவசாயப் பொருட்களை பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்.

ஈ) தோட்டங்களில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துதல்.

உ) தோட்டங்களில் விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் இயந்திர உபகரணங்களை நிறுவி சிறந்த முறையில் பராமரித்து நடாத்திச் செல்லல்.

ஊ) பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளல்.

1980 ஆம் ஆண்டில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களின் முகாமையை வலுப்படுத்தவும், பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினை நிறுவுவதற்காகவும் பல படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அதிமேதகு சனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1980 பெப்ரவரி மாதம் பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மிகவும் அதிகாரம் கொண்ட நான்கு பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்டன. அவையாவன, S.L.S.P. C. I, II, III மற்றும் IV என்பனவாகும். 1984 ஆம் ஆண்டில் இப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி பலாங்கொடை மற்றும் மாத்தளைக்கு அண்மித்த தோட்டங்களை சிறந்த வகையில் முகாமை செய்வதற்காக மேலும் இரண்டு சபைகள் S. L. S. P. C V மற்றும் VI ஆக ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு, தோட்டங்களின் முகாமைத்துவத்தை பன்முகப்படுத்திய போதிலும், கொள்கை உருவாக்கம், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் இலங்கை அரச தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

இச் சீர்திருத்தங்களின் வினைத்திறனின்மை மற்றும் பயனுறுதியின் குறைவுத் தன்மையை உணர்ந்த பின்னர், அப்போதைய அரசாங்கத்தினால் "அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது அரச சொத்துக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை அரச கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின்" கீழ் 1992 ஆண்டு 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் நிறுவப்பட்டன. அவ்வாறான 22 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 402 இலாபமீட்டும் மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட தோட்டங்களின் முகாமைத்துவம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டன. நீண்ட காலமாக நட்டத்தில் இருந்த, மற்றும் மலையக மற்றும் தாழ்நிலத் தேயிலையின் சிறப்பியல்புகள் இல்லாத, குறைந்த விற்பனை விலையுடைய 55 நடுத்தரப் பிரதேச தேயிலைத் தோட்டங்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீதமாகின. இந்த 55 தோட்டங்களில் 32 தோட்டங்கள் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு விடப்பட்டன. இந்த 32 தோட்டங்களில் 11தோட்டங்கள் வரையறுக்கப்பட்ட எல்கடுவ

பெருந்தோட்டக் கம்பனிக்கு 1993 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, எஞ்சிய 11 தோட்டங்களை 16 தோட்டங்களாக கூட்டிணைத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த 16 தோட்டங்களுக்கு உரித்தான பெரும்பாலான நிலங்களில் பழைய விதைத் தேயிலைப் பயிர்களே இருந்தன. அத்துடன், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நக்கிள்ஸ் மலைத்தொடரைச் சுற்றி கரடுமுரடான சாய்வான மண் அடுக்கை காணப்படுகின்றது. ஆதலால், இந்த நடுத்தரப் பிரதேசத் தோட்டங்களின் தேயிலைக் கொழுந்து விளைச்சல் இயற்கையாகவே மிகவும் குறைவாகவே இருந்தமை, குறைந்த விற்பனை விலை மற்றும் குறைந்த விளைச்சல் ஆகிய மூன்று காரணங்களால் இப் பகுதியிலுள்ள தோட்டங்கள் நீண்ட காலமாக நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களாகும்.

அவ்வாறே, 1992 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஊழியர்களையும் ஓய்வு பெறச் செய்து அதன் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டில், ஒரு புதிய ஊழியர் குழாத்தை நியமித்து மீண்டும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளன. அன்றிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. மேலும், 2001 முதல் 2004 வரை நட்டத்தில் இயங்கி வந்த இக்கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு சுமையாக இருந்ததால், அரசின் சுமையை குறைக்கும் வகையில் சில தோட்டங்களும் சொத்துக்களும் நீண்ட காலக் குத்தகைக்கு விடப்பட்டன.

முதலீட்டுச் சபையின் பரிந்துரையின் பேரில், தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட வைத்தலாவை, வுட்சைட் மற்றும் ஹெயார்பார்க் தோட்டங்கள் மற்றும் கொட்டகங்கை தொழிற்சாலை போன்ற ஒரு சில திட்டங்கள் தோல்வியின் காரணமாக குத்தகைதாரர்களால் கைவிடப்பட்டன. பின்னர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு பல பொறுப்புகளுடன் ஹெயார்பார்க் தோட்டத்தையும் கொட்டகங்கை தொழிற்சாலையையும் கையகப்படுத்த வேண்டியிருந்தது. மோசமான முகாமைத்துவம் காரணமாக சீர்குலைந்து கிடக்கும் ஹெயார்பார்க் தோட்டங்கள், அத்துமீறிய கையகப்படுத்தல் மற்றும், பயிர்ச் செய்கையை பராமரிக்காமை போன்ற காரணங்களினால் தோட்டங்கள் மிகவும் நட்டம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டன. வைத்தலாவை மற்றும் வுட்சைட் தோட்டங்கள் பின்னர் வேறு தனியார் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. அந்நிறுவனத்தினால் அத்தோட்டங்களின் தவறான முகாமைத்துவம் காரணமாக வுட்சைட் தோட்டத்தை கைவிட்டு வைத்தலாவை தோட்டத்தை மட்டும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

2006 ஆம் ஆண்டு அரசாங்கக் கொள்கை மாற்றப்பட்டதோடு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டு, மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவகத்தின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு அதனை வர்த்தக ரீதியாக வலுவான அரசாங்க மூலோபாய அமைப்பாக முகாமைத்துவம் செய்யும் புதிய கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தியது. இத் தோட்டங்களை வெறுமனே தேயிலைத் தோட்டங்களாக நிர்வகிக்கும் முறைமை மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவனத்தின் தலையீட்டால் மாற்றப்பட்டது. அதன்படி, தோட்டங்களின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் புதியதொரு எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய எண்ணக்கருவின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் அதாவது ரூபா. 3000 மில்லியன் பெறுமதியான வெட்டுமர வளங்களை நிர்வகித்தல், சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு சாத்தியமுள்ள இடங்களைத் தயார்செய்தல், தோட்டங்களின் கார்பன் தட்டை கணக்கிட்டு விற்பனை செய்தல் மற்றும் நஷ்டமடையும் தோட்டங்களில் பயிர்களை பல்வகைப்படுத்துதல் போன்ற பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2007 ஆம் ஆண்டு நக்கிள்ஸ் உலக மரபுரிமைத் தளமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களின் பெரும் நிலப்பகுதி உலக மரபுரிமைத் தளத்தில் உள்வாங்கப்பட்டது. அதற்கமைய, வணிக ரீதியான பயிர்களான, ஏலக்காய் செய்கைக்கான நிலத்தினைப் போன்றே தேயிலைச் செய்கையின் நிலங்களும் நக்கிள்ஸ் வன ஒதுக்கத்துடன் சேர்க்கப்பட்டன. எவ்வாறாயினும், வன ஒதுக்கத்துடன் இணைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு மற்றும் எல்லைகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக தோட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வலயத்தின் முகாமைத்துவமும் சிக்கலாக மாறியது.

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிகவும் கவர்ச்சிகரமான இடங்கள்.

கெலேபொக்கை 360^0 வியுவ் பொய்ன்ட்





கெலேபொக்கை 360^0 வியுவ் பொய்ன்ட் (1,175 மீற்றர் உயரம்) பொழுதுபோக்கு நோக்கில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ள ஒரு இடமாகும். இந்த மலை உச்சியானது மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் எல்லைகளில் அமைந்திருப்பதுடன் இது ஹத்லே சிறிய உலக முடிவு மற்றும் ஹுன்னஸ்கிரிய மலை உருவாகும் ஒரே மலை உச்சிகளை பகிர்ந்துகொள்கின்றது. மலைத்தொடர் வடக்கு நோக்கி நீண்டு செல்வதுடன் நக்கிள்ஸ் இன் மேற்கு அத்திவாரத்துடன் இணைகின்றது. தெளிவாக இருக்கும் ஒரு நாளில் மத்திய மலை நாடு, கண்டி நகரம், செம்புவத்தை வாவி மற்றும் நக்கிள்ஸ் மலைக் குன்றுகள் என்பவற்றை பார்த்து இரசிக்க முடியும்.

இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கி முகாம் அமைக்கும் ஒரு தளமும் இரண்டு ஓய்வு பங்களாக்களும் உள்ளன. சமதளமாக இருக்கும் மலை உச்சியின் நடு அரைப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட இந்து ஆலயம் ஒன்றும் குச்சிகளைக் கொண்டு வேயப்பட்டிருக்கும் குடிசையும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். பகல் நேரத்தில் பிரதேசத்தினைச் சூழ பனிமூட்டம் இருப்பதால் தடைகளின்றி காட்சிகளைக் கண்டு களிப்பதற்கு காலை நேரத்தில் சஞ்சரிப்பது மிகவும் சிறந்தது.

பர்ன்ஸய்ட்





கண்டியில் அமைந்திருக்கும் பர்ன்ஸய்ட் பங்களா ரங்கள பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் சீ ப்ளேன் விமான நிலையத்திலிருந்து 13 மைல் தொலைவில் அமைந்துள்ள கவர்ச்சிகரமான இடமாகும்.

தன்கந்த வாவி - மிட்லன்ட்ஸ்





கவர்ச்சிகரமான தன்கந்தை வாவி மத்திய மாகாணத்தின் ஒரு நீர்த்தேக்கம் ஆகும். அதன் உயரம் 957 மீற்றர் ஆகும். இந்த வாவி கிரிமெடியாரன்த மற்றும் தங்கந்தவத்தைக்கு அருகே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிட்லன்ட் தோட்டத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

ஹுன்னஸ்கிரிய





கண்டி நகரத்திலிருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் மாத்தளை மாவட்டத்தின் அல்கட்டுவை கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரும் ஹுன்னஸ் போல்ஸ் நீர்வீழ்ச்சியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்துள்ள கவர்ச்சிகரமான இடங்களாகும். இந் நீர்வீழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டத்தினால் தேவையான வசதிகள் செய்துள்ளன.

வெவதென்னை – வுட்சய்ட்



வெவதென்னை முகாம் அமைக்கும் திடல், கண்டி நகரத்திலிருந்து 37.9 கிலோ மீற்றர் தொலைவில் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் மத்திய கண்டிப் பிரதேசத்திலுள்ள வுட்சய்ட் அரச தோட்டத்தில் அமைந்துள்ளது. இந்த அழகான முகாம் திடலுக்குச் செல்வது ஓரளவு கஷ்டமாக இருந்தாலும் அது பல இனிமையான அநுபவங்கள் நிறைந்த பயணமாகும். கண்டியிலிருந்து வெவதென்னை நோக்கி பயணிக்கும் வழியில் இருக்கும் உலகப் பிரபலமான விக்டோரியா நீர்த்தேக்கமும் மனதைக் கவரும் காட்சியாகும்.

இணைப்புத் தகவல்கள்

இணைப்பு உத்தியோகத்தர்	**: திரு. அமில ஜயவர்தன**
இணைப்பு மத்திய நிலையம்	**: பிராந்திய அலுவலகம்**
முகவரி	: பிராந்திய அலுவலகம், கல்பிஹில்லை, பன்விலை.
தொலைபேசி இலக்கம்	: 081-5634903
தொலைநகல் இலக்கம்	: 081-5634902
மின்னஞ்சல் முகவரி	: regionalofficegp@gmail.com

2020 ஆம் ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களின் நிலைமை.

2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றுள் 14 தோட்டங்கள் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் வலஹந்துவைத் தோட்டம் காலி மாவட்டத்திலும் அமைந்துள்ளன.

அட்டவணை 1 - தோட்டங்களின் விபரம்

இல	தோட்டத்தின் பெயர்	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	மொத்த நிலப்பரப்பு (ஹெக்டயர்)
1	அலகொல்லை	கண்டி	பன்விலை	819.86
2	கொடகங்கை	கண்டி	மெததும்பரை	1,059.81
3	கல்பிஹில்லை	கண்டி	பன்விலை /குண்டசாலை	761.24
4	கோமரை	கண்டி	பன்விலை	731.13
5	பாகலை	கண்டி	பன்விலை	449.49
6	ஹெயார்பார்க்	கண்டி	உடுகும்புரை	976.75
7	ஹுன்னஸ்கிரிய	மாத்தளை	உக்குவலை	739.72
8	கெலேபொக்கை	கண்டி	பன்விலை	1,370.36
9	குடாஓய	மாத்தளை	ரத்தொட்டை	176.00
10	மிட்லன்ட்	மாத்தளை	ரத்தொட்டை	1,221.31
11	நிகோலோய	மாத்தளை	ரத்தொட்டை	332.41
12	ஓபல்கலை	மாத்தளை	மெததும்பரை	723.10
13	ரங்களை	கண்டி	மெததும்பரை	630.60
14	வைதலாவை	கண்டி	மெததும்பரை	551.05
15	விஹாரகலை	பதுளை	ஹல்துமுல்லை	41.90
16	வுட்சய்ட்	கண்டி	மெததும்பரை	472.75
17	வலஹந்துவை	காலி	அக்மீமனை	95.22
	மொத்தம்			**11,152.70**

அட்டவணை 02 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்துள்ள தோட்டங்கள்.

	தோட்டம்	கொள்வனவு செய்த திகதி	நிலப்பரப்பு (ஹெ)
1	ஹபுகஸ்தன்னை	1/1/1972	1,709.31
2	அலுபொலை	1/1/1972	1,228.74
3	கலபொடை	1/1/1972	376.92
4	ஹல்கொல்லை	1/1/1972	1,006.88
5	ராஸ்ஸகலை	1/1/1972	776.49
6	விகிலிய	1/1/1972	805.67
7	திஸ்பனே	1/1/1972	384.62
8	மெதகந்தை	1/1/1972	676.11
9	சோகமை	1/1/1972	476.11
10	மதுரட்டை	15/05/1975	278.54
11	மடுவலை	1/6/1973	659.51
12	அய்ஸ்லெப்	26/11/1973	382.59
13	வெதமுல்லை	1/9/1973	484.62
14	இறம்பொடை	1/9/1973	765.18
15	கிரேவிவெளி	1/1/1974	320.24
16	தென் மெததும்பரை	1/2/1974	505.26
17	கெலோலினா	1/7/1974	1,063.56
18	கல்லேபொத்த	1/7/1974	752.63
19	கெதன்ட்	1/7/1974	203.24
20	சனட்ஹெலியர்	1/7/1974	172.87
21	ரொஹுமெப்டன்	15/3/1974	100.61
22	நன்பேரியல்	11/4/1974	203.64
23	உடபொலை	27/5/1975	278.54
24	டெல்கின்	19/5/1975	1,223.38
25	எல்பிடிய	1/6/1975	785.02
26	கலஹ - சில்க் ப்ரஜக்ட்	1/7/1975	694.33
27	ஹொட்வில்	1/7/1975	412.15
28	கெம்பியன்	1/7/1975	848.99
29	எஹலியகொடை	1/8/1975	410.93
30	சபுமல்கந்தை	1/8/1975	646.96
31	தியதாவை		280.57
	மொத்தம்		**18,914.21**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அதன் மூலதனத்தைப் பயன்படுத்தி மேற்கூறிய தோட்டங்களைக் கொள்வனவு செய்துள்ளது. அந்த அனைத்து தோட்டங்களும் *1992* ஆம் ஆண்டில் தோட்டங்களைத் தனியார்மயப்படுத்தல் கொள்கையின் கீழ் பெருந்தோட்டக் கம்பனிகளின் முகாமையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆதலால், அந்த எந்த விதமான சொத்துக்களிலிருந்தும் எமது கூட்டுத்தாபனத்திற்கு எவ்விதமான இலாபமும் இல்லை.

அட்டவணை 03 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கிடைத்த காணிகள்

வர்த்தமானி இல.	திகதி	கிடைத்த விதம்	தோட்டங்களின் எண்ணிக்கை		பெயரளவு மதிப்பு
			பிராந்தி பெருந்தோட்டக் கம்பனி	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	
150/12	7/24/1981	காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு	38	0	இல்லை
181/12	2/27/1989		55	25	இல்லை
815/10	4/21/1994		122	1	123
195/6	5/31/1982		6	8	123
569/14	8/2/1989		3	0	123
571/14	8/14/1989		1	0	123
206/15	8/20/1982		0	1	123
230/12	2/2/1983		1	0	123
937/2	8/19/1996		8	0	123
157/13	4/3/1975	அரசு	5	0	123
439/18	2/6/1987		0	1	123
மொத்தம்			239	36	

மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குவினாலும் வெவ்வேறு அரச நிறுவனங்களாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு தோட்டங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைத்துள்ள தோட்டங்களின் எண்ணிக்கை 275 ஆகும்.

அட்டவணை 04 – பல்வேறு அரச நிறுவனங்களினூடாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த காணிகளின் விபரம்

தோட்டம்	கிடைத்த விதம்	கிடைத்த திகதி	நிலப்பரப்பு (ஹெ.)
ஹிக்கொடை	காணி ஆணையாளர்	1/10/1960	319.81
ரதெல்லை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	633.60
யடவத்தை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	522.67
நெலஉலை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	337.65
பல்லேகலை	காணி ஆணையாளர்	1/1/1968	1270.04
மொத்தம்			**3083.77**

மேலே குறிப்பிட்டுள்ள அரசுக்குச் சொந்தமாக இருந்த காணிகளை 1958 ஆம் ஆண்டு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்துக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் அதன் மூலதனத்தைப் பயன்படுத்தி பெருந்தோட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தோட்டங்களின் நிலப் பயன்பாடு 2020

அட்டவணை 05 – தோட்டங்களின் நிலப் பயன்பாடு

ஹெக்டயருக்கான கூற்று, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2020

தோட்டம்	தேயிலை பயிரிடப்பட்ட காணியின் பரப்பு (ஹெக்டயர்)					இறப்பர் (ஹெ.)		சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (ஹெ.)	வெட்டுமரப் பயிர்ச்செய்கை (ஹெ.)	வேறு (ஹெ)	மொத்த நிலப்பரப்பு (ஹெ.)
	தேயிலை வருமானம்		ஒப்பந்த அடிப்படையில் கொழுந்து பறிப்பதற்கு	தேயிலை நாற்று	மீள்பயிரிடல்	பழைய இறப்பர் பயிர்ச்செய்கை	இறப்பர் மீள் பயிரிடல்		எரிபொருளுக்கான வெட்டுமரம்		
	தேயிலை நாற்று	தளிர் தேயிலை	தேயிலை நாற்று								
அலகொல்லை	155.75	114.95	124.50	1.00	13.00	-	-	68.60	76.38	265.68	**819.86**
கொட்டகங்கை	264.46	34.42	141.31	0.40	3.00	-	-	60.69	24.14	531.39	**1,059.81**
கல்பிஹில்லை	33.13	165.01	3.24	2.21	7.04	-	-	15.85	70.21	464.55	**761.24**
கோமரை	96.85	116.73	136.61	-	9.00	-	-	74.80	53.30	243.84	**731.13**
பாகலை	77.78	101.80	84.66	0.42	7.00	-	-	1.00	89.62	87.21	**449.49**
ஹெயாபர்க்	164.50	-	183.50	-	-	-	-	60.00	-	568.75	**976.75**
ஹுன்னஸ்கிரியை	153.14	37.78	34.21	0.60	2.00	-	-	74.77	7.00	430.22	**739.72**
கெலேபொக்கை	113.22	288.74	272.73	1.21	5.00	-	-	211.98	350.46	127.02	**1,370.36**
குடாஓய	36.00	-	-	-	-			140.00			**176.00**
மிட்லன்ட்	104.42	117.41	57.17	1.34	10.00	-	-	271.79	219.84	439.34	**1,221.31**
நிகோலோய		47.14	2.43	-		-	-	58.89	18.00	205.95	**332.41**
ஓபல்கலை	36.10	48.90	13.00	1.80	-	53.00	-	170.50	68.00	331.80	**723.10**
ரங்களை	124.10	85.44	112.70	2.00	5.00	-	-	11.50	152.52	137.34	**630.60**
வைதலாவை	34.00	39.20	74.69	-	-	-	-	62.06	47.39	293.71	**551.05**
விஹாரகலை	0.81	41.09									**41.90**
வலஹந்துவை	0.30	-	-	-	1.60	62.56	2.00	7.40		21.36	**95.22**
வுட்சய்ட்	-		195.31	0.20	19.33	-	-	43.69	30.77	183.45	**472.75**
மொத்தம்	**1,394.56**	**1,238.61**	**1,436.06**	**11.18**	**81.97**	**115.56**	**2.00**	**1,333.52**	**1,207.63**	**4,331.61**	**11,152.70**

தோட்டங்களின் பிரதான வருமானப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சல்களை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல்.

அட்டவணை 06 - தோட்டங்களின் பிரதான வருமானப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சல்களை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல்.

தோட்டம்	தேயிலை - பச்சைக் கொழுந்து (கிலோ கிராம்)									
	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
அலகொல்லை	1,077,059	952,633	880,458	769,499	787,217	705,364	759,745	734,923	617,413	755,844
கொடகங்கை	312,648	370,453	258,308	194,663	216,383	170,940	205,002	293,452	253,262	303,817
கல்பில்லை	971,105	879,545	880,379	665,646	690,856	675,717	775,779	790,235	681,020	833,568
கோமரை	647,939	566,360	574,639	486,583	547,711	667,328	764,337	743,270	706,865	849,230
பாகலை	985,357	843,579	774,142	682,702	682,097	429,360	482,980	547,672	412,474	578,153
ஹொபார்க்	455,650	399,609	463,485	375,497	298,837	229,330	252,911	298,088	252,867	362,826
ஹுன்னஸ்கிரிய	370,875		520,190	431,449	578,320	515,374	528,226	496,959	487,032	544,822
கெலேபொக்கை	2,153,655	2,006,814	1,762,933	1,331,815	1,608,769	1,373,408	1,382,689	1,468,809	1,435,669	1,780,625
குடாஓய	-	-	-	-	-	-	-	-	2,581	18,791
மிட்லண்ட்	998,500	669,558	730,241	395,511	586,442	438,614	503,015	586,207	494,211	520,382
நிகோலோய****				458	1,122	1,550	2,979	159,993	138,379	191,445
ஓபல்கலை	369,534	369,158	430,719	297,287	301,755	247,751	305,494	354,023	263,246	399,514
ரங்களை	948,550	739,211	658,274	521,922	678,266	604,332	492,346	606,262	579,595	662,545
வைதலாவை***								228,362	157,356	211,812
விஹாரகலை	-	-	-	-	-	-	-	-	9,267	20,116
வுட்லய்ட்**								22,153	44,463	68,485
மொத்தம்	**9,290,872**	**7,796,920**	**7,933,768**	**6,153,032**	**6,977,775**	**6,059,068**	**6,455,503**	**7,330,409**	**6,535,701**	**8,101,974**

தோட்டம்	*இறப்பர் - ஒட்டுப்பால் (கிலோ கிராம்)									
	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
வலஹந்துவை	49,332	39,218	44,861	40,140	36,809	37,522	42,470	33,395	28,122	29,660


**** நிகோலோய அரசத் தோட்டம் 2010 - 2013 முதல் மிட்லன்டஸ் உடன் கூட்டிணைக்கப்பட்டது.

*** வைதலாவை அரச தோட்டம் 2008 - 2017 முதல் மருடி கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்றது.


** 2018 ஆம் ஆண்டுக்கு முன் வுட்சய்ட் தோட்டம் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டது.

* இறப்பர் பாலின் DRC பெறுமானம் கிலோ கிராமுக்கு மாற்றப்பட்டுள்ளது. (Dry Rubber Content)

உரு 03 – தேயிலை விளைச்சலை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்



உரு 04 – இறப்பர் விளைச்சலை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்




தோட்டங்களின் ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்பிலிருந்து கிடைத்த பச்சைக்கொழுந்து மற்றும் இறப்பர் விளைச்சல் – 2010 – 2020


அட்டவணை 07 - தோட்டங்களின் ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்பிலிருந்து கிடைத்த பச்சைக்கொழுந்து மற்றும் இறப்பர் விளைச்சல் – 2009 – 2019

தோட்டம்	பச்சைக் கொழுந்து - ஹெக்டயருக்கு கிலோ கிராம்.										
	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
அலகொல்லை	2,828	3,070	2,856	2,660	2,321	2,293	2,121	2,479	2,367	2,032	2,513
கொடகங்கை	1,523	1,353	1,316	1,400	1,060	860	819	935	930	809	1,028
கல்பிஹில்லை	4,228	5,088	4,009	3,819	2,926	2,981	2,916	3,656	3,901	3,362	4,183
கோமரை	2,958	3,772	3,474	3,363	3,121	3,363	3,084	3,451	3,139	3,027	3,677
பாகலை	2,781	2,851	3,595	3,223	2,772	2,716	2,447	2,781	2,883	2,241	3,141
ஹெயார்பார்க்	1,807	1,633	1,274	1,633	1,274	995	674	795	1,260	1,102	1,491
ஹுன்னஸ்கிரிை	3,242	3,474	3,321	2,828	2,181	2,744	2,749	2,823	2,599	2,548	2,844
கெலேபொக்கை	2,791	3,795	3,479	3,079	2,353	2,828	2,888	2,777	2,651	2,553	3,617
குடா ஓய	-	-	-	-	-	-	-	-	-	70	488
மிட்லன்ட்	3,088	2,851	2,498	2,460	2,084	2,167	1,995	2,293	2,585	2,204	2,334
நிகோலோய	-	-	-		1,772	1,702	2,544	2,884	3,218	2,860	3,715
ஓபல்கலை	3,791	3,228	3,619	3,972	2,944	2,814	2,309	2,940	4,013	2,999	4,317
ரங்களை	3,456	367	3,772	3,256	2,553	3,247	2,916	2,316	2,581	2,660	2,723
வைதலாவை			-	-	-	-	-	-	2,688	2,093	2,894
விஹாரகலை	-	-	-	-	-	-	-	-	-	223	480
மொத்தம்	**3,110**	**3,140**	**3,042**	**2,828**	**2,298**	**2,433**	**2,386**	**2,474**	**2,537**	**2,282**	**2,768**
தோட்டம்	* இறப்பர் ஒட்டுப்பால் - ஒரு ஹெக்டயருக்கு கிலோகிராம்										
	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
வலஹந்துவை	776	763	603	690	618	566	577	649	510	430	474

உரு 05 – ஒரு ஹெக்டயருக்கான பச்சைத் தேயிலைக் கொழுந்து விளைச்சல்



உரு 06 – ஹெக்டயருக்கான ஒட்டுப்பால் விளைச்சல் 2011 - 2020



மேற்கு மத்திய பிராந்தியத்தில் 2020 ஆண்டின் வருடாந்த மழை வீழ்ச்சி

அட்டவணை 08 - மேற்கு மத்திய பிராந்தியத்தில் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த மழை வீழ்ச்சி.

வருடாந்த மழைவீழ்ச்சி - 2020	
தோட்டம்	**மழைவீழ்ச்சி (மி.மீ)**
அலகொல்லை	1765
கொடகங்கை	2717
கல்பிஹில்லை	2225
கோமரை	1917
பாகலை	2133
ஹெயார்பார்க்	2284
ஹுன்னஸ்கிரியை	1038
கெலேபொக்கை	2822
குடாஓய	1681
மிட்லன்ட்	3110
நிகோலோய	3555
ஓப்கலை	1900
ரங்களை	6057
வைத்தலாவை	1690

மேற்கூறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு முழுவதும் மேற்கு மத்திய வலயத்திற்கு சிறந்த மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

கடந்த 03 வருடங்களுக்கான உரப் பயன்பாடு.

அட்டவணை 09 - கடந்த மூன்று வருடங்களுக்கான உரப் பயன்பாடு.

வருடம்	பயன்படுத்தப்பட்ட உரம்	உரத்திற்கான செலவு (ரூ.)	பயன்படுத்தப்பட்ட களைகொல்லி (லீற்றர்/கி.கி)	களை கொல்லிக்கான செலவு (ரூ)
2018	229	7,530,941.60	3347 லீற்றர்	14,308,425.00
2019	215	4,794,652.50	3207 லீற்றர்	14,431,500.00
2020	350	8,548,750.00	5156 லீற்றர்	22,740,604.00


2020 ஆம் ஆண்டு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விற்பனை விலை 91.11 ரூபாவாக இருந்ததுடன்மேற்கு மத்திய பிராந்தியத்தில், ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விற்பனை விலை 135.09 ரூபாவாகவும் இருந்தது, இதன்படி. 2020 ஆம் ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விகிதம் மேற்கு மத்திய வலயத்தின் விற்பனை விகிதத்தினை விட 43.99 குறைந்த பெறுமதியில் பேணப்பட்டுள்ளது.

கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான உற்பத்திச் செலவு.

அட்டவணை 10 - கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு.

வருடம்	ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கான உற்பத்திச் செலவு (ரூபாய்)					
	கொழுந்து பறித்தல்	கள வேலை	உரம்	களை கொல்லி	பொதுச் செலவுகள்	மொத்தம்
2018	32.44	13.24	2.59	7.84	45.96	102.07
2019	45.34	18.34	2.15	12.34	44.19	122.36
2020	45.47	15.44	2.18	9.96	39.18	112.23

உரு 07 – கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு.



அதற்கமைய பச்சை தேயிலைக் கொழுந்து ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திச் செலவில் உரத்திற்கான செலவு மிகவும் குறைவு பெறுமதியைக் காட்டுகின்றது உற்பத்திச் செலவில் பெரும் பங்கினை வகிக்கும் கொழுந்துகள். பறித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமை செய்யாமல் உரங்களுக்கான முதலீட்டைக் கட்டுப்படுத்தியதனால் எதிர்பார்த்த விளைச்சல் குறைந்துள்ளது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின். நிர்வாக அதிகாரசபை மற்றும் முகாமைத்துவம் இந்நிலைமையை அறிந்து கொள்ள தவறியதால் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நீண்டகாலமாக நட்டமடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.


தேயிலை உற்பத்தி

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக தற்போது 10 தேயிலைத் தொழிற்சாலைகள் இருப்பதுடன், அவற்றுள் கீ.டீ.சீ தேயிலைத் தொழிற்சாலைகள் மூன்று மாத்திரமே இயங்கும் நிலையில் காணப்படுகின்றன. கெலேபொக்கை, மிட்லன்ட்ஸ் மற்றும் ரங்களை தேயிலைத் தொழிற்சாலைகள் மூலம் எமது பல தோட்டங்கள் பெறும் பச்சை கொழுந்து மூலம் முடிவுத் தேயிலை உற்பத்தி செய்யப்படுவதுடன் அவ்வுற்பத்தி நிலைமை கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது .


அட்டவணை 11 – தேயிலை உற்பத்தி

தொழிற்சாலை	பச்சைத் தேயிலைக் கொழுந்து (கி.கி)		முடிவுத் தேயிலை (கி.கி)		உற்பத்திசெய்யப்பட்ட முடிவுத் தேயிலை சதவீதமாக		உற்பத்திச் செலவு - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.		தேறிய சராசரி விற்பனை - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.	
	2019	2020	2019	2020	2019	2020	2019	2020	2019	2020
கெலேபொக்கை	1,435,669.00	1,742,062.00	308,746.00	382,930.00	22.79	21.98	710.28	655.26	362.11	453.69
மிட்லன்ட்	494,211.00	506,119.00	106,282.00	111,910.00	23.40	22.11	659.94	610.65	414.87	409.48
ரங்களை	579,595.00	642,059.00	124,644.00	142,483.00	23.22	22.19	660.02	604.41	358.71	469.82
மொத்தம்	**2,509,475.00**	**2,890,240.00**	**539,672.00**	**637,323.00**						

உரு 08 – முடிவுத் தேயிலை உற்பத்தி



உரு 09 – பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி



அட்டவணை 12 – தொழிற்சாலைகள் பற்றி விபரம்

தொழிற்சாலைகள்	அமைந்துள்ள மாவட்டம்	உற்பத்தி செய்யும் தேயிலை இனம்	பிரித்தெடுக்கை கொள்ளளவு (கி.கி)	தற்போதைய நிலை
கொடகங்கை	கண்டி	ஓதடொக்ஸ்	1290	தொழிற்படுவதில்லை
கோமரை	கண்டி	ஓதடொக்ஸ்	8000 (மொத்த கொள்ளளவு)	தொழிற்படுவதில்லை
பாகலை	கண்டி	ஓதடொக்ஸ்	1419	தொழிற்படுவதில்லை
ஹுன்னஸ்கிரிய	மாத்தளை	சீ.டீ.சீ	1720	தொழிற்படுவதில்லை
கெலேபொக்கை	கண்டி	சீ.டீ.சீ	12000(மொத்த கொள்ளளவு)	தொழிற்படுகின்றது
மிட்லன்ட்	மாத்தளை	சீ.டீ.சீ	1400	தொழிற்படுகின்றது
தன்கந்தை	மாத்தளை	ஓதடொக்ஸ்	860	தொழிற்படுவதில்லை
நிகோலோய	மாத்தளை	ஓதடொக்ஸ்	645	தொழிற்படுவதில்லை
ரங்களை	கண்டி	சீ.டீ.சீ	1500	தொழிற்படுகின்றது

எமது தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு மிகவும் உயர்வாக இருப்பதாலும், எமது உற்பத்திகளுக்கு மிகவும் குறைந்த விற்பனை விலை கிடைப்பதனாலும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நாளுக்கு நாள் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது.

அனுபவம் வாய்ந்த, பயிற்சி பெற்ற முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஊழியர் குழாத்துடன் தொழிற்படும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பச்சைக் கொழுந்துகள் மற்றும் முடிவுத் தேயிலைக்கு நடுத்தரத் தேயிலைக்கு இருக்கும் சராசரி விலையை விட குறைவான விலை இருப்பது வருந்தத்தக்கது.

மிட்லண்ட்ஸ் தொழிற்சாலை மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு CTC தேயிலைத் தொழிற்சாலையாகும் என்பதோடு கெலாபொக்கை மற்றும் ரங்களை தொழிற்சாலைகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளன.

மிட்லண்ட்ஸ் தேயிலைத் தொழிற்சாலை



கெலேபொக்கை தேயிலைத் தொழிற்சாலை




ரங்களை தேயிலைத் தொழிற்சாலை



கூட்டுத்தாபனத் தேயிலை


உள்நாட்டுச் சந்தைக்குக் கூட்டுத்தாபனத்தின் தேயிலையை வழங்குவதனூடாக கூட்டுத்தாபனத்தின் தேயிலை விலைக்கு ஏலத்தில் வழங்கப்படுகின்ற ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் தற்காலிக நிதிப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து "கூட்டுத்தாபனத் தேயிலை" ("සංස්ථා තේ") உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.



அட்டவணை 13 : கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை – அளவுரீதியான ஒப்பீடு (2018-2019)

மாதம்	தேயிலை விற்பனை (கிலோ கிராம்)		
	2018	2019	2020
ஜனவரி	2,540	2,602	2,788
பெப்ரவரி	2,080	4,636	2,675
மார்ச்	3,948	2,789	3,275
ஏப்ரல்	2,156	939	3,709
மே	3,370	2,475	2,878
ஜூன்	3,502	1,134	2,921
ஜூலை	3,379	3,270	5,587
ஆகஸ்ட	4,037	2,683	4,472
செப்டம்பர்	3,664	3,159	2,617
ஒக்டோபர்	2,507	3,043	4,859
நவம்பர	2,919	4,313	3,846
டிசம்பர்	3,494	3,032	5,750
மொத்தம்	**37,595**	**34,075**	**45,375**


உரு 10: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை – அளவுரீதியான ஒப்பீடு (2018-2019)



அட்டவணை 14: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (2018-2019)

மாதம்	கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (ரூபாய்)		
	2018	2019	2020
ஜனவரி	1,717,816	1,948,166	1,543,704
பெப்ரவரி	1,488,563	3,210,598	1,975,437
மார்ச்	2,812,307	2,117,157	1,352,505
ஏப்ரல்	1,602,651	747,593	1,492,498
மே	2,418,044	1,661,434	2,158,450
ஜூன்	2,609,889	939,405	2,249,149
ஜூலை	3,098,106	2,490,901	4,081,756
ஆகஸ்ட	3,141,932	2,080,813	3,294,264
செப்டம்பர்	2,900,447	2,261,770	2,008,403
ஒக்டோபர்	1,934,504	2,139,277	3,561,445
நவம்பர்	2,354,412	3,112,667	2,833,044
டிசம்பர்	2,877,599	2,345,364	4,267,934
மொத்தம்	**28,956,270**	**25,055,143**	**30,818,588**

உரு 11: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (2018-2019)




இறப்பர் உற்பத்தி

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு இறப்பர் தோட்டம் மட்டுமே சொந்தமாக இருந்தது. அது காலி மாவட்டத்தின் வலஹந்துவை பிரதேசத்தில் அமைந்துள்ளது. மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் பால் உற்பத்தி கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 15 – மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் உற்பத்தி

வருடம்	ஒட்டுப்பால் (கி.கி)	மொத்தச் செலவு (கி.கி)	இலாபம் / (நட்டம்) (ரூ.)	தேறிய விற்பனைப் பெறுமதி (ரூ.)	உற்பத்திச் செலவு ஒரு கிலோ கிராமுக்கு (ரூ.)	ஒரு கிலோ கிராமுக்கு இலாபம் / (நட்டம்)
2020	29,660	13,494,113.60	(5,151,942.00)	281.26	454.96	(173.70)
2019	28,122	14,686,995.72	(7,806,787.00)	300.00	522.26	(222.26)
2018	33,395	10,423,247.40	(397,747.00)	220.00	312.12	(92.12)

உரு 12 – இறப்பர் உற்பத்தி கிலோ கிராம் (2018-2020)



திறைசேரி ஏற்பாடுகள்

இவ்வருடம் கடந்த வருடங்களைப் போன்று சம்பளம் மற்றும் அன்றாடச் செலவுகளை முகாமை செய்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

அட்டவணை 16 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்ட நிதி ஏற்பாடுகள் பற்றிய சாராம்சம்

விபரம்	2016	2017	2018	2019	2020
தொழிற்பாட்டுச் செலவுகள் (தொழிலாளர் மற்றும் ஆளணி சம்பளம்)	100	130	68	222	-
நியதிக் கொடுப்பனவுகள் (ஊ.சே.நி/ ஊ.ந.நி/ பணிக்கொடைகள்)	-	134	90	-	-
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள்	-	-	-	-	-
மொத்த வரவு (ரூ.மி)	100	264	158	222	-

2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு, செலவு மதிப்பீடு மற்றும் 2020 ஆம் ஆண்டின் கணக்கறிக்கைக்கேற்ப நிதி நிலைமை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 17 – 2020 - 2019 வருடங்களுக்கான ஒப்பீட்டு ரீதியான நிதிச் செயலாற்றுகை


விபரம்	2020 மதிப்பீடு	வருடாந்த அறிக்கை - 2020	செயலாற்றுகை	2019 மதிப்பீடு	வருடாந்த அறிக்கை - 2019	செயலாற்றுகை
உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை - உற்பத்திச் செலவு (C.O.P.)	490.68	492.88	100.45	460.55	549.50	119.31
- தேறிய விற்பனை சராசரி (N.S.A	452.48	432.14	95.51	436.12	373.70	85.69
இறப்பர் - உற்பத்திச் செலவு (C.O.P.)	312.85	428.06	136.83	287.72	429.52	149.28
- தேறிய விற்பனை சராசரி (N.S.A	300.00	277.73	92.58	300.00	246.61	82.20
மதிப்பிடப்பட்ட உற்பத்தி - தேயிலை (கி.கி)	1,980,891	1,728,728	87.27	2,057,042.00	1,409,509.00	68.52
மதிப்பிடப்பட்ட உற்பத்தி - இறப்பர் (கி.கி)	43,500	29,660	68.18	45,500.00	28,122.00	61.81
வருமானம்	ரூ	ரூ	ரூ	ரூ	ரூ	ரூ
உற்பத்தி செய்த தேயிலை மற்றும் தேயிலைக் கொழுந்த	896,312,171	758,598,254	84.64	897,108,237	526,735,834	58.71
இறப்பர் - ஒட்டுப்பால்	13,050,000	8,237,326	63.12	13,650,000	6,935,151	50.81
மொத்த வருமானம்	**909,362,170.68**	**766,835,579.56**	**84.33**	**910,758,237**	**533,670,985**	**58.60**
கழி : உற்பத்திச் செலவு						
உற்பத்தி செய்த தேயிலை மற்றும் தேயிலைக் கொழுந்து	971,988,808	852,056,592	87.66	947,367,672	774,529,082	81.76
இறப்பர்	13,608,793	12,696,168	93.29	13,091,117	12,078,825	92.27
மொத்த உற்பத்திச் செலவு	**985,597,601**	**864,752,760**	**87.74**	**960,458,789**	**786,607,907**	**81.90**
தேறிய இலாபம் /(நட்டம்) - தோட்டம்	**(76,235,430)**	**(97,917,181)**	**128.44**	**(49,700,551)**	**(252,936,922)**	**508.92**
கூட்டு : ஏனைய வருமானங்கள்						
ஏனைய வருமானங்கள் - தோட்டம்	447,155,724	108,706,579	24.31	432,961,589	52,160,715	12.05
ஏனைய வருமானங்கள் - தலைமைக் காரியாலய	59,930,000	49,771,702	83.05	55,630,000	57,076,072	102.60
மொத்த ஏனைய வருமானங்கள் - தோட்டம் மற்றும் தலைமைக் காரியாலயம்	**507,085,724**	**158,478,281**	**31.25**	**488,891,038**	**109,236,787**	**22.36**
மொத்த வருமானம்	**430,850,294**	**60,561,100**	**14.06**	**438,891,038**	**(143,700,135)**	**(32.74)**
கழி - செலவுகள்						
நிர்வாகச் செலவுகள் - தோட்டம்	88,602,646	81,860,486	92.39	62,536,441	73,625,149	117.73
-தலைமைக் காரியாலய	38,905,198	40,726,247	104.68	39,938,603	39,371,623	98.58
தனிநபர் செலவுகள் - தலைமைக் காரியாலயம்	60,421,500	58,338,254	96.55	55,783,280	52,477,079	94.07
நிதிக் கட்டணங்கள் - தோட்டம்	7,949,744	5,597,184	70.41	7,301,793	5,049,882	69.16
-தலைமைக் காரியாலயம்	23,220,000	23,666,011	101.92	12,200,000	15,660,522	128.36
மொத்தச் செலவுகள்	**219,099,087**	**210,188,182**	**95.93**	**177,760,116**	**186,184,255**	**104.74**
இலாபம்/(நட்டம்) - தோட்டம் மற்றும் தலைமைக் காரியாலயம்	**211,751,207**	**(149,627,081)**	**(70.66)**	**261,130,922**	**(329,884,390)**	**(126.33)**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கடந்த 05 வருட கால இலாபம்/ நட்டம்.

அட்டவணை 18 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கடந்த 05 வருடங்களின் இலாபம்/ நட்டம்.

ஆண்டு	இலாபம் / நட்டம்
2015	(222,236,596)
2016	(150,916,820)
2017	(94,932,600)
2018	(147,798,507)
2019	(329,884,391)
2020	(149,627,081)

உரு 13 – கடந்த 5 வருடங்களின் இலாபம் மற்றும் நட்டம் தொடர்பாக ஒப்பீட்டு நோக்கு



இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மனித வளங்கள்

2020 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை மற்றும் உற்பத்திப் பணியாளர்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 19 – அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மனித வளங்கள்

தோட்டம்	தோட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை	உதவித் தோட்ட அதிகாரிகளின் எண்.	ஆளணி		தொழிலாளர்கள்		மொத்தம்
			நிரந்தரம்	ஒப்பந்தம்	நிரந்தரம்	அமைய	
அலகொல்லை	1	2	13	.	277	.	293
கொடகங்கை	1	1	13	.	197	.	212
கல்பிஹில்லை	1	2	19	.	191	8	221
கோமரை	1	2	17	2	246	4	272
பாகலை	1	1	11	.	206	-	219
ஹெயார்பார்க்	1	1	11	1	143	2	159
ஹுன்னஸ்கிரிய	1	2	16	-	211	5	235
கெலேபொக்கை	1	4	34	2	731	53	825
மிட்லன்ட்	1	2	24	1	296	13	337
நிகோலோய	1	-	6	-	70	-	77
ஓபல்கலை	1	2	10	1	81	-	95
ரங்களை	1	1	22	1	195	55	275
வலஹந்துவை	1	-	3	1	35	17	57
வைதலாவை	1	-	3	-	66	42	112
வுட்சய்ட	1	-	2	1	30	-	34
பிரதான காரியாலய் மற்றும் பிராந்திய காரியாலயம்	-	-	58	2	3	-	63
மொத்தம்	**15**	**20**	**262**	**12**	**2978**	**199**	**3486**

2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது தலைமைக் காரியாலயத்திலிருந்து சம்பளம் பெற்ற தலைமை மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ஆளணி எண்ணிக்கை 63 ஆக இருந்ததோடு, 2020 இலும் அதே தொகையினரே காணப்பட்டனர். 2019 இல் இவ் ஆளணிக்கு சம்பளம் வழங்கவென ரூபா. 46.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் 2020 இல் ரூபா. 48.1 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 இல் ரூபா. 1.82 மில்லியன் அதாவது 4% இனால் அதிகரித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது தோட்ட அதிகாரிகள் மற்றும் உதவித் தோட்ட அதிகாரிகள் உள்ளடங்களாக மொத்த ஆளணி மற்றும் வெளிக்கள ஆளணியினரின் எண்ணிக்கை 249 ஆக இருந்ததுடன், 2020 ஆம் ஆண்டிலும் அவ் எண்ணிக்கை மாறாதிருந்தது. 2019 இல் இவ் ஆளணியினருக்கு சம்பளம் வழங்குவதற்காக ரூபா. 103.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் 2020 இல் ரூபா. 114.72 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டம்.

மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தினுள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 10 நடாத்தப்பட்டுள்ளதோடு 02 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 19 – பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

இல.	கூட்டத்தின் பெயர்	கூட்டத் திகதி	கூட்ட இல.
1	பணிப்பாளர் சபைக் கூட்டம்	2020.02.12	1
		2020.04.30	2
		2020.05.29	3
		2020.06.25	4
		2020.07.21	5
		2020.08.27	6
		2020.09.24	7
		2020.10.28	8
		2020.12.01	9
		2020.12.23	10
2	கணக்காய்வுக் குழுக் கூட்டம்	2020.06.12	1
		2020.07.09	2

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்குக்கும் அரச கணக்காய்வாளர் அதிபதி பாதகமான கருத்தையே முன்வைத்துள்ளார். இக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கு நீண்டகாலமாக பாதகமான கருத்தே இருந்துள்ளது. அதனை இவ் வருடமும் சரிப்படுத்த முடியவில்லை.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்			
நிதியியல் நிலைமைக் கூற்று			
இலங்கை ரூபாவில்			
டிசம்பர் 31 இலுள்ளவாறு	**குறிப்பு**	**2020**	**2019**
சொத்துக்கள்			
நடைமுறை அல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	8	756,246,749	752,391,710
உயிரியல் சொத்துக்கள்	9	3,507,753,636	3,483,783,882
முதலீட்டு ஆதனம்	10	1,611,520,641	1,611,520,641
நிலையான வைப்புக்கள்		9,175,806	8,863,799
பிற்போடப்பட்ட சொத்துக்கள்		781,064	781,064
மொத்தம் - நடைமுறை அல்லா சொத்துக்கள்		**5,885,477,895**	**5,857,341,096**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	11	74,595,535	62,502,640
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை	12	184,025,544	175,209,745
காசும் காசுக்கு சமமானவையும்	13	45,886,973	37,713,613
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**304,508,052**	**275,425,998**
மொத்தச் சொத்துக்கள்		**6,189,985,947**	**6,132,767,094**
பங்குரிமை மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
பங்களிப்பு மூலதனம்	14	5,879,852,850	5,879,852,850
பிடித்து வைத்த வருவாய்கள்		(1,725,362,785)	(1,570,849,043)
மொத்தப் பங்குரிமை		**4,154,490,065**	**4,309,003,807**
நடைமுறை அல்லா பொறுப்புக்கள்			
ஊழியர் நலன் கடப்பாடுகள்	15	469,291,620	417,639,183
மொத்த நடைமுறை அல்லா பொறுப்புக்கள்		**469,291,620**	**417,639,183**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வர்த்தகம் மற்றும் செலுத்தல்கள்	16	1,363,998,504	1,318,555,797
வங்கிக் கடன்	16.1	100,000,000	-
வங்கி மேலதிகப்பற்று		102,205,759	87,568,307
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**1,566,204,263**	**1,406,124,104**
மொத்தப் பொறுப்புக்கள்		**2,035,495,883**	**1,823,763,287**
மொத்தப் பங்குரிமை மற்றும் பொறுப்புக்கள்		**6,189,985,947**	**6,132,767,094**
5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் நிதிக்கூற்றின் முக்கிய பகுதிகளாகும்.			
இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கேற்ப இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.			
திரு. எஸ்.ஐ.எம் ஹுஸன்		**திரு. ஆர்.ஜீ.எச்.எஸ் குணதிலக**	
பிரதிப் பொது முகாமையாளர் - நிதி		*கணக்காளர்*	
இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்புக்கு பணிப்பாளர்கள் சபையே பொறுப்பு. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை சார்பாக கீழே பெயர் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் அங்கீகரித்து ஒப்பமிட்டனர்.			
திரு. சிரிமால் விஜேசேகர	**திரு. எஸ்.எம்.சீ.எஸ் சிரிவர்தன**	**திரு. டி.ஆர்.எஸ் சேனாரத்ன**	
தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி	சபை அங்கத்தவர்	சபை அங்கத்தவர்	
2021, பெப்ரவரி, 22 - கொழும்பு			

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

வருமானக் கூற்று

இலங்கை ரூபாவில்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2020	2019
வருமானம்	17	**766,835,580**	**535,933,037**
விற்பனைக் கிரயம்		864,752,760	(786,607,907)
மொத்த இலாபம் / (நட்டம்)		**(97,917,181)**	**(250,674,870)**
ஏனைய வருமானம்	18	158,478,281	106,974,735
நிர்வாகச் செலவினங்கள்	19	(180,887,340)	(165,473,851)
தொழிற்படு மூலதனம் / (நட்டம்)		**(120,326,240)**	**(309,173,987)**
நிதிச் செலவினங்கள்	20	(29,300,841)	(20,710,404)
வருடத்துக்கான இலாபம் / (நட்டம்)		**(149,627,081)**	**(329,884,391)**

5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

உரிமை மூலதன மாற்றற்கூற்று **ரூபாவில்.**

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கானது

	மூலதனம்	காணி பகிர்ந்தளிப்பு	திரட்டிய இலாபம்/ நட்டம்	மொத்தம்
	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.
2019 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	3,437,250,925	2,220,601,926	(1,067,273,122)	4,590,579,729
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற கொடைகள்	222,000,000			222,000,000
வருடத்துக்கான நட்டம்			(329,884,391)	(329,884,391)
முந்திய ஆண்டின் சீராக்கல்கள் (குறிப்பு 26)			(173,691,530)	(173,691,530)
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**3,659,250,925**	**2,220,601,926**	**(1,570,849,043)**	**4,309,003,808**
2019 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	3,659,250,925	2,220,601,926	(1,570,849,043)	4,309,003,808
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற கொடைகள்	-	-	-	-
வருடத்துக்கான நட்டம்			(149,627,081)	(149,627,081)
முந்திய ஆண்டின் சீராக்கல்கள் (குறிப்பு 26)			(4,886,661)	(4,886,661)
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**3,659,250,925**	**2,220,601,926**	**(1,725,362,785)**	**4,154,490,066**

5 தொடக்கம் 19 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் நிதிக்கூற்றின் முக்கிய பகுதிகளாகும்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

காசுப் பாய்ச்சற் கூற்று

இலங்கை ரூபாவில்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கானது	குறிப்பு	2020	2019
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
வரியிடலுக்கு முந்திய தேறிய இலாபம் / (நட்டம்)		**(149,627,081)**	**(329,884,391)**
சீராக்கல்கள்			
உயிரியல் சொத்துக்களின் தேய்மானம்	9.2	4,019,863	3,910,779
சொத்துக்களின் தேய்மானம்	8	8,667,581	8,804,754
நிதிச் செலவினம்	20	27,989,617	19,110,404
பணிக்கொடைச் செலவினம்	15	30,226,545	33,828,923
முந்திய ஆண்டின் சீராக்கல்கள்	25	(4,886,661)	(173,691,530)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான இலாபம்		**(83,610,136)**	**(437,921,061)**
தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்			
இருப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		(12,092,894)	(14,261,485)
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறை		(8,815,799)	(59,658,502)
நடைமுறைப் பொறுப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		172,413,700	286,080,832
தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு		**151,505,007**	**212,160,845**
வர்த்தகமும் ஏனைய பெறத்தக்கவையும்			
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(7,145,102)	(14,384,929)
செலுத்தப்பட்ட நிதிக்கிரயம்		(26,389,617)	(19,110,404)
கிடைக்கப்பெற்ற திறைசேரிக் கொடைகள்		-	222,000,000
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு		**(33,534,719)**	**188,504,667**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான சேர்ப்பனவுகள்	8	(12,522,619)	(4,990,197)
உயிரியல் சொத்துக்களுக்கான சேர்ப்பனவுகள்	9.2	(27,989,617)	(20,841,044)
நிலையான வைப்புக்களில் முதலீடு		(312,007)	(331,022)
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		**(40,824,243)**	**(26,162,263)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் அதிகரிப்பு / (குறைவு)		**(6,464,092)**	**(63,417,812)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் நகர்வு			
வருடத்தின் தொடக்கத்தில்		(49,854,694)	13,563,118
வருடத்துக்கான (அதிகரிப்பு) / குறைவு		(6,464,092)	(63,417,812)
வருடத்தின் முடிவில் காசு மற்றும் காசுக்கு சமமானவையும்		**(56,318,786)**	**(49,854,694)**

1. கூட்டுத்தாபனத்தின் தகவல்கள்

பொது

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம், 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கையில் அமையப்பெற்றுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். அது இல.21, மீரானிய வீதி, கொழும்பு-12 இல் அமைந்துள்ள அரசாங்க கூட்டுத்தாபனமாகும்.

கூட்டுத்தபானம் டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைகின்ற 12 மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் குறித்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படும்.

பிரதான நடவடிக்கைகள்

தேயிலை உற்பத்தி, ஏலத்தினூடாக தேயிலையை சந்தைப்படுத்துதல், இறப்பர் பால் மற்றும் சிறிய அல்லது ஏற்றுமதிப் பயிர்களை (கராம்பு, மிளகு ஏலக்காய், கறுவா போன்றன) விற்பனைசெய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வர்த்தக நோக்கிலான மரங்களை நடுதலும் விற்பனை செய்தலும்.

2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படைகள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிட்டுள்ள 2020 ஆம் ஆண்டின் இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ள இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சீர்மதிப்பு பெறுமதியில் இருக்கின்ற உயிரியல் சொத்துக்களை விட வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

3. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

3.1.1 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏதேனும் இருப்பின் அவை திரண்ட பெறுமானத் தேய்வின் தேறிய கிரயம் மற்றும் திரண்ட மதிப்புக்குன்றுதல் இழப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய கிரயமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பகுதியை மாற்றீடு செய்யும் கிரயத்தையும் அங்கீகார தகுதிவிதிகளை பூர்த்திசெய்வதாயின் நீண்டகால கட்டுமான செயற்றிட்டங்களுக்கான படுகடன் செலவுகளையும் உள்ளடக்குகின்றது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகங்களை காலத்துக்காலம் மாற்றீடுசெய்ய வேண்டிய தேவையேற்படின் கூட்டுத்தாபனம் மாற்றீடு செய்யப்பட்ட பாகங்களை அங்கீகரிப்பதில்லை என்பதுடன் புதிய பாகத்தை

அதன் பயனுள்ள இருப்புக்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் அங்கீகரிக்கும். அவ்வாறே, அங்கீகரித்தல் தகுதிவிதிகள் திருப்திகரமானவையாக இருந்தால் பாரியளவிலான பரிசோதனையின் போது அதன் கிரயங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மாற்றீடு செய்தல் தொகையாக அங்கீகரிக்கப்படும். ஏனைய அனைத்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகள் உறப்பட்ட செலவுகள் என வருமானக்கூற்றில் தெரிவிக்கப்படும்.

3.1.3 பெறுமானத்தேய்வு

வருடத்தில் கொள்வனவுசெய்து அகற்றப்பட்ட ஆதனம், பொறிதொகுதி மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து அகற்றப்பட்ட திகதி வரை மேற்கொள்ளப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள இருப்பு காலங்கள் கீழ்வருமாறு:

விடயம்	பயன்மிகு இருப்புக் காலம்	சதவீதம்
கட்டிடம்	20 வருடங்கள்	5%
மோட்டார் வாகனம்	4 வருடங்கள்	25%
தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	8 வருடங்கள்	12.5%
அலுவலக உபகரணங்கள்	8 வருடங்கள்	12.5%
இயந்திரம்	8 வருடங்கள்	12.5%
கணினி மற்றும் அச்சு உபகரணங்கள்	3 வருடங்கள்	33.33%

3.1.4 உயிரியல் சொத்துக்கள்

உயிரியில் சொத்துக்கள் உயிர் வாழ்கின்ற ஒரு மிருகம் மற்றும் தாவரத்துடன் தொடர்புபடுகின்றது. இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் உறுப்புரை 41 க்கேற்ப உயிரியில் சொத்துக்களுக்கு ஒரு சில சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. அவையாவன: (அ) மாறுவதற்கான செயல்வல்லுமை. (உயிரியல் நிலைமாற்றத்துக்கான செயல்வல்லுமை) (ஆ) மாற்றத்தை நிர்வகித்தல் (முகாமையானது இடம்பெற வேண்டிய செயன்முறைக்கு தேவையான நிலைகளை மேம்படுத்துவதன் மூலம் உயிரியல் நிலைமாற்றத்தினை வசதிப்படுத்தும். அத்தகைய முகாமையானது விவசாய நடவடிக்கையை ஏனைய நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுத்திக்காட்டும். உதாரணமாக: நிர்வகிக்கப்படாத மூலங்களிலிருந்து அறுவடை செய்தல்.) மற்றும் (இ) மாற்றத்தினை அளவிடுதல் (உயிரியல் நிலைமாற்றத்தினால் அல்லது அறுவடையினால் நிகழும் மாற்றும் அளவிடப்படுவதுடன் வழமையான முகாமை தொழிற்பாடாக கண்காணிக்கப்படும்).

உயிரியல் சொத்துக்கள் இரண்டு வகைப்படும். அவையாவன: தாங்கி உயிரியல் சொத்துக்கள் (bearer biological assets) மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் (consumable biological assets) என இரு வகைப்படும்.

3.1.4.1 *தாங்கி உயிரியல் சொத்துக்கள்* (Bearer Biological Assets)

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் தவிர்ந்தவை தாங்கி உயிரியல் சொத்துக்களாகும். அவை கூட்டுத்தாபனத்திற்குரிய தேயிலை புதர்கள், இறப்பர் மரங்கள் போன்ற பாரியளவிலான பெருந்தோட்டங்களையும் ஏதாவது நிலப் பயிர்களையும் உள்ளடக்கும். இவற்றுக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தெரிவுக்கேற்ப கிரயத்திலிருந்து ஏதாவது திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதாவது திரண்ட மதிப்புக்குன்றுதல் இழப்புக்களை கழித்து பெறுமான தேய்விடப்படும்.

தாங்கி உயிரியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள இருப்பு காலம் வருமாறு:

தென்னை	25 வருடங்கள்	கொகோ	20 வருடங்கள்
மிளகு	15 வருடங்கள்	கருவா	25 வருடங்கள்
இறப்பர்	35 வருடங்கள்	சாதிக்காய்	30 வருடங்கள்
கராம்பு	50 வருடங்கள்	மீள் பயிரிடல்	25 வருடங்கள்
கோப்பி	25 வருடங்கள்	இஞ்சி	01 வருடம்
பாக்கு	40 வருடங்கள்	தேயிலை	*100* வருடங்கள்

3.1.4.2 *நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்*

விவசாய உற்பத்தியாக அறுவடை செய்யத்தக்க அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்பனை செய்யக்கூடிய சொத்துக்கள் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களாகக் கருதப்பதுடன், அதற்கு வெட்டுமரமும் உள்ளடங்கும். விவசாய உற்பத்திகளை சந்தைக்குச் சந்தை எடுத்துச்செல்வதற்கான கிரயத்தையும் மதிப்பிடப்பட்ட விற்பனை கிரயத்தையும் கழித்து கிடைக்கும் சராசரிப் பெறுமதிக்கு இவ் உற்பத்தி மதிப்பிடப்படுகின்றது. விலை மதிப்பிடல் மீதான இலாபம் அல்லது நட்டம் விபரமான வருமான கூற்றின் கீழ் காட்டப்படும்.

3.1.4.3 *பிற்போடப்பட்ட சொத்துக்கள்*

பிற்போடப்பட்ட சொத்துக்கள் வருடத்துக்கு 10% கடன் பதிவழிக்கப்படுகின்றன.

3.1.5 *முதலீட்டு ஆதனம்*

மூலதன மதிப்பேற்றத்துக்கும் மேலும்/ அல்லது வாடகை வருமானத்தினை உழைப்பதற்கும் வைத்திருக்கின்ற ஆதனங்களை முதலீட்டு ஆதனம் உள்ளடக்குகின்றது. அவை ஆரம்பமாக தொடர்புடைய வணிகவினை கிரயங்கள், மேலும் சேர்த்தல், ஒரு பாகத்தை மாற்றீடு செய்தல் அல்லது ஆதனத்தை பழுதுபார்த்தலினால் உறப்பட்ட செலவுகள் உள்ளடங்கலான கிரயத்திலேயே அளவிடப்படுகின்றன. அடுத்துறு அளவீடானது திரண்ட பெறுமானத் தேய்வினை கழித்து பெறும் கிரயத்திலேயே இருக்கும்.

3.1.6 நடைபெற்றுகொண்டிருக்கின்ற மூலதன வேலை (Capital work in progress)

ஐந்தொகை திகதியில் மூலதனமாக்கப்படாத வருடத்தில் உறப்பட்ட செலவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மூலதனச் செலவுகள் என காண்பிக்கப்படும். அதே நேரத்தில், வருடத்தில் மூலதனமாக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ள மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் இயந்திரத்துக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

3.1.7 குத்தகை வசதிகள்

ஏதாவதொரு வசதி குத்தகையாக இருக்குமா அல்லது அது குத்தகை வசதியை உள்ளடக்கி இருக்குமா என்பது தொடர்பான தீர்மானமானது குறித்த வசதியின் கருப்பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், அவ் வசதிகளை ஏற்பாடு செய்துகொடுப்பதானது குறித்த சொத்து அல்லது சொத்துக்களின் பயன்பாட்டின் அடிப்படையிலும், அதன் மூலம் குறித்த சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை வழங்கப்படுமா என்பதிலும் தங்கியுள்ளது.

நிதிக் குத்தகை வசதிகள்

சொத்துக்களின் உடைமைக்கு நேரிடக்கூடிய, என்றாலும் சட்டரீதியான கோரிக்கைகள் அவசியமற்ற அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவில் எதிர்த்தரப்புக்களுக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடிய உடன்படிக்கைகள் நிதி குத்தகைகளாக கருதப்படுகின்றன. கூட்டுறவுத்தாபனம் நிதி குத்தகைகளின் கீழ் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதுடன் அவை ''ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண''த்தின் கீழ் உள்ளடக்கப்படுவதுடன் குத்தகை வழங்குநருக்கான ஏற்புடைப் பொறுப்பு ''குத்தகை கடன்கொடுநரின்'' கீழ் உள்ளடக்கப்படும். ஒரு நிதி குத்தகையும் அதனை நேரொத்திருக்கும் பொறுப்பும் ஆரம்பமாக சொத்தின் நியாயமான பெறுமதியிலோ அல்லது குறைவாயின் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலோ அங்கீகரிக்கப்படும். குத்தகையில் உள்ளடக்கும் வட்டி வீதத்தின் அடிப்படையில் குத்தகை காலம் முழுவதிலும் செலுத்தவேண்டிய நிதி கட்டணங்கள் ''தேறிய வட்டி வருமானத்தில்'' அங்கீகரிக்கப்படுவதனால் பொறுப்பின் எஞ்சியுள்ள மீதி தொடர்பாக மாறா வட்டி வீதத்தினை பேண முடியும்.

தொழிற்படு குத்தகைகள்

ஏனைய அனைத்து குத்தகைகளும் தொழிற்படு குத்தகைகளென வகைப்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுத்தாபனம் குத்தகைதாரராக இருக்கையில் குத்தகை சொத்துக்கள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படமாட்டாது. தொழிற்படு குத்தகைகளின் கீழ் செலுத்த வேண்டிய மற்றும் கிடைக்க வேண்டிய வாடகைகள் குத்தகைகள் காலங்கள் முழுவதிலும் நேர்கோட்டு முறை அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் அவை முறையே ''நிர்வாக செலவுகள்'' மற்றும் ''ஏனைய தொழிற்பாட்டு வருமானம்'' கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

3.2.1 பொருள் விவரப் பட்டியல்கள்

''முதல் வந்து முதல் செல்லுதல்'' (First in first out) அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்குரிய உதவித் தொகையை

வழங்கியதன் பின்னர் கிரயம் மற்றும் தேறிய காசாக்கத்தகு பெறுமதியில் எது குறைந்ததோ அதன்படி பொருள் விவரப் பட்டியல்கள் அங்கீகரிக்கப்படும்.

இருப்புக்களைக் கணக்கிடுதல்

3.2.2 இருப்புக்களின் கிரயம்

மூலப்பொருட்கள்

ஏதாவது நேரிடக்கூடிய செலவுடனான கொள்வனவுகளின் செலவு.

தற்போது நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

முடிவுப் பொருட்கள்

மூலப்பொருட் செலவும் மாறும் மொத்த உற்பத்திச் செலவும்.

3.2.3 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவை கையிலும் வங்கியிலுமுள்ள காசு, நிலையான வைப்பு முதலீடுகள், ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறைவான அசல் முதிர்ச்சிகளுடனான குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிக பற்றுக்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் படுகடன்களினுள் காட்டப்பட்டுள்ளன.

3.2.4 ஆராய்ச்சிச் செலவுகள்

நவீன விஞ்ஞானபூர்வமான அல்லது தொழிநுட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான செலவினம் அது ஏற்படும் போது இலாபத்தில் அல்லது இழப்பில் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

4.1 *இளைப்பாறல் நலன் கடப்பாடுகள்*

4.1.1 *கட்டாய நலன் திட்டம் – ஓய்வூதியப் பணிக்கொடை*

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் குறிப்பீட்டு நியதிகளுக்கேற்ப இளைப்பாறல் பணிக்கொடையை செலுத்துவது கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். ஒரு உத்தியோகத்தர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்தேர்ச்சியான ஐந்து வருட கால சேவையை பூரணப்படுத்தினால் மாத்திரமே அவர் சார்பாக பணிக்கொடை செலுத்த வேண்டிய

தேவையேற்படுகின்றது. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக ஐந்தொகையில் ஒரு ஒதுக்கீடு முன்கொணரப்படும். ஒரு வருடத்தின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் வருடத்தின் இறுதியில் முன் கொண்டுசெல்லப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் இடையிலான வேறுபாடு வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

இப்பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. குறித்த விடயம் ஐந்தொகையில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

4.1.2 *கட்டாயப் பகிர்ந்தளிப்புத் திட்டங்கள் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்.*

கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் பங்களிப்பு நிதி வழங்கப்படும். குறித்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிக்கேற்ப உரிய பகிர்ந்தளிப்பு நிதியங்களால் இப் பகிர்ந்தளிப்பு நிதி ஈடுசெய்யப்படும். ஊழியர்களின் நலன்கருதி திட்டங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கான கடமைப்பொறுப்புக்கள் வருமான கூற்றில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படும்.

ஊழியர் சேமலாப நிதியம், தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியம் மற்றும் லங்கா பெருந்தோட்டத்

தொழிலாளர்களின் சேமலாப சங்கம்.

கூட்டுத்தாபனமும் ஊழியர்களும் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையிலும் அவர்கள் தெரிவுசெய்த எதாவது பங்களிப்புத் திட்டத்தின் அடிப்படையிலும் ஊழியர் சேமலாப நிதியம் /தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியம்/ லங்கா பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சங்கம் ஆகிய மூன்றில் ஒன்றுக்கு முறையே 12% மற்றும் 10% இனை பங்களிப்புச் செய்கின்றனர்.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

கூட்டுத்தாபனம் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு அடிப்படை சம்பளத்தின் 3% த்தினை பங்களிப்புச் செய்கின்றது.

5. வருமானக் கூற்று

வருமானக்கூற்றினை முன்வைக்கும் நோக்கத்துக்காக செலவுகள் முறையின் தொழிற்பாடு இணைத்துக்கொள்ளப்படும். ஏனெனில், அது கூட்டுத்தாபன செயலாற்றுகையின் உருப்படிகளை உறுதியாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

5.1.1 *வருமானங்களை இனங்காணல்*

கூட்டுத்தாபனத்துக்கு பொருளாதார நலன்கள் கிடைக்கக்கூடிய அளவில் வருமானம் இனங்காணப்படுவதுடன், கொடுப்பனவு எப்போது செலுத்தப்பட்டது என்பதை கருத்திற்கொள்ளாது வருமானத்தை நம்பகமான முறையில் அளவிட முடியும். ஒப்பந்தத்தினால் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளை கருத்திற்கொண்டு பெற்றுக்கொண்ட அல்லது பெறத்தக்க தொகையின் சீர்மதிப்பு பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

வருமானத்தை ஏற்றுக்கொள்ள முன்பு கீழுள்ள குறிப்பான இனங்காணல் தகுதிவிதிகள் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

பொருட்களின் விற்பனை

பொருட்களின் உடைமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் வழமையாக பொருட்களை விநியோகிக்கும் போது வாங்குபவருக்கு சேர்ப்பிக்கப்பட்டதும் பொருட்களின் விற்பனையினாலான வருமானம் இனங்காணப்படும்.

சேவைகளை வழங்குதல்

கணக்கீட்டு காலத்தின் போது சேவைகள் வழங்கப்பட்டதும் அல்லது நிறைவேற்றப்பட்டதும் சேவை வழங்கலுக்கான வருமானம் இனங்காணப்படும்.

ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் இயல்பாக சேரக்கூடியவை அடிப்படையில் இனங்காணப்படும். இது பிரதானமாக வருமானத்தை முகாமைத்துவம் செய்தல், பதிவுக் கட்டணம், வெட்டுமர விலைமனுகோரல் செயன்முறைகள் மற்றும் குத்தகை வாடகை வருமானம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

5.1.2 *செலவினங்கள்*

ஒரு வியாபாரத்தினை நடத்துகையில் உறப்பட்ட அனைத்து செலவுகளும் குறித்த வருடத்துக்கான இலாபத்திற்கு உரித்தாகும் வருமானத்தினுள் உள்ளடக்கப்படும். திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் உறப்பட்ட வருடத்தின் இலாப நட்டத்தில் உள்ளடக்கப்படும்.

5.1.3 *நிதிச் செலவினங்கள்*

ஒரு சொத்தின் கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடைய படுகடன் கிரயங்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனெனில், அத்தகைய சொத்தின் பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு குறிப்பிட்டதொரு காலம் செல்லும். ஏனைய அனைத்து படுகடன் கிரயங்கள் அவை நிகழந்த காலத்திலேயே செலவு வைக்கப்படும். கூட்டுறவுத்தாபனத்தின் நிதிச் செலவினங்கள் மேலதிகப்பற்று வட்டி, காசு தரகு, கடன் வட்டி (வங்கி மற்றும் ஏனையவை) மற்றும் தரகர்களின் வட்டி என்பவற்றை உள்ளடக்கும்.

6. நிதியியல் கருவிகள் – ஆரம்பகட்ட இனங்காணலும் அடுத்துறு அளவீடும்.

6.1 நிதிச் சொத்துக்கள்

6.1.1 ஆரம்பகட்ட இனங்காணலும் அளவீடும்.

இலங்கைக் கணக்கீட்டு தரநியமங்களின் 39 ஆம் வரையெல்லையினுள் நிதியியல் சொத்துக்களாவன இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பவற்றினூடாக சீர்மதிப்பு பெறுமதியிலும், முதிர்ச்சி முதலீடுகளுக்கு வைத்திருப்பவை என்றும் நிதிச்சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கப்பெறுபவை என்றும் பொருந்தும் விதத்திலும் ஆரம்ப இனங்காணலில்

அச்சொத்தின் நிதியில் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிக்கக்கூடியவாறும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இல்லாத சந்தர்ப்பத்தில் அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பமாக சீர்மதிப்பு பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களுடன் சேர்த்து இனங்காணப்படும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியியல் சொத்துக்களுள் காசு மற்றும் குறுகிய கால நிலையான வைப்புக்கள், வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை, மற்றும் ஏனைய வைப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன. மேற்கூறப்பட்ட நிதிச்சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படும்.

6.1.2 அடுத்துறு அளவீடு

நிதிச்சொத்துக்கள் தொடர்பான அட்டுறு அளவீடு அவற்றின் வகைப்படுத்தலிலேயே தங்கியுள்ளன.

6.1.2.1 இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் சீர்மதிப்பு பெறுமதிக்கு நிதிச் சொத்துக்கள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடுகின்ற நிதிச்சொத்துக்களுள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற நிதிச்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதிச்சொத்துக்களாக ஆரம்ப அங்கீகாரத்தினை பெற்ற நிதிச்சொத்துக்களும் உள்ளடங்குகின்றன. நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கோ அல்லது மிகவும் கிட்டிய காலத்தில் மீள்கொள்முதல் நோக்கில் கையகப்படுத்தியிருந்தால் அச்சொத்துக்கள் வர்த்தகத்துக்காக வைத்திருக்கின்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்படும். 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் கணக்கிடப்பட்ட நிதிச்சொத்துக்களேதும் இருக்கவில்லை.

6.1.2.2 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை என்பது, ஒரு செயல்படு சந்தையில் குறிப்பீடு செய்யப்படாத நிலையான மற்றும் மூலதனம் அல்லாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், இத்தகைய நிதிச்சொத்துக்கள் பயனுள்ள வட்டிவீத முறையை (EIR) பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் அளவிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமான கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில் நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும்.

6.1.2.3 முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள்

கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சிக்கு வைத்திருக்கும் சாதகமான எண்ணம் இருந்தால் நிலையான அல்லது நிச்சயிக்ககூடிய கொடுப்பனவுகளுடனான பெறுமதியற்ற நிதிச்சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிகள் முதிர்ச்சிக்காக வைத்திருப்பவை என வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவையானது பயனுள்ள வட்டி வீத முறையை பயன்படுத்தி மதிப்பு குன்றுதலை கழித்து கடன் பதிவழித்தல் கிரயத்தில் கணிப்பிடப்படும். கடன் பதிவழித்தல் கிரயமானது பயனுள்ள வட்டி வீத முறையின் பகுதிகளான ஏதாவது

கையகப்படுத்தலுக்கான கழிவு அல்லது தவணை கட்டணம், கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டே கணக்கிடப்படுகின்றது. பயனுள்ள வட்டிவீத முறை கடன் பதிவழித்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானமாக உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பு குன்றுவதனால் ஏற்படும் நட்டமானது வருமான கூற்றில் நிதிக்கிரயத்தில் இனங்காணப்படும். 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருப்பவை ஏதும் இருக்கவில்லை.

.

6.1.2.4 விற்பனைக்கு இருக்கும் நிதி முதலீடு

விற்பனைக்கு இருக்கும் முதலீடுகளில் பங்குரிமை மற்றும் கடன் பிணையங்கள் உள்ளடங்குகின்றன. ஒன்றில் வர்த்தகத்துக்கு வைத்திருப்பவை என்றோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் தீர்மானிக்கப்பட்டதாக வகைப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகள் விற்பனை நிதி முதலீடுகளுக்காக கிடைப்பனவை என வகைப்படுத்தப்படுகின்றன. கடன் பிணையங்கள் என்பது குறிப்பிட்டுக் கூறமுடியாத காலத்துக்கு வைத்திருப்பவை ஆகும். அவற்றை திரவத்தன்மை தேவைக்காக வைத்திருக்க முடியும் அல்லது சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப விற்பனை செய்துவிடலாம். 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்துக்கு விற்பனை நிதி முதலீடுகளுக்காக கிடைப்பவை ஏதும் இருக்கவில்லை.

6.1.2.5 இனங்கண்டு அப்புறப்படுத்துதல்

கீழுள்ள சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச்சொத்துக்கு (அல்லது பொருந்தும் சந்தர்ப்பத்தில் ஒரு நிதிச்சொத்தின் பாகம் அல்லது அவ்வாறான ஒரு தொகை நிதிச்சொத்துக்களின் பகுதி) அங்கீகாரம் இருக்கமாட்டாது.

I. குறித்த சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலை பெறுவதற்கான உரிமை காலாவதியாகுதல்.
II. கூட்டுத்தாபனமானது "pass-through" ஏற்பாட்டின் கீழ், ஒன்றில் (அ) சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை சணிசமானளவு மூன்றாம் திறத்தவருக்கு உரிமை மாற்றம் செய்தோ, அல்லது (ஆ) கூட்டுத்தாபனம் சொத்தின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மூன்றாம் திறத்தவருக்கு உரிமை மாற்றம் செய்யாது அல்லது தக்கவைக்காது சொத்தின் கட்டுப்பாட்டினை மாத்திரம் உரிமை மாற்றம் செய்தோ சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமையை மூன்றாம் திறத்தவருக்கு உரிமை மாற்றியிருத்தல் அல்லது பெற்றுக்கொண்ட காசுப்பாய்ச்சல்களை தாமதமின்றி செலுத்துவதற்கான கடப்பாட்டினை ஏற்றுக்கொண்டிருத்தல்.

6.1.2.6 நிதிச்சொத்துக்களின் மதிப்பு குன்றுதல்

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச்சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிச்சொத்து மதிப்புகுன்றியுள்ளமைக்கான புறநிலைச் சான்றுகள் உள்ளனவா என மதிப்பிடுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இடம்பெற்ற ஏதேனுமொரு நிகழ்வு அல்லது சில நிகழ்வுகளின் பெறுபேறாக மதிப்பு குன்றியுள்ளதாக புறநிலைச் சான்றுகள் இருந்தால், மற்றும் சாதாரணமாக மதிப்பீடு செய்ய முடியுமான அந் நிதிச்சொத்தின் அல்லது ஒரு தொகுதி நிதிச்சொத்துக்களின் மதிப்பீடு செய்த எதிர்கால நிதிப் பாய்ச்சலின் அடிப்படையில் குறித்த நட்டத்தினை ஏற்படுத்திய குறித்த நிகழ்வு மூலம் ஏதேனுமொரு தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பதாக புறநிலைச் சான்றுகள் இருந்தால் மாத்திரம் அந்த நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுதி மதிப்பு குன்றியுள்ளதாக கருதப்படும்.

எவரேனும் கடன்படுநர்கள் அல்லது ஒரு தொகுதி கடன்படுநர்கள் குறிப்பிடத்தக்க நிதிக் கஷ்டங்களை எதிர்கொள்ளல், வட்டி அல்லது முக்கியமான கொடுப்பனவுகளில் மோசடி செய்தல் அல்லது தவணை மீறப்படுதல் அல்லது கடமை தவறுதல், வங்குரோத்து நிலை அல்லது வேறு நிதி மீளஒழுங்கமைத்தலுக்கு தயாராகுதல் போன்ற சந்தர்ப்பங்களிலும், மற்றும் மோசடியுடன் சம்பந்தப்படும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை அல்லது பொருளாதார நிலைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அளவிடத்தக்க ஒரு வீழ்ச்சி தொடர்பாக கவனிக்கத்தக்க தரவுகள் மூலம் காட்டப்படும் போது மதிப்பு குன்றுவதற்கான சாட்சிகளை முன்வைக்க முடியும் தற்போது கூட்டுத்தாபனத்தினால் வர்த்தக பெறத்தக்கவைகளுக்காக குறிப்பான ஒதுக்கீட்டினை இனங்கண்டுள்ளது.

6.1.2.7 கடன் பதிவழிப்புச் செலவுக்கு கொண்டுசெல்லப்பட்ட நிதிச்சொத்துக்கள்

கடன் பதிவழிப்புக் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்ட நிதிச்சொத்துக்கள் தொடர்பில், பெறுமதி இழப்பின் புறநிலைச்சான்றானது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் காணப்படுகின்றதா அல்லது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துக்களுக்காக கூட்டாக காணப்படுகின்றதா என கூட்டுத்தாபனம் முதலில் மதிப்பிடுகின்றது. ஒரு தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்துக்காக அது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் பெறுமதி இழப்பின் புறநிலைச் சான்று ஏதுமில்லையென கூட்டுத்தாபனம் தீர்மானித்தால் அச்சொத்தானது ஒத்த கொடுகடன் இடர்நேர்வுக் குணஅம்சங்களை கொண்ட நிதிச்சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுவதுடன் அது பெறுமதி இழப்புக்காக கூட்டாக மதிப்பிடப்படுகின்றது. மதிப்பு குன்றுதலுக்காக தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு முடக்க இழப்பு இருப்பதாக அல்லது தொடர்ந்து இருக்கலாமென இனங்காணப்பட்டால் அவை பெறுமதி இழப்பின் கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படமாட்டாது.

மதிப்பு குன்றல் இழப்பு நிகழ்ந்ததாக புறநிலைச் சான்றேதும் இருந்தால் இழப்புத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச்செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு பாய்ச்சல்களின் (இது வரையில் நிகழாத எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்பு நீங்கலாக) தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியானது நிதிச்சொத்தின் அசல் பயனுள்ள வட்டி வீதத்தில் கழிவு கொடுக்கப்படுகின்றது.

6.2 நிதிப் பொறுப்புக்கள்

ஆரம்ப அங்கீகாரமும் கணக்கிடலும்

இலங்கைக் கணக்கீட்டுத் தரநியமங்கள் 39 இன் செயற்பரப்பில் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தை விலையிலான நிதிப்பொறுப்புக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் அல்லது பயனுள்ள இழப்புக்காப்பீட்டில் இழப்புக்காப்பு கருவிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பெறுதிகள் என்பவற்றை நிதிப்பொறுப்புக்கள் என வகைப்படுத்தியுள்ளன. கூட்டுத்தாபனம் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

அனைத்து நிதிப்பொறுப்புக்களும் ஆரம்பமாக சீர்மதிப்பு விலையில் அங்கீகரிக்கப்பட்டாலும், கடன்கள் மற்றும் படுகடன் விடயத்தில் கடன் பதிவழிப்பு முறையில் முன்கொணரப்படும். இது நேரடியாக

தொடர்புடைய பரிமாற்றல் கிரயங்களை உள்ளடக்குகின்றது. கூட்டுத்தாபனத்தின் நிதிப்பொறுப்புக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவை மற்றும் வங்கி மேலதிகபற்றினை உள்ளடக்குகின்றது,

அடுத்துறு அளவீடு

நிதிப்பொறுப்புக்கள் கடன் பதிவழித்த செலவுக்கு கணக்கிடப்படுகின்றது.

இனங்காணலிலிருந்து புறந்தள்ளல்

ஏதாவதொரு பொறுப்பின் கீழ் ஒரு கடமைப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டுவிட்டால் அல்லது இரத்துச் செய்யப்பட்டுவிட்டால் அல்லது காலாவதியானால் அப்பொறுப்பு இனங்காணலில் இருந்து புறந்தள்ளப்படும்.

7. இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களை முதற் தடவையாக இயைபாக்கிக்கொள்ளல் (SLFRS/LKAS)

2012 ஜனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகின்ற இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள் *(SLFRS)* மற்றும் இலங்கைக் கணக்கீட்டுத் தரநியமங்கள் *(LKAS)* என்பவற்றை உள்ளடக்கும் இலங்கைக் கணக்கீட்டு தரநியமங்களுக்கேப 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள் கூட்டுத்தாபனத்தினால் முதற்தடவையாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், 2011 டிசம்பர் 31 முடிவடைந்த வருடம் வரையிலான காலங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் முந்திய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டன.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

8 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

தலைமை அலுவலகம்	சொந்த உரிமைக் காணி	கட்டிடங்கள்	உபகரணங்கள்	தளபாடம்	மோட்டார் வாகனங்கள்	கணினி	மொத்தம்
கிரயம் மற்றும் மதிப்பீடு							
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	**4,031,845**	**4,959,427**	**12,048,866**	**5,232,864**	**66,115,401**	**4,420,010**	**96,808,412**
சேர்ப்பனவுகள்	-	-	247,300	113,914	-	276,550	637,764
நீக்கப்பட்டவை							
மாற்றல்	-	-	-	-	-	-	-
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**4,031,845**	**4,959,427**	**12,296,166**	**5,346,778**	**66,115,401**	**4,696,560**	**97,446,177**
பெறுமானத் தேய்வு							
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	-	**4,959,384**	**10,358,506**	**2,604,383**	**66,094,153**	**3,438,162**	**87,454,588**
வருடத்துக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம்		-	241,817	442,329	-	619,162	1,303,308
முந்திய ஆண்டின் சீராக்கல்							
நீக்கப்பட்டவை							
மாற்றல்							
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	-	**4,959,384**	**10,600,323**	**3,046,712**	**66,094,153**	**4,057,324**	**88,757,895**
தேறிய ஏட்டுப் பெறுமதி							
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**4,031,845**	**43**	**1,695,843**	**2,300,067**	**21,247**	**639,236**	**8,688,281**

தோட்டங்கள்	காணிகள்	கட்டிடங்கள்	உபகரணங்கள், தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	மோட்டார் வாகனங்கள்	ஏனைய உடைமையாக்கிய சொத்துக்கள்	இயந்திரம்	மொத்தம்
கிரயம் அல்லது மதிப்பீடு							
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	**645,345,972**	**173,603,294**	**24,782,583**	**80,752,692**	**6,705,259**	**117,017,392**	**1,048,207,192**
சேர்ப்பனவுகள்	-	9,186,137	1,031,759	1,666,959	-	-	11,884,855
முந்திய ஆண்டின் சீராக்கல்							
மாற்றல்கள்							
நீக்கப்பட்டவை							
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**645,345,972**	**182,789,431**	**25,814,342**	**82,419,651**	**6,705,259**	**117,017,392**	**1,060,092,046**
பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதியிழப்பு							
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	-	**108,919,463**	**19,125,722**	**70,143,692**	**6,672,972**	**100,366,805**	**305,169,306**
வருடத்துக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம்	-	3,926,826	445,410	457,768	-	2,534,269	7,364,273
முந்திய ஆண்டின் சீராக்கல்							
நீக்கப்பட்டவை							
மாற்றல்கள்							
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	-	**112,846,289**	**19,571,132**	**70,601,460**	**6,672,972**	**102,901,073**	**312,533,579**
தேறிய ஏட்டுப் பெறுமதி							
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**645,345,972**	**69,943,142**	**6,243,209**	**11,818,191**	**32,287**	**14,116,319**	**747,558,468**
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி (தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களின் மொத்தம்)	**649,377,816**	**69,943,185**	**7,939,052**	**14,118,258**	**53,534**	**14,755,555**	**756,246,749**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

9 உயிரியல் சொத்துக்கள்

		31.12.2020 இலுள்ளவாறு	31.12.2019 இலுள்ளவாறு
9.1	**நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்**		
		ரூ.	**ரூ.**
	வெட்டுமரம்	**3,314,581,133**	**3,314,581,133**

ஒரு சில வெட்டுமரப் பிரதேசங்கள் நக்கிள்ஸ் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளதனாலும் இதுவரையில் வனப்பாதுகாப்பு திணைக்களத்தினால் எல்லை குறிக்கப்படாமையினாலும் 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு ஏதும் இடம்பெறவில்லை. மேலும், மதிப்பீட்டுக்கு பாரியதொரு தொகை பணம் செலவாகும். ஆனால், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் நிலவுகின்ற நிதிநெருக்கடியினால் அத்தகைய செலவினை தாங்கிகொள்ளும் நிலையில் இல்லை. நாம் இந்த உயிரியல் சொத்துக்களை விலைமதிப்பிடும் பணியை ஆரம்பித்துள்ளதுடன், நிரல் அமைச்சிலிருந்து நிதி ரீதியான ஒத்துழைப்பினைக் கோரியுள்ளோம்.

9.2 தாங்கி உயிரியல் சொத்துக்கள்

கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்புக்களை கழித்தே தாங்கி உயிரியல் சொத்துக்கள் கணக்கிடப்படுகின்றன.

கிரயம்	**தேயிலை**	**தென்னை**	**மிளகு**	**இறப்பர்**	**கோப்பி**	**ஏனையன**	**மீள் வனமாக்கல்**	**மொத்தம்**
கிரயம் அல்லது மதிப்பீடு								
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	**484,999,849**	**3,809,207**	**3,542,092**	**15,270,484**	**1,501,242**	**5,067,379**	**30,313,346**	**544,503,598**
சேர்ப்பனவுகள்	21,933,528	-	9,855	-	-	717,380	5,328,855	**27,989,617**
முந்திய வருடத்தின் சீராக்கல்								
உரிமை மாற்றல்கள்								
நீக்கப்பட்டவை								
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**506,933,377**	**3,809,207**	**3,551,947**	**15,270,484**	**1,501,242**	**5,784,759**	**35,642,201**	**572,493,216**

பெறுமானத் தேய்வு	**தேயிலை**	**தென்னை**	**மிளகு**	**இறப்பர்**	**கோப்பி**	**ஏனையன**	**மீள் வனமாக்கல்**	**மொத்தம்**
2020 ஜனவரி 01 இல் உள்ளவாறு	**361,131,471**	**2,707,628**	**2,130,944**	**3,489,666**	**1,416,920**	**969,796**	**3,454,426**	**375,300,850**
ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம்	2,146,260	38,690	97,646	370,328	5,132	179,098	1,182,710	4,019,863
முந்திய ஆண்டின் சீராக்கல்								
நீக்கப்பட்டவை								
2020 டிசம்பர் 31 இலுள்ளவாறு	**363,277,731**	**2,746,318**	**2,228,590**	**3,859,994**	**1,422,051**	**1,148,894**	**4,637,136**	**379,320,713**
தேறிய ஏட்டுப் பெறுமதி								
2020 டிசம்பர் 31 இலுள்ளவாறு	**143,655,645**	**1,062,889**	**1,323,357**	**11,410,490**	**79,190**	**4,635,865**	**31,005,066**	**193,172,503**
மொத்த உயிரியல் சொத்துக்கள் (குறிப்பு 9.1	**143,655,645**	**1,062,889**	**1,323,357**	**11,410,490**	**79,190**	**4,635,865**	**31,005,066**	**3,507,753,636**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

10	**முதலீட்டு ஆதனம்**	**31.12.2020 இல் உள்ளவாறு**	**31.12.2019 இல் உள்ளவாறு**
		ரூ.	**ரூ.**
	அரசாங்கத்திலிருந்தான காணிப் பங்களிப்பு	1,600,601,926	1,600,601,926
	மூலதன மதிப்புயர்வுக்கான காணி	10,918,715	10,918,715
		1,611,520,641	**1,611,520,641**

1982 பெப்ரவரி 27 ஆந் திகதியுடைய 181/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக ஒரு சில தோட்டங்களின் உரிமை இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டில் பத்தொன்பது தோட்டங்கள் நீண்டகால குத்தகை அடிப்படையில் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறு இக்காணிகள் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியில் அத்தகைய காணியின் கிரயம் குறித்த காணியின் கிரயத்தை நியாயமான விதத்தில் பிரதிபலிப்பதாகவும் அத்தொகைகள் ஏட்டில் முன்னெடுத்து செல்லப்பட்டதாகவும் முகாமைத்துவம் கருதுகின்றது.

இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் 40 க்கேற்ப, ஒரு முதலீட்டு ஆதனம் ஆரம்பமாக (உரிமை மாற்றுபுள்ளியில்) அதன் கிரயத்திலும், அதனைத் தொடர்ந்து ஒன்றில் சந்தை பெறுமதி மாதிரி அல்லது கிரய மாதிரியை பயன்படுத்தியும் அளவிடப்படும். என்றாலும், உரிமை மாற்றம் செய்யப்படும் திகதியில் இருக்கின்ற நாணயப் பெறுமதிகளை கவனத்திற்கொள்ளும் நிலையில் முகாமைத்துவம் இல்லை. மாறாக, காணிகளை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கும் போது இருந்த பெறுமதிகளையே தோட்டங்களின் சந்தை விலையாக கருத்திற்கொண்டது. எனவே, 1992 இல் உள்ளவாறு பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஐந்தொகையிலிருந்து விகிதாசாரீதியில் காணியின் பெறுமதி பிரித்தெடுக்கப்பட்டது.

முதலீட்டு ஆதனங்கள் மதிப்பிடப்படவில்லை. ஏனெனில், மதிப்பீட்டுப்பணிக்கு பாரியளவு பணத்தொகை தேவைப்படுவதன் காரணமாகவும் இன்றுவரை நியதிச்சட்ட நிலுவைகள் தீர்க்கப்படாத இந்நேரத்தில் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய காசுப்பாய்ச்சல் அத்தகைய இயல்புடைய பாரியதொரு செலவீனத்தை அனுமதிக்காது. எனவே, நிரல் அமைச்சிலிருந்து நிதி ரீதியான ஒத்துழைப்பினை எழுத்துமூலம் கோரியுள்ளோம்

11	**இருப்புக்கள்**	**31.12.2020 இல் உள்ளவாறு**	**31.12.2019 இல் உள்ளவாறு**
		ரூ.	**ரூ.**
	முடிவு உற்பத்தி	57,919,956	46,371,519
	நுகரத்தக்க கையிருப்பு	16,675,579	16,131,121
		74,595,535	**62,502,640**

கிரயத்தின் மிகவும் குறைவான பெறுமதி மற்றும் தேறிய தேறல்செய்யப்பட்ட பெறுமதி (NRV)

12	**வர்த்தகமும் ஏனைய பெறத்தக்கனவும்**	**31.12.2020 இல் உள்ளவாறு**	**31.12.2019 இல் உள்ளவாறு**
		ரூ.	**ரூ.**
	வர்த்தக கடன்படுனர்கள் - தலைமை அலுவலகம் (அ)	51,009,177	37,326,686
	கழி : தலைமை அலுவலக கடன்படுநர்களின் குறிப்பான பெறுமதியிழப்பு	(15,404,568)	(15,404,568)
	வர்த்தக கடன்படுனர்கள் - அனைத்து தோட்டங்களும் (ஆ)	130,332,495	131,312,469
	கழி : தோட்ட கடன்படுநர்களின் குறிப்பான பெறுமதியிழப்பு	(49,128,420)	(49,128,420)
	ஏனைய பெறத்தக்கவை - தலைமை அலுவலகம்	30,966,259	22,173,326
	ஏனைய பெறத்தக்கவை - அனைத்து தோட்டங்கள்	36,250,601	48,930,252
		184,025,544	**175,209,745**
அ).	**வர்த்தகக் கடன்படுநர் - தலைமை அலுவலகம் கீழுள்ளவை உள்ளடங்கலாக**		
	B.C.C. கம்பனி	15,404,568	15,404,568
	கழி : தலைமை அலுவலக கடன்படுநர்களின் குறிப்பான பெறுமதியிழப்பு	(15,404,568)	(15,404,568)
	பெறத்தக்க முற்பணம் - பச்சை இலை கொள்வனவாளர்கள்	27,487,452	13,720,320
	எல்கடுவ பெருந்தோட்டம்	1,916,092	1,916,092
	வுட்சைற் பெருந்தோட்டம்	992,125	992,125
	துக்வரி	2,500,000	2,500,000
	நானாவித மற்றும் ஏனைய கடன்படுநர்கள்	2,708,940	2,793,581
		35,604,609	**21,922,118**
ஆ).	**வர்த்தக கடன்படுநர் - தோட்டங்கள் கீழுள்ளவை உள்ளடங்கலாக**		
	நானாவித கடன்படுனர்கள்	33,891,252	28,869,877
	நுகர்வோர் கடன்படுனர்கள்	41,071,407	41,071,407
	நானாவித வருமான கடன்படுனர்கள்	2,588,530	2,588,530
	J.E.D.B	1,668,269	1,668,269
	உற்பத்தி கடன்படுநர்கள்	726,644	726,644
	கழி : தோட்ட கடன்படுநர்களின் குறிப்பான பெறுமதியிழப்பு	(47,537,070)	(47,537,070)
	கழி : அறவிடமுடியா கடன்களுக்கான ஏற்பாடு	(1,591,349)	(1,591,349)
	Interplantation நடைமுறைக் கணக்கு	-	1,930,180
	ஏனைய கடன்படுநர்கள்	50,386,393	54,457,563
		81,204,075	**82,184,050**

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

13	காசும் காசுக்கு சமமானவையும்	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
	சாதக நிலுவைகள்	ரூ	ரூ
	கையிருப்பிலும் வங்கியிலும் உள்ள காசு		
	- தலைமையகம்	43,342,178	36,406,748
	- தோட்டங்கள்	2,544,796	1,306,864
		45,886,973	**37,713,613**

14	பங்களிக்கப்பட்ட மூலதனம்	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
		ரூ	ரூ
	அரசாங்க பங்களிப்பு	3,263,262,947	3,263,262,947
	அரசாங்கத்திலிருந்து காணி பங்களிப்பு	2,616,589,903	2,616,589,903
		5,879,852,850	**5,879,852,850**

மொத்த அரசாங்க பங்களிப்பு அரசாங்கத்திலிருந்து (திறைசேரி) கிடைக்கபெற்ற காசு மற்றும் அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்துக்கு உரிமை மாற்றம் செய்த காணிகளையும் உள்ளடக்கும். மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வருடத்தில் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு செலவினங்களுக்காக 222 மில்லியன் ரூபாவும் திறைசேரி கொடைகள் கிடைக்கப்பெற்றன.

15	ஊழியர் நலன் கடப்பாடுகள்	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
		ரூ	ரூ
	ஆரம்ப நிலுவை - தோட்டங்கள்	397,512,100	324,998,628
	- தலைமை அலுவலகம்	20,127,083	14,599,498
	பணிக்கொடை சீராக்கல்	67,350,179	33,828,923
	வருடத்துக்கான ஏற்பாடு	30,226,545	80,087,086
	ஏற்பாட்டின் கீழ்/ மிகை ஏற்பாட்டு சீராக்கல் -	(786,831)	(18,349,821)
	செலுத்தத்தக்க பணிக்கொடைக்கான மாற்றப்பட்டது	(37,774,172)	(14,384,929)
	வருடத்தில் கொடுப்பனவு	(7,145,102)	(3,140,202)
	ஏனைய பரிமாற்றம்	(218,183)	
		469,291,620	**417,639,183**

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

16	வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவை	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
		ரூ.	ரூ.
	தலைமை அலுவலகம் (அ)	316,061,332	296,618,062
	தோட்டங்கள் (ஆ)	1,046,004,128	1,020,004,690
	தொழிற்படா நிலுவை	1,933,044	1,933,044
		1,363,998,504	**1,318,555,797**

அ).	கீழுள்ளவை உள்ளடங்கலாக தலைமை காரியாலயத்துக்க	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
	முற்பணம் - ஓபல்கல (குத்தகை முற்பணம்)	4,480,000	4,480,000
	வெட்டுமர முற்பணம்	786,379	786,379
	பொலி கெமிக்ஸ்	715,389	715,389
	பேர்த் தோட்டம்	6,870,411	6,932,399
	ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை	97,709,342	97,709,342
	முடிவுத் தேயிலை தரகர்களிடமிருந்து பெற்ற முற்பணம்	1,513,477	16,030,780
	பெற்றுக்கொண்ட முற்பணம் - பச்சை இலை கொள்வனவாளர்கள்	5,742,978	11,756,571
	அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம்	28,709,029	28,709,029
	உரக் கூட்டுத்தாபனம்	35,931,679	35,931,679
	சிலாபம் பெருந்தோட்டம்	36,410,959	34,810,959
	கடன் இலங்கை கணிய மணல்	25,000,000	25,000,000
	அட்டுறு செலவினங்கள்	13,527,699	5,576,019
	செலுத்தத்தக்க EPF/ESPS/CPPS	17,789,938	6,340,558
	ஊ.ந.நி	1,226,571	157,034
	ஏனைய செலுத்தத்தக்கவை	36,846,482	18,880,925
	மர விற்பனை வரவு	2,801,000	2,801,000
	மொத்தம்	**316,061,332**	**296,618,062**

ஆ).	கீழுள்ளவை உள்ளடங்கலாக வர்த்தகம் மற்றும் தோட்டங்களுக்கான செலுத்தத்தக்கவை	31.12.2020 இல் உள்ளவாறு	31.12.2019 இல் உள்ளவாறு
	நானாவித கடன்கொடுநர்கள்	34,047,026	70,854,109
	எல்கடுவ பெருந்தோட்டம்	172,137	172,137
	மீளளிக்கதக்க விலைமனுகோரல் வைப்புக்கள்	6,379,570	6,379,570
	ஏனைய பொறுப்புக்கள்	15,594,104	21,325,404
	தொழிற் சங்கங்கள்	7,428,863	6,595,773
	ஆளணி மற்றும் தொழிலாளர் கொடுப்பனவுகள்	49,177,269	33,408,555
	கணக்காய்வு மற்றும் காப்புறுதிக்கான கட்டணங்களுக்கான	8,673,278	7,289,573
	செலுத்தத்தக்க ஊ.சே.நி	413,339,668	421,921,940
	செலுத்தத்தக்க - ESPS	16,625,046	7,552,308
	செலுத்தத்தக்க - CPPS	24,954	128,830
	செலுத்தத்தக்க ஊ.ந.நி	23,804,025	14,380,082
	செலுத்தத்தக்க பணிக்கொடை	402,314,300	364,540,128
	அட்டுறு செலவினங்கள்	1,018,144	1,489,328
	வரவு மீதூதிய கொடுப்பனவு	2,036,935	1,843,993
	ஊ.சே.நி மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை	43,640,418	42,020,364
	ஊ.ந.நி மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை	2,658,745	1,195,465
	பணிக்கொடை மிகை விதிப்பு செலுத்தத்தக்கவை	14,296,172	14,525,548
	ஏனைய செலுத்தத்தக்கவை	4,773,473	4,381,580
	மொத்தம்	**1,046,004,128**	**1,020,004,690**

16.1	கடன்	100,000,000	-
	மேற்கூறப்பட்ட கடன் 2020 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான காகப் பாய்ச்சல் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், இதற்கு திறைசேரி உத்தரவாதமளித்தது.		

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

17	**வருமானம்**	**31.12.2020**	**31.12.2019**
		ரூ.	**ரூ.**
	தேயிலை	327,616,538	233,893,034
	பச்சை இலை	419,437,439	292,842,800
	சிறு பயிர்கள்	11,544,276	2,262,052
	இறப்பர்	8,237,326	6,935,151
	மொத்த வருமானம்	**766,835,580**	**535,933,037**

தேயிலை விற்பனைகள் மறுக்கப்பட்ட தேயிலையிலிருந்து கிடைத்த வருமானத்தை உள்ளடக்கும். மறுக்கப்பட்ட தேயிலை, சிறு பயிர்கள், மற்றும் மரத்திலிருந்து கிடைத்த வருமானங்களை உரிய செலவினங்கள்/ விற்பனை கிரயங்களை கழித்ததன் பின்னரே காட்டப்படும்.

18	**ஏனைய வருமானம்**	**31.12.2020**	**31.12.2019**
		ரூ.	**ரூ.**
	மரம் - விலைமனுகோரல்	97,038,052	55,499,615
	குத்தகை வாடகைகள்	36,042,725	28,019,892
	முகாமைத்துவக் கட்டணம்	17,174,029	15,743,339
	வட்டி வருமானம்	2,201,642	2,324,060
	ஹுன்னாஸ் நீர்வீழ்ச்சி ஓய்வுப் பூங்காவிலிருந்து	712,535	1,332,494
	ஏனைய வருமானம் - தோட்டங்கள் மற்றும் தலைமையகம்	3,442,121	3,132,140
	விருந்தினர் பங்களாவிலிருந்து கிடைத்த வருமானம்	1,867,178	923,195
	மொத்த ஏனைய வருமானம்	**158,478,281**	**106,974,735**

19	**நிர்வாக செலவினங்கள்**	**31.12.2020**	**31.12.2019**
		ரூ.	**ரூ.**
	தனிப்பட்ட செலவு	48,550,223	46,850,831
	கட்டாய பங்களிப்புகள் - CPPS, EPF மற்றும் ESPS	7,071,270	4,500,999
	கட்டாய பங்களிப்புகள் - ETF	1,540,406	1,125,250
	பெறுமானத் தேய்வு - தலைமை காரியாலயம்	1,303,308	1,073,658
	பணிக்கொடைச் செலவு - தலைமையகம் மற்றும் தோட்டம்	30,226,545	33,828,923
	விற்பனைச் செலவுகள்	13,927,535	6,826,920
	ஏனைய நிர்வாக செலவு - தலைமையகம் மற்றும் தோட்டம்	78,268,055	71,267,271
	மொத்த நிர்வாகச் செலவினங்கள்.	**180,887,340**	**165,473,851**

20	**நிதிச்செலவினங்கள்**	**31.12.2020**	**31.12.2019**
		Rs.	**Rs.**
	காசுக்கழிவு தோட்டம்	5,597,184	5,049,882
	தேயிலை தரகர் முற்பண வட்டி	2,015,159	3,767,109
	வங்கிக் கட்டணங்கள்	239,718	72,139
	வங்கி மேலதிக பற்று வட்டி மற்றும் காசுக் கழிவு	19,848,781	10,221,274
	ஏனைய கடன் வட்டி - சிலாபம் பெருந்தோட்டம்	1,600,000	1,600,000
	மொத்த நிதிச்செலவினங்கள்	**29,300,841**	**20,710,404**

21 வருமான வரி

வருமான வரிக் கணிப்பீடுகள் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த கணக்குகளில் கடந்த பதினெட்டு வருடங்களாக காட்டப்படவில்லை. இதன் காரணமாகவும் தொடர்ந்தேர்ச்சியான நட்டங்களாலும் எதிர்காலத்தில் வரியிடத்தக்க இலாபங்கள் கிடைக்காமல் போகலாம் என்றும் இ.அ.பெ.கூட்டுத்தாபனத்தினால் வருமான வரி செலுத்தப்படாதிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. கடந்த இருபத்திரண்டு வருடங்களுள் (1995 - 2016) வெறும் நான்கு வருடங்களிலேயே கூட்டுத்தாபனம் இலாபம் உழைத்துள்ளது.

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

22 தொடர்புடைய திறத்தவர் பரிமாற்றங்கள்

அரச மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடனான பரிமாற்றங்கள்

கூட்டுத்தாபனத்தின் சாதாரண தொழிற்பாடுகளின் போது தொடர்புடைய திறத்தவர்களுடன் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றது. தொடர்புடைய திறத்தவர்களுள் இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் அறுதி உரிமை உடையது), பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன. கூட்டுத்தாபனத்தினால் அரச மற்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுடன் நடத்தும் பரிமாற்றங்கள் மற்றும் ஏற்பாடுகள் தனிப்பட்ட வகையில் முக்கியமானவை. என்றாலும், தனிப்பட்ட ரீதியாகவன்றி கூட்டாக மேற்கொள்ளும் பரிமாற்றங்களின் விபரம் வருமாறு.

	2020	2019
	ரூ	ரூ
நிலுவையிலுள்ள மீதிகள்		
பின்வரும் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை		
அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம்	28,709,029	28,709,029
உரக் கூட்டுத்தாபனம்	35,931,679	35,931,679
சிலாபம் பெருந்தோட்டங்கள்	36,410,959	34,810,959
வரையறுக்கப்பட்ட லங்கா கணிய மணல்	25,000,000	25,000,000
எல்கடுவ பெருந்தோட்டம்	172,137	172,137
ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB)	97,709,342	97,709,342
பேர்த் தோட்டம்	6,870,411	6,932,399
பின்வருவனவற்றிலிருந்து பெறத்தக்கவை		
எல்கடுவ பெருந்தோட்டம்	1,916,092	1,916,092
ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB)	41,071,407	41,071,407
ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபை (JEDB)	1,668,269	1,668,269

23 எதிர்பார பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

குறித்த திகதியில் செலுத்தப்படாத ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை தொடர்பாக
குறித்த திகதியில் செலுத்தப்படாத ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை தொடர்பாக
குறித்த திகதியில் செலுத்தப்படாத ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை தொடர்பாக
குறித்த திகதியில் செலுத்தப்படாத ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை தொடர்பாக இ.அ.பெ.கூ க்கு எதிராக 697 வழக்குகள் தாக்கலிடப்பட்டிருந்தன. வழக்கில் வெற்றிபெறுவது சாத்தியமானது மாத்திரமே, ஆனால் சாத்தியமற்றதாகவும் இருக்கலாம் என கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் ஆலோசனை வழங்கினார்கள். அதற்கேற்ப, ஏதேனும் எதிர்பாரா பொறுப்புக்கு இந்நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யவில்லை.

24 ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பின்னரான அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களுக்கான பொருத்தமான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் நிதிக்கூற்றில் தேவையான போது குறிப்பிடப்பட்டுள்ளன.

25 முந்திய வருட சீராக்கல்கள்

முந்திய வருட சீராக்கல்கள் கீழுள்ள பரிமாற்றங்களை உள்ளடக்குவதுடன்
முந்திய வருட சீராக்கல்கள் கீழுள்ள பரிமாற்றங்களை உள்ளடக்குவதுடன்

விபரங்கள்	2020	2019
	Rs.	Rs.
பணிக்கொடை (மிகைக்கட்டணங்கள், குறைந்த/ மிகை	-	163,532,580
ஏனைய செலவினங்கள்/ சீராக்கல்கள்	(4,886,661)	10,158,950
மொத்தம்	**(4,886,661)**	**173,691,530**

எனது இல. PAL/C/SLSPC/01/2020/11 *2022 டிசம்பர் 16 ஆம் திகதி*

தலைவர்,

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ஆ 31ம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று, சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தற் தேவைகள் தொடர்பான ஆம் இலக்க 19 ஆம் ஆண்டின் 2018 ஆம் உறுப்புரையின் 12 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்று

1.1 பாதகமான கருத்து

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலுள்ளவாறு நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று, பங்குரிமை மாற்றற் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விபரங்களையும், சாராம்சத்தையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் எனது பணிப்புரையின் கணக்காய்விற்குட்படுத்தியுள்ளது. கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும், அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் பாதகமான கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தினால், 2020 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலைமை, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றில் இலங்கைக் கணக்கீட்டு தரநியமங்களுக்கேற்ப உண்மையும் நியாயத்துவமும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதே எனது கருத்தாகும்.

1.*2* பாதகமான கணக்காய்வு கருத்துக்கான அடிப்படை

1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுகாமை

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - *07* இன் *07* ஆவது பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம், பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றில் போதிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தின் டிசம்பர் *31* ஆம் திகதிக்கு வங்கி மேலதிகப்பற்றான ரூபா. *101,282,759* க்கு பிணையாக வைக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பில் நிதிக்கூற்றில் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - *07* இன் *17* ஆவது பந்தியின் (இ) பிரிவின் பிரகாரம் நிதிச் செயற்பாடுகளினூடாக உருவாக்கப்படுகின்ற பணப் பாய்ச்சல்களை வேறாக வெளிப்படுத்த வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வு

வருடத்தில் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட ரூபா. 100,000,000 பெறுமதியான கடன் நிதிச்செயற்பாடுகளில் இனங்காணப்படாமையினால் நிதிச்செயற்படுகளினூடாக உருவாக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் அந்தப் பெறுமதியினால் குறைந்திருந்தது.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் 42 மற்றும் 43 ஆம் பந்திகளுக்கு அமைவாக முந்திய வருடங்களில் நிகழ்ந்த தவறுகளை கடந்தகால ரீதியான ஒப்பீட்டு நோக்குகளுக்கு பிறகு மீளாய்வு வருடத்துடன் முன்வைக்கின்ற ஒப்பீட்டு ரீதியான தகவல்களில் அந்த வழுக்கள் சரிப்படுத்தப்பட வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வு வருடத்தினுள் உரிமை மாற்றல் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 4,886,661 பெறுமதியான தொகை மற்றும் 2019 இல் ரூபா. 10,158,950 பெறுமதியான தவறுகளை கணக்கீட்டு நியமப் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் ஒப்பீட்டு ரீதியில் சரிப்படுத்தப்படவில்லை.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 13 இன் 37 ஆம் பந்திக்கு அமைவாக 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிதி நிலைமைக் கூற்றில் ரூபா. 645 மில்லியனான இருந்து வருகின்ற இறையிலி நிலங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்களுக்கு உரித்தான 11,178 ஹெக்டயர் நிலம் நியாயப் பெறுமதியில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா. 271,701,475 பெறுமதியான செலவான முழுமையாக தேய்மானமிடப்பட்ட சொத்துக்களை மீண்டும் கணக்கிட்டு நியாயப் பெறுமதிக்கு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 16 இன் 37 ஆவது பந்தியின் பிரகாரம், ஒரே இயல்பு மற்றும் பாவனையுடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் வகைப்படுத்தி கணக்கு வைக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தாலும், மீளாய்வுக்குட்படுத்துகின்ற வருடத்தின் நிதி நிலைமைக்கூற்றில் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான தோட்டங்களில் இருக்கின்ற கணிணிகள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் போன்ற அனைத்து வகையான நிரந்தர சொத்துக்களும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் என்ற தனியான விடயத்தின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 16 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம், விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தாங்கி உயிரியல் சொத்துக்களை நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகணரங்கள் எனும் விடயத்தின் கீழ் தனியொரு விடயமாக முன்வைத்திருக்க வேண்டுமென்றிருந்தாலும், அவை உயிரியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் – 19 இன் 57 ஆவது பந்தியின் பிரகாரம், நிறுவன ஊழியர்களின் சேவைக் காலத்தினைக் கணக்கிடும் போது உள்ளபடியான முறை பயன்படுத்தப்பட வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் அதன் நன்மைகளைக் கணக்கிடும் போது உள்ளபடியான முறை பயன்படுத்தப்படவில்லை.

(ஐ) நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள நிலுவையான ரூபா.1,611,520,641 பெறுமதியான முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பாக நியமம் 40 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்படுகின்ற வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

I. *பந்தி இல. 75 (ஏ) இன் பிரகாரம் குறித்த முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான கொள்வனவு, கட்டுமானம், அபிவிருத்தி, பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் ஆகிய பணிகள் தொடர்பாக உடன்படிக்கைகள் உள்ளனவா என்று வெளிப்படுத்தப்படவில்லை.*

II. *பந்தி இல. 78 (அ) இன் பிரகாரம் ஆதனங்கள் தொடர்பிலான விபரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றிருந்தாலும், 1982 பெப்ரவரி 27 ஆம் திகதியுடைய 181 12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை.*

(ஒ) *இலங்கைக் கணக்கீட்டு நியமம் – 41 இன் 4 ஆவது பந்தியின் பிரகாரம், காட்டுப் பயிர்ச் செய்கையினை நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்க வேண்டுமென்றிருந்தாலும், ரூபா. 35,642,201 பெறுமதியான காட்டுப் பயிர்ச்செய்கை தாங்கி உயிரியல் சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.*

(ஓ) *இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 41 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை நியாயப் பெறுமதியில் அளவிடப்பட வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தின் 11 தோட்டங்களின் 726.73 ஹெக்டயர் நிலப்பரப்பில் பரந்துள்ள வனப் பயிர்ச்செய்கையானது மீளாய்வு வருடத்தின் இறுதியில் கணிப்பீடு ஏதுமின்றி அல்லது நியாயப் பெறுதியில் குறிப்பிடாது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா. 3,314,581,133 என்று குறிப்பிட்டிருந்தாலும், அதற்கு சரியான 4 சதவீத தேய்மானப் பெறுமதியும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வு வருடத்தில் இந்தப் பயிர்ச்செய்கையை முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கையாகக் கருதி தேய்மானமிட்ட ரூபா. 1,182,710 வினை வருமானக் கூற்றில் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததனால் அந்தப் பெறுமதியினால் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது.*

(ஔ) *இலங்கைக் கணக்கீட்டு நியமம் – 41 இன் 43, 44 மற்றும் 45 ஆம் பந்திகளின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் விபரங்களை முதிர்ச்சியடைந்த மற்றும் முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கை என வெவ்வேறாகக் காண்பிக்க வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தியிருந்த ரூபா. 193,172,503 பெறுமதியான உயிரியல் சொத்துக்களை அவ்வாறு வகைப்படுத்தி முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.*

1.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புரைகளின் 3.1.4.2 ஆம் இலக்கக் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக, நுகரத்தக்க உயிரியற் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்தாலும், ரூபா. 3,314,581,133 பெறுமதியான உயிரியல் சொத்துக்களை நியாயப் பெறுமதியில் கணக்கிடாது 2012 இல் இருந்த பெறுமதிக்கே மீளாய்வு வருடத்திலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

(அ) *கூட்டுத்தாபனம் மீளாய்வுக்குட்படுத்தும் வருடத்தில் செலுத்த வேண்டியிருந்த தோட்ட ஊழியர் சேமலாப நிதியம் ரூபா. 187,457, ஊழியர் நம்பிக்கை நிதியம் ரூபா. 175,483, ஊழியர் சேமலாப நிதியம் ரூபா. 194,753 மற்றும் இலங்கை தோட்டக்காரர்களின் மேலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையான ரூபா. 319,722 ஆகிய தொகைகள் இரு முறை குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக செலுத்த வேண்டிய பெறுமதி அந்தப் பெறுமதியினால் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்ததுடன் குறித்த திரள் செலவு ரூபா 877,414 இனால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டது.*

(ஆ) ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்கு கூட்டுத்தாபனத்தினால் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள வீதிக்காக கிடைத்த வருமானம் நிதி அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருப்பதனால் மீளாய்வு வருடத்தில் வேறு வருமானங்கள் ரூபா. 6,007,640 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனம் இலங்கை வங்கியின் ஹய்ட்பார்க் கிளையில் பேணிவருகின்ற 2327550 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கின் மேலதிகப் பற்று நிலுவையான ரூபா. 4,123,000 வினை நிதிக்கூற்றில் குறைவாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைக் கணக்கு அந்தப் பெறுமதியினால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனம் ரூபா. 1,609,054 பெறுமதியான நுளம்புக்கூறுகளை பௌதீக ரீதியாக மதிப்பிடாது 2017 ஆம் ஆண்டின் இருப்புப் புத்தகத்தின் அடிப்படையில் மீளாய்வு வருடத்தில் நிதிக் கூற்றில் உள்ளடக்கியிருந்தது.

(உ) ஐந்து தோட்டங்களுக்குரிய பௌதீக ரீதியாக இல்லாத நாற்று மேடைகள் மீளாய்வு வருடத்தின் நிதிக்கூற்றில் இனங்காணப்பட்டுள்ளதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் ரூபா. 3,594,787 கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் நட்டமும் அந்தப் பெறுமதியினால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) நிதிப் பாய்ச்சற் கூற்று கீழே குறிப்பிடுகின்ற கணக்கீட்டு வழுக்களுடன் தயாரிக்கப்பட்டிருந்தது.

I. கூட்டுத்தாபனத்தின் மீளாய்வு வருடத்திற்குரிய வணிக செலுத்தல்களின் வேறுபாடு ரூபா. 45,442,707 ஆக இருந்தாலும், அது காசுப் பாய்ச்சற் கூற்றில் ரூபா. 172,413,700 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 126,970,933 பெறுமதியான தொகை தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் அதிகரித்திருந்தது.

II. மீளாய்வு வருடத்தில் பணத்தினால் செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவானது, வழங்கப்பட்ட துணை ஏட்டுக்கு அமைவாக ரூபா. 10,159,690 ஆக இருந்தாலும், காசுப் பாய்ச்சற் கூற்றின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா. 7,145,102 ஆன இருந்ததனால், தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா. 3,014,588 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.2.4 <u>இணக்கமற்ற கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

(அ) கூட்டுத்தாபனத்தினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை நிதிக்கூற்றுக்கு அமைவாக ரூபா. 97,709,342 ஆக இருந்ததுடன், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் கணக்குப் புத்தகத்திற்கு ஏற்ப 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா. 119,318,495 ஆகும். ஆதலால், குறித்த இரு பெறுமதிகளுக்கும் இடையில் ரூபா. 21,609,153 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதான காரியாலயம் மற்றும் தோட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற பொருள் மற்றும் பணப் பரிமாற்றங்களுக்கென நிர்வகிக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்கினுள் ஒவ்வொன்றுடன் குறைநிரப்பாத ரூபா. 75,579,590 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

1.2.5 விவரிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி, உபகரணத்துடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் உரிய பேரேட்டுக்கும் இடையில் ரூபா. 168,874,507 வித்தியாசமும், நுகரத்தக்க தாங்கி உயிரியல் சொத்துக்களுடன் தொடர்புடைய நுகரத்தக்க உயிரியல் சொத்துப் பதிவேடு மற்றும் உரிய பேரேட்டுக் கணக்குக்கும் இடையில் ரூபா. 2,420,933 பெறுமதியான வித்தியாசமும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற நிலுவை மற்றும் பிரதான அலுவலகத்தினால் பேணி வருகின்ற துணை ஏடுகளுக்கு அமைவாக தாங்கி உயிரியல் சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதியும் சேர்க்கப்பட்ட பெறுமதியாக காட்டப்பட்டுள்ள நிலுவைக்கும் இடையில் முறையே ரூபா. 12,043,774 மற்றும் ரூபா. 1,525,154 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பேரேட்டுக் கணக்கிற்கு அமைவாகவும் நிதிக் கூற்றுக்கு அமைவாகவும் பிரதான அலுவலகத்தின் காணிகளின் பெறுமதியில் ரூபா. 1,645,340 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

1.2.6 ***பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்***

(அ) கூட்டுத்தாபனத்தின் கடன்கொடுநர் காலப் பகுப்பாய்வுக்கு அமைவாக 1 முதல் 4 வருடங்கள் வரையில் தீர்ப்பனவு செய்யப்படாத நிலுவை ரூபா. 363,323,605 ஆக இருந்ததுடன், 5 வருடங்களையும் தாண்டிய தீர்ப்பனவு செய்யாத நிலுவை ரூபா. 700,185,731 ஆக இருந்ததனால், குறித்த கடன் நிலுவை தீர்க்கப்படாததன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கள் மிகை மதிப்பிடப்படும் ஆபத்து இருந்தது.

(ஆ) தோட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய முறையில் பங்களிப்புப் பணம் செலுத்தப்படாமையினால் மீளாய்வுக்குட்படுத்தும் திகதியில் இருந்த பொறுப்பு ரூபா. 16,625,046 தீர்க்கப்படாத அடிப்படையில் இந்த பொறுப்பு தொடர்பாக செலுத்த வேண்டியிருக்கும் மிகைப்பொறுப்புக்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) எட்டு வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ரூபா. 786,379 பெறுமதியான வெட்டுமரங்களுக்காக பெற்றுக்கொண்ட முற்பணத்தை செலுத்தித் தீர்ப்பதற்கோ அதனைப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கள் மிகை மதிப்பிடப்படும் எச்சரிக்கை நிலைமை காணப்படுகின்றது.

(உ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 169,523,942 பெறுமதியான கடன்பட்டோர் நிலுவைகளில், 02 மற்றும் 04 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவையானது ரூபா. 1,984,314 எனும் நூற்றுக்கு 0.7 வீதமாக இருப்பதுடன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா. 87,063,235 எனும் நூற்றுக்கு 50 சதவீதமாக இருப்பதுடன், இக் கடன் நிலுவைகளை மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்தில் மீள அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதால் அவற்றை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை

இருந்ததுடன், அந்த நிலுவையை அறவிட ஐயக்கடனாக ஒதுக்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) 2014 ஒக்தோபர் 15 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடாது ரூபா 6 மில்லியன் பெறுமதியான கடன் தொகை அல்கட்டுவ தோட்டக் கம்பனிக்கு வழங்கி இருந்ததோடு, குறித்த கம்பனி 2015 ஆம் ஆண்டிலிருந்து இக்கடனைச் செலுத்துவதை புறக்கணித்து வருவதன் காரணமாக அறவிடுவதற்கு எஞ்சியிருக்கும் நிலுவையான ரூபா. 1,916,092 வினை ஐயக்கடனாக ஒதுக்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.2.7 **கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை**

(அ) 2012 ஆம் வருடத்துக்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ரூபா. 1,933,043 பெறுமதியான செயலற்ற கணக்கு மீதிகள் மீளாய்வு வருடத்திலும் நிதிநிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தல்கள் என காட்டப்பட்டிருந்ததுடன் இந்நிலுவையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய எத்தகைய ஆவணங்களோ விபரங்களோ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் செயற்றிறனற்ற நிதி நிலைமை காரணமாக தீர்க்கப்பட முடியாதிருந்த ரூபா. 174,415,850 பெறுமதியான 06 கடன்கொடுநர் நிலுவைகளை உறுதிப்படுத்துகின்ற மற்றும் ரூபா. 101,184,952 பெறுமதியான 29 கடன்படுநர் நிலுவைகளை உறுதிப்படுத்துவதற்கும் பிற்காலப் பகுதியில் நிலுவையைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பான அறிக்கையும் கணக்காய்வக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மர விற்பனையின் அடிப்படையிலான கடன் பெறுமதியான ரூபா. 2,801,000 வினை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டு அறிக்கை, விலைப்பட்டியல், வழங்குநர்களின் விபரங்கள் மற்றும் விற்பனை உடன்படிக்கை என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2006 ஆம் வருடத்திலிருந்து 12 தோட்டங்களுக்குரிய மீள்செலுத்த வேண்டிய விலைமனுக்கோரல் வைப்புக்களின் மீதியான ரூபா. 6,379,570 நிதிக்கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் காட்டப்பட்டிருந்ததுடன், அந்நிலுவையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பணிக்கொடை ஒதுக்கங்களுக்கென சீராக்கப்பட்ட ரூபா. 67,350,179 பெறுமதியான பற்று மீதி தொடர்பாக போதிய தெளிவுபடுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) நிதி நிலைமைக்கூற்றில் ஆதனம், பொறி, உபகரணங்களின் கீழ் முந்திய வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்டுள்ள ரூபா. 1,645,345 பெறுமதியான முகாமைத்துவ செலவும் ரூபா. 6,705,259 பெறுமதியான வேறு கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமதியையும் உறுதிப்படுத்துவதற்கு ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) நிதி நிலைமைக் கூற்றில் ரூபா. 1,149,166.505 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் இருக்கின்ற ரூபா. 649,377,816 பெறுமதியான காணிகள், ரூபா. 187,748,858 பெறுமதியான கட்டிடங்கள் என்பவற்றுக்கான உறுதிப்பத்திரங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ரூபா. 148,535,052 பெறுமதியான வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழ் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலகொல்லை, கல்பிஹில்லை, ஹுன்னஸ்கிரியை மற்றும் ரங்களை தோட்டங்களின் பாதைகளை நவீனமயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா. 781,064 பெறுமதியான நிதி ஒதுக்கீட்டினை பிற்போடப்பட்ட சொத்துக்களின் கீழ் இனங்காண்பதற்கு ஏதுவான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உரம், இரசாயனப் பொருட்கள் உள்ளடங்கலாக ரூபா. 4,870,669 பெறுமதியான நுகரத்தக்க இருப்புக்களை பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதியில் இருந்த ரூபா. 25,878,517 பெறுமதியான கடன்பட்டோர் நிலுவை எந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென்றோ அல்லது அந்த நிலுவைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் துணைஏடுகளோ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஓ) 2012 ஆம் வருடத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற, மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்திலும் நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோர் மீதியிலிருந்து குறைத்துக் காண்பித்துள்ள தொகையான ரூபா. 47,537,070 வினை விஷேட பதிவழித்தலுக்கும் மற்றும் ரூபா. 1,591,349 வினை ஐயக்கடன் ஒதுக்கத்துக்கும் பாவித்த அடிப்படை தெளிவுபடுத்தப்படவில்லை என்பதனால் அதன் வழுவற்ற நிலைமையைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப (இ.க.நி) எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வது தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரித்துள்ளேன். எனது கருத்துரைக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை என்பதும் காலோசிதமானவை என்பதும் என நம்பிக்கையாகும்.

1.3 கூட்டுத்தாபனத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்க வேண்டிய வேறு தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்கு வழங்குமென எதிர்பார்க்கின்ற கூட்டுத்தாபனத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ள என்றாலும் நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்களை ஏனைய தகவல்கள் என கருதப்படும். இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்று பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது தொடர்பாக எந்த விதத்திலும் உறுதிகூறுவதில்லை என்பதுடன் எந்த விதமான கருத்துக்களையும் முன்வைக்கவும் மாட்டேன்.

நிதிக் கூற்று பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடைய எனது பொறுப்பு யாதெனில், மேலே இனங்கண்ட ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் போது அவற்றை வாசிப்பதும், அவ்வாறு வாசிக்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுடன் அல்லது கணக்காய்வுடன் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவுடன் அளவுரீதியாக பொருந்துவதில்லையா என்று கருத்திற்கொள்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2020 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் அளவுரீதியான வழுக்கள் காட்டப்பட்டிருப்பதாக நான் ஊகித்தால், சரிப்படுத்த விடயங்களை உரிய தரப்பினருக்கு அறிவிப்பது அவசியம். அதன் பின்னரும், சரிப்படுத்தப்படாத வழுக்கள் காட்டப்பட்டிருப்பின் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைவாக என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

1.4 நிதிக் கூற்று தொடர்பாக முகாமை மற்றும் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்.

இந்நிதிக்கூற்றினை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப தயாரிப்பதும் அதனை நியாயமான முறையில் முன்வைப்பதும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதும் முகாமையின் பொறுப்புக்களாகும்.

நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமையைத் தீர்மானிப்பது முகாமையின் ஒரு பொறுப்பாக இருப்பதுடன், முகாமை கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கோ அல்லது வேறு மாற்று வழி ஏதும் இல்லாதபட்சத்தில் அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கோ தீர்மானித்தாலே அன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாட்டினை கொண்டு நடாத்துவது என்ற அடிப்படையில் கணக்குகளை பேணுவதும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்படுத்துவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமையின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினரே அதன் நிதி அறிக்கையிடல் செயற்பாடு சம்பந்தமான பொறுப்புக்களைக் கூற வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணி வரல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தத்தில், முழு நிதிக்கூற்றிலும் மோசடி அல்லது தவறினாலான அளவு சார்ந்த பிறழ்கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வினை இலங்கைக் கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக கணக்காய்விடும் போது, அது எப்போதும் அளவுசார்ந்த பிறழ்கூற்றுக்களை

வெளிப்படுத்தும் என உத்தரவாதப்படுத்தப்படாது. மோசடி அல்லது தவறிலிருந்தோ, தனி அல்லது கூட்டுச் செல்வாக்கினாலோ பிறழ்கூற்றுக்கள் ஏற்பட முடியுமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்விடல் நியமதரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயுறவினை பேணுகின்றேன். மேலும்,

- மோசடி அல்லது தவறு போன்ற காரணங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார்ந்த பிறழ்கூற்றின் ஆபத்துக்களை அடையாளப்படுத்தும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சூழ்நிலைக்கேற்ப கணக்காய்வு ஒழுங்குவிதிகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக போதியளவிலான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வது எனது கருத்துரைக்கு அடிப்படையாக இருக்கும். அளவு சார்ந்த பிறழ்கூற்றுக்களினால் இடம்பெறும் தாக்கத்தினை விட மோசடியின் விளைவினாலான தாக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருப்பதுடன், கருத்தொற்றுமை இன்மை, போலி ஆவணங்களைத் தயார்செய்தல், வேண்டுமென்றே புறக்கணித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மீறுதல் என்பன ஒரு மோசடி ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் கருத்திலல்லாது, காலோசிதமான, பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக ஒரு விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது,

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவமும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தேர்ச்சியான தொழிற்பாடு தொடர்பாக அளவுசார் நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது பற்றி பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. அளவுசார் நிச்சயமற்றதன்மை இருப்பதாக நான் ஊகித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருப்பின் எனது கருத்தை மாற்ற வேண்டியிருக்கும். எவ்வாறிருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கியுள்ள நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் எனபன மதிப்பிடப்பட்டதுடன், அவற்றுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த நிதிக்கூற்றுக்களில் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடு பற்றிய அறிக்கைகள்

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைப்பாடுகள் குறித்து விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் பாதகமான கருத்துரைக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினாலான செல்வாக்கு தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதோடு எனது பரீட்சித்தலில் தெளிவாகியது போன்று கூட்டுத்தாபனம் சரியானதொரு நிதி அறிக்கையைப் பேணி வரவில்லை.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (இ) (III) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று முந்திய வருடத்துடன் இணங்குகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (Iv) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் நான் பரிந்துரைத்த 1.2.1 (இ), (ஈ), (ஊ),(எ), (ஏ), (ஐ), 1.2.2, 1.2.3 (இ), (ஈ), 1.2.4, 1.2.5 (அ), (ஆ), 1.2.6 (ஆ), (இ), (ஈ) மற்றும் 1.2.7 (அ), (இ), (ஈ), (எ), (ஏ), (ஐ), (ஒ) ஆகிய பரிந்துரைகள் தவிர்த்து ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும், அவ்வாறே, அளவுசார்ந்த விடயங்களுடன் வரையறுப்பதனால், கீழே குறிப்பிடும் கூற்றுக்களைக் கூறும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு உறுப்பினருக்கு கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்டு ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பான ஏதேனுமொரு தொடர்பு இருத்தல்

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்துக்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு ஏதேனும் பொது அல்லது விஷேட ஒழுங்கு விதிமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருத்தல்,

	சட்ட விதிமுறைகள்/ ஒழுங்கு முறைகளின் குறிப்பீடு	**விபரம்**

(அ)	2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதியுடைய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்	MM வகைக்குரிய உத்தியோகத்தர்கள் வாகனப் படியைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் கூட்டுத்தாபனத்தினால் அந்த வகைக்குரித்தான இரண்டு உத்தியோகத்தகளுக்கு ரூபா. 1,200,000 பெறுமதியான உத்தியோகபூர்வ வாகனப் படியும் ரூபா. 394,560 பெறுமதியான எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன.
(ஆ)	2020 ஜனவரி 27 ஆம் திகதியுடைய PED 01/2020 இலக்க பொது முயற்சிகள் சுற்றிநிருபத்தின் 1.2 ஆம் பந்தி	தலைவரின் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 150 லீற்றராக இருந்தாலும், அந்த வரையறையையும் மீறி பெற்றுள்ள ரூபா. 280,907 பெறுமதியான 1,843 லீற்றருக்கு பணிப்பாளர் சபையின் அனுமதி 2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதி பெற்றுக்கொண்டுள்ளது.
(இ)	SLSPC/201617/May/10/10BP/146 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரம்	பொது முகாமையாளருக்கான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதாதிருக்கும் விஷேட சந்தரப்பங்களில், மாதாந்த எரிபொருள் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 120 லீற்றல் எரிபொருளுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அந்த வரையறையை மீறி 2020 இல் 1909 லீற்றர் எரிபொருள் பெற்றுக்கொண்டுள்ளதுடன் அதன் மொத்தப் பெறுமதி ரூபா. 279,282 ஆகும்.
(ஈ)	2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	ஒவ்வொரு வாகனத்தையும் 12 மாதங்களினுள் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓடிய பிறகு அல்லது இயந்திரத்தின் பிரதான திருத்தத்திற்குப் பிறகு ஆகிய விடயங்களுள் முதலாவதாக நிகழும் சந்தர்ப்பத்திற்குப் பிறகு எரிபொருள் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றிருந்தாலும் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்துகின்ற 55 வாகனங்களுக்கு அத்தகைய எரிபொருள் நுகர்வு தொடர்பான சோதனை ஏதும் நடாத்தப்படவில்லை.
(உ)	இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் 1645 (அ) மற்றும் 2006 ஜூலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3 (Xii) உறுப்புரை	கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் வாகனக் குறிப்புப் புத்தகமொன்றை பேணி வரவேண்டும் என்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 55 வாகனங்களுக்கு அவ்வாறு வாகனக் குறிப்புப் புத்தகங்கள் பேணப்படவில்லை.
(ஊ)	1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 15 ஆம் உறுப்புரை மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ii பகுதியின் 16(i) ஆம் உறுப்புரை	2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதி வரையில் ரூபா. 413,339,668 பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியப் பொறுப்பினையும் ரூபா. 23,804,025 பெறுமதியான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பினையும் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், அதன் விளைவாக 2019 ஆம் ஆண்டாகும் போது கூட்டுத்தாபனத்துக்கு முறையே ரூபா. 43,640,418 மற்றும் 2,658,745 பெறுமதியான மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்தது.
(எ)	1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள்	ஒரு உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் சென்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள்

	செலுத்துதல் சட்டத்தின் ii ஆவது பகுதியின் (5) (1) உப பிரிவு	பணிக்கொடைகள் செலுத்தப்பட வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு பணிக்கொடைகள் குறித்த திகதியில் செலுத்தப்படாமையினால் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைகள் கணக்கின் நிலுவை ரூபா. 402,314,300 பற்றாக்குறையாக இருந்ததுடன், 2020 இன் வருட இறுதியில் ரூபா. 14,296,172 மிகை விதிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.
(ஏ)	2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதியுடைய 01/2018 ஆம் இலக்க சொத்துக்களின் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 2 (அ) பந்தி மற்றும் 02/2015 ஆம் இலக்க 2015 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதியுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி	கூட்டுத்தாபனத்திற்குரிய ஆனால் தற்போது பாவனைக்குத் தகாத, பாவனையிலிருந்து அகற்ற வேண்டியுள்ள 20 லொறிகள், 24 இழுவை இயந்திரங்கள் மற்றும் ட்ரோலர், 09 கார்கள், 03 ஜீப் வண்டிகள், 01 அவசர ஊர்திகள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 36 மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்கலாக மொத்தம் 58 வாகனங்களை 2022 டிசம்பர் 17 ஆம் திகதி வரை விற்றொழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஐ)	இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 395 (ஆ)	வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பாக ஒரு மாதம் நிறைவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்க வேண்டும் என்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் தயார்செய்திருந்த இணக்கக்கூற்றில் திகதி குறிப்பிடப்படாதிருந்ததால் குறித்த விதிமுறைக்கேற்ப செயற்பட்டிருக்கின்றதா என்று பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் 14 வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் வங்கிக் கூற்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(ஒ)	2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்தின் 113 ஆம் உறுப்புரை	எவரேனுமொரு ஆள் அல்லது பங்குடைமை வியாபாரம் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் காலாண்டின் நிறைவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15, மற்றும் அடுத்த வருடத்தின் வரிமதிப்பீட்டாண்டின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாத வரி மீதி இருப்பின் அடுத்த வருடத்தின் செப்டம்பர் 30 ஆம் திகதி அதற்கு முன்பு செலுத்த வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனம் 2020/ 2021 மதிப்பீட்டிற்குரிய வருமான வரி 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தி முடிக்காது இருந்ததுடன் வருமான வரி பொறுப்பும் கணக்கிடப்படவில்லை.
(ஒ)	2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்தின் 113 ஆம் உறுப்புரை	வருமான வரி அறிக்கையை அடுத்த வருடத்தின் நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்க வேண்டும் என்றிருந்தாலும், கூட்டுத்தாபனம் 2020 /2021 மதிப்பீட்டு வருடத்திற்குரிய வரி வருமான அறிக்கையை 2021 டிசம்பர் 30 ஆம் திகதி வரை உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒள)	2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 5 (2) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 5.1.3 ஆம் பிரிவு	நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு அடுத்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற வணிக நடவடிக்கைகளை உள்ளடக்கிய வணிகத் திட்டத்தினைத் தயார்செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிரல் அமைச்சு, அரச முயற்சியாண்மை தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனத்தினால் அத்தகையதொரு அறிக்கை தயார்செய்யப்படவில்லை.
(க)	2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 5 (2) ஆம் பிரிவு	வணிகத் திட்டத்தின் அடிப்படையில் அடுத்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் வணிகச் செயற்பாடுகள் உள்ளடங்கிய செயல்திட்டம் ஒன்றைத் தயார்செய்ய வேண்டும் என்றிருந்தாலும் கூட்டுத்தாபனத்தினால் 2020 வருடத்திற்கான நடைமுறைச் செயல்திட்டம் பணிப்பாளர் சபையினால் தயார்செய்யப்படவில்லை.
(ச)	2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் (i) 4.2.3 மற்றும் 4.2.6 உறுப்புரைகள் (ii) 5.2.5 ஆம் உறுப்புரை	 செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளைத் தயார்செய்து அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனம் குறித்தவாறான அறிக்கைகளைத் தயார் செய்திருக்கவில்லை. நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு வருடாந்த செலவுத் திட்டத்தினைத் தயார்செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு நிரல் அமைச்சான பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த வரவு செலவுத் திட்டம் தாமதித்து தயார்செய்து 2020 பெப்ரவரி 12 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு குறித்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன்.
(ட)	1995 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட எஸ்ஏஅய்/ஏ/01/34 ஆம் இலக்கமுடைய காணிகளின் உரிமை மாற்றம் தொடர்பான வழிகாட்டற் கோவையின் 7 ஆம் உறுப்புரை	அரச காணிகளை குத்தகைக்கு விடும் போது அரச பிரதான மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற சந்தைப் பெறுமதி அடிப்படையில் குத்தகை வாடகையைத் தீர்மானிக்க வேண்டும் என்றிருந்தாலும் கூட்டுத்தாபனம் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 02 ரூட் 2.87 பேர்ச்சஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்கு வழங்கப்பட்டிருந்த 2 ரூட் 6 பேர்ச் காணிகளுக்கு 2022 மார்ச் மாதம் 02 ஆம் திகதி வரை அரச மதிப்பீடு பெற்றிருக்கவில்லை என்பதுடன் ஓபல்கலை அரச

		தோட்டத்தின் 1 ரூட் 39.07 பேர்ச்சஸ் காணியை டயலொக் ப்ரோட்பேன்ட் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கும்போது வருடாந்த குத்தகை வாடகையை பிரதான மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைச் சந்தைப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்படாமையினால் மீளாய்வு வருடம் வரை கூட்டுத்தாபனத்திற்கு ரூபா. 6,853,120 குத்தகை வாடகை வருமானம் அற்றுப்போனதாக அவதானிக்கப்பட்டது.
(த)	1979 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன திருத்தச் சட்டத்தின் 07(1) உப பகுதி	ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து 2 ரூட் 6 பர்ச்சஸ் அளவு நிலத்தை வரையறுக்கப்பட்ட ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்கு 50 வருட காலத்திற்கு அமைச்சரின் முன் அனுமதியின்றி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுடன் இணங்காத விதத்தில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும், விளைத்திறனுடனும், குறிப்பிட்ட காலத்தினுள் உரிய சட்ட விதிமுறைகளுக்கேற்ப கொள்வனவு செய்து பாவிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டற் கோவையின் 4.2.1 ஆம் உறுப்புரையின் பிரகாரம், தோட்டங்களுக்கான நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய அதிகார நிலை மட்டம், ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கும் திகதி மற்றும் முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கும் திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புரைகள்

3.1 செயலாற்றுகை

(அ) பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக, 2020 இல் இலங்கையில் ஒரு ஹெக்டயருக்கான வருடாந்த தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1377 கிலோ கிராமாக இருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 15 தோட்டங்களில் குறித்த விளைச்சல் 103 முதல் 992 கிலோ கிராமுக்கு இடைப்பட்ட மிகவும் குறைவாகவே இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்துக்கு 4189 ஹெக்டயர் நிலப்பரப்புத் தேயிலைப் பயிர்ச்செய்கை உரித்தாக இருந்தாலும், அவற்றுள் 2838 ஹெக்டயர் 100 வருடங்களை விட பழைய தேயிலைப் பயிர்ச்செய்கை ஆகும். மேலும், 135 ஹெக்டயர் பரப்பில் மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) வெளித்தோட்டக்காரர்களுக்கு வழங்கியிருந்த 1356 ஹெக்டயர் நிலப் பரப்பிலிருந்து உற்பத்தி செய்திருந்த மொத்த தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 2019 ஆம் ஆண்டில் 99,850 கிலோ கிராமாக இருந்ததுடன், அது 2020 இல் 157,987 கிலோ கிராமாக இருந்ததுடன், பெருந்தோட்ட அமைச்சினால் முன்வைக்கப்பட்டிருந்த தேயிலைத் தொழிற்சாலையின் தரவுகளுக்கு அமைவாக குறித்த நிலப்பரப்பின் வருடாந்த நியம தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 1,867,212 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென்றிருந்தாலும் வெளித் தோட்டக்காரர்கள் ஒட்டுமொத்த விளைச்சலின் வெறும் நூற்றுக்கு 8 சதவீதத்தினை மாத்திரம் உற்பத்தி செய்தமை கருத்து முரண்பாட்டுக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கமைவாக 2020 இல் உத்தேச உற்பத்தி 1,814,592 கிலோ கிராமாக இருக்குமென்றிருந்தாலும், குறித்த வருடத்தில் உற்பத்தி 1,584,373 கிலோ கிராமாக இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியின் 87 சதவீதமாகும்.

(உ) 2020 வருடம் தொடர்பாக தேயிலை ஏற்றுமதிச் சபையினால் இணையத்தில் பதிவேற்றியுள்ள தரவுகளுக்கு அமைவாக ஒரு கிலோகிராம் தேயிலைக்கான சாதாரண விற்பனைப் பெறுமதி ரூபா. 631 ஆக இருக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தாலும், கூட்டுத்தாபனத்தின் இப்பெறுமதியானது ரூபா. 386 முதல் ரூபா. 470 க்கு இடைப்பட்டதாக குறைவாகவே இருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் 17 தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 11,012 ஹெக்டயராக இருந்தாலும், அதில் தேயிலைக்காக 4,189 ஹெக்டயர் நிலமும், இறப்பருக்காக 65 ஹெக்டயர் நிலமும், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் வனப் பயிர்ச்செய்கைக்கு 2471 ஹெக்டயர் நிலமும் பயன்படுத்தப்பட்டன. எஞ்சியுள்ள 4288 ஹெக்டயர் நிலம், அதாவது நூற்றுக்கு 39 வீதமான நிலம் வருமானம் உழைத்துத் தரும் எத்தகைய நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.

(எ) 2012 இல் கூட்டுத்தாபனத்தின் முடிவுத் தேயிலை உற்பத்தி 1,911,616 ஆக இருந்ததுடன், அது மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடமாகும் போது 1,742,360 கிலோகிராம் வரை ஐந்து வருடங்களில் 169,256 கிலோ கிராமினால், அதாவது 09 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் அது 2020 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சலின் 30 சதவீதாகும்.

(ஏ) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளுக்கு அமைவாக 2020 இல் ஒரு ஹெக்டயரில் இருக்க வேண்டிய இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 516 ஆக இருக்க வேண்டுமென்றிருந்தாலும், வஹலந்துவை தோட்டத்தில் 65 ஹெக்டயர் நிலப் பரப்பில் கிட்டத்தட்ட 33,540 இறப்பர் செடிகள் இருக்க வேண்டுமென்றிருந்தலும், அதில் 18,634 இறப்பர் செடிகளே இருந்தன. . அது இருக்க வேண்டிய அளவின் 55 சதவீதமாகும். 2020 இல் ஒரு ஹெக்டயரின் சாதாரண இறப்பர் உற்பத்தி 608 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென்றிருந்தாலும் வஹலந்துவை தோட்டத்தின் சாதாரண இறப்பர் உற்பத்தி 456 கிலோ கிராம் ஆகும். இது சராசரி உற்பத்தியின் நூற்றுக்கு 75 வீதமாகும்.

3.2 ஆளணி நிர்வாகம்

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017 ஜூலை 25 ஆம் திகதிய, 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதிய, 2018 டிசம்பர் 21 ஆம் திகதிய மற்றும் 2019 ஒக்டோபர் 09 திகதிய கடிதங்களின் பிரகாரம், 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் பிரதான காரியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 109 நிரந்தர பதிவிகள், 03 ஒப்பந்த அடிப்படையிலான பதவிகள் மற்றும் 2 தற்காலிகப் பதவிகள் இருக்க வேண்டுமென்றிருந்தலும், 2020 டிசம்பர் 31 ஆந் திகதியாகும் போது நிரந்தர பதவியில் 19 வெற்றிடங்கள் இருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக 04 பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 08 பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன், 2 பதவிகளுக்கான வெற்றிடமும் இன்னும் 02 பதவிகளுக்கு தற்காலிக வெற்றிடமும் இருந்துள்ளன. இதற்கு மேலதிகமாக, ஒப்பந்த ஆளணிக்கு மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் ரூபா. 3,126,189 மற்றும் நிரந்த பதவி ஆளணிக்கு மேலதிகமான நியமனங்களுக்கு ரூபா. 2,417,804 சம்பளம் மற்றும் வேதனம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தாபன விதிக்கோவையின் 11 ஆம் உறுப்புரையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், ஏதாவதொரு பதவியில் வெற்றிடம் ஏற்படுமிடத்து உடனே அப்பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றிருப்பினும், 2008 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்து வருகின்ற முகாமையாளர் – சட்டம், எனும் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்காது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு மீளாய்வு வருடத்தில் ரூபா. 220,609 செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) 2018 ஆம் ஆண்டு 18 ஆம் திகதியுடைய 3/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் II ஆம் பந்தியின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி 07 பதவிகளுக்கு ஒப்பந்த மற்றும் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வு வருடத்தில் ரூபா. 3,051,901 வினை கூட்டுத்தாபனம் செலவு செய்துள்ளது.

(ஈ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பிரதான அலுவலகத்தில் 07 ஆட்சேர்ப்பும் 02 பதவியுயர்வும் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு ரூபா. 2,934,690 சம்பளம் மற்றும் வேதனம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1 பந்தியின் பிரகாரம் ஏதேனுமொரு பதவிக்கு ஆட்சேர்ப்புக்கு இருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை கூட்டுத்தாபனத்திற்கு இருக்கவில்லை.

(எ) தாபன விதிக்கோவையின் II ஆவது உறுப்புரையின் 3 ஆம் உப பிரிவின் பிரகாரம் அரச சேவையின் அனைத்து வெற்றிடங்களுக்கும் நியமன அதிகாரியினால் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வு வருடத்தில் கூட்டுத்தாபனத்தினால் பகிரங்க விண்ணப்பங்களைக் கோராது 04 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) கண்டி, காலி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 08 தோட்டங்களின் 450 பேர்ச்சஸ் நிலப் பரப்பிலும் மிட்லன்ட் தோட்டத்தின் 02 உத்தியோகபூர்வ இல்லங்களிலும் ஹுன்னஸ்கிரிய தோட்டத்தின் 2 உத்தியோகபூர் இல்லங்களிம் கிட்டத்தட்ட 28 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சட்டரீதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனம் மீளாய்வு வருடத்தின் இறுதி வரையில் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள ஆதனங்களுக்காக குறித்த குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா. 8,911,700 பெறுமதியான குத்தகை வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒப்பம்
டப்.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று, சட்டம் மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக நிறுவனத்தினால் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள். (வரைபு)

குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளுக்கான விடைகள் /விடயங்களைத் தெளிவுபடுத்துதல்.

1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

(அ) (ஆ) 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள இக்குறைபாடுகள் 2021 நிதிக்கூற்றில் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் ஏற்படாதவாறு 2022 வருடத்திற்கான நிதிக்கூற்றினைத் தயாரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றோம்.

2019.12.31 ஆம் திகதிக்குரிய நிதி நிலைமைக் கூற்றில் குத்தகைக்கு விட்டுள்ள காணிகள் எனும் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 649,377,816.36 பெறுமதியான தொகையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(ஈ) ***கூட்டுத்தபானத்திற்கு உரித்தான*** *காணிகளுள் வஹலந்துவைத் தோட்டத்தினை மாத்திரம் ரூபா. 620 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அந்தப் பெறுமதியையும் 1996 இல் காணிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்துள்ள பணத்தையும் உள்ளடக்கி 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மொத்த சொத்துக்களின் பெறுமதியான ரூபா. 645 மில்லியன் காட்டப்பட்டுள்ளது. ஏனைய காணிகளை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு செலவாகும் பணத்தினை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் குறித்த பணம் கிடைத்ததும் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.*

(உ) *பூச்சிய பெறுமதில் இருக்கும் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் பணியை 2023 இல் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதை என்பதை அறியத்தருகிறோம்.*

(ஊ) *2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள இந்தத் தவறை 2022 நிதிக்கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகிறோம்.*

(எ) *2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள இந்தத் தவறை 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.*

(ஏ) *2023 ஆம் ஆண்டுக்குரிய நிறுவனத்தின் ஊழயர் நலன் பங்களிப்புக்களைக் கணக்கிடும் போது ஆயுள் கால முறையைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அறியத்தருகிறோம்.*

(ஐ) *கூட்டுத்தாபனத்தினால் பிராந்திய தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ள ஆதனங்களின் பெறுமதியை நிதிகூற்றில் முதலீட்டு ஆதனங்களாக காட்டப்பட்டுள்ளதுடன், அந்த ஆதன விபரங்களையும்*

உடன்படிக்கை தொடர்பான விடயங்களையும் 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் என அறியத்தருகிறோம்.

(ஒ) 2020 இன் நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள இந்தத் தவறை 2021 நிதிக்கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஓ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை மதிப்பிடுவதை 2023 இல் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அறியத்தருகிறோம். வனப் பயிர்ச்செய்கை தொடர்பில் தவறுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ள பெறுமானத் தேய்வுப் பெறுமதியை 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றில் சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஔ) இந்தத் தவறை 2022 நிதிக்கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்படுமென அறியத்தருகிறோம்.

1.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள வணிக நோக்கிலான வெட்டுமரப் பயிர்ச்செய்கையை மதிப்பீடு செய்யும் பணி 2023 இல் ஆரம்பிக்கப்படுமென அறியத்தருகிறோம்.

1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ள ரூபா. 877,414 பெறுமதியான செலவினத்தை 2021 ஆம் வருட நிதிக்கூற்றினைத் தயாரிசெய்யும் போது சீர்செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் இல்லாதவாறு 2022 வருட நிதிக்கூற்று தயார்செய்யப்படுமென தயவுடன் அறியத்தருகிறோம்.

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம் 2327550 க்குரிய நடைமுறைக் கணக்கின் கீழ் 2012 ஆம் வருடத்திற்கு முந்திய வங்கி மேலதிகப்பற்றுக்காக வங்கியினால் அறவிட்ட வட்டியிலிருந்து 50% இனை நீக்குவதற்கு வங்கி உடன்பட்டதனால் அதற்கேற்ப ரூபா. 4,123,000 பணம் ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டது. என்றாலும், வங்கிகள் குறித்த தொகையை நீக்குவதை தாமதப்படுத்தியதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தற்போது இலங்கை வங்கி குறித்த வட்டியை நீக்குவது தொடர்பாக 2022.03.03 ஆந் திகதி கடிதம் வெளியிட்டுள்ளதுடன் அதற்கமைவாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)

(ஈ) ரூபா. 1,609,054 பெறுமதியான நுளம்புக் கம்பி இருப்பு 2021 இல் விலைமனுக் கோரல் மூலம் விற்பனை செய்யப்பட்டதுடன் அது தொடர்பான கணக்கு 2021 இல் சீர்செய்யப்பட்டது.

(உ) தோல்வியடைந்துள்ள தேயிலை நாற்று நடுகை தொடர்பாக பரீட்சிப்பதற்காக 2023 இல் ஒரு குழுவினை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஊ) I.II கணக்காய்வில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்று தயார்செய்யப்பட்டுள்ளது.

1.2.4 <u>இணக்கமற்ற நிர்வாகக் கணக்குகள்</u>

(அ) 2023 இல் இந்த நிலுவைகளுக்கிடையில் இருக்கும் மாற்றத் பற்றி ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கிடையிலான நடைமுறைக் கணக்குகளில் இருக்கும் வேறுபாடுகளைப் பரீட்சித்து 2022 இல் உரிய கணக்கு சீராக்கல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

1.2.5 விவரிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கோமரை தோட்டத்தின் தோட்ட அதிகாரியாக கடமைபுரிந்த ஒரு உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு கிடைத்து 2017.02.26 ஆம் திகதி நிறுவனத்தின் பொது முகாமையாளராக கடமையேற்றதன் காரணமாக அந்த உத்தியோகத்தருக்கான பணிக்கொடை ஒதுக்கீட்டுப் பணம் கோமறைத் தோட்டத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்படாமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. என்றாலும், மொத்தத்தில் கூட்டுத்தாபனத்தின் பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதிகளில் இதனால் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்றும் குறித்த சீராக்கல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அறியத்தருகிறோம்.

(ஆ) 2020.12.31 திகதிக்குரிய நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பு இல. 9.1 இன் கீழ் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் பெறுமதி ரூபா. 3,314,133 ஆக காட்டப்பட்டுள்ளதுடன், குறித்த தொகை கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

2017.12.31 ஆந் திகதிக்கு கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வணிக நோக்கிலான வனப்பயிர்ச்செய்கையின் பெறுமதி	*3,312,160,200.00*
(+) 2018 இல் கூட்டுத்தாபனம் தோட்ட வணிக நோக்கிலான பயிர்ச்செய்கைக்கு செலவு செய்துள்ள பணம்.	*2,420,932.89*
முழு மொத்தம்	*3,314,581,132.89*

மேற்குறிப்பிட்ட நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களுக்காக கூட்டுத்தாபனம் நிலையான ஏடுகளைப் பேணிவரவில்லை. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ரூபா. 2,420,933 பெறுமதியான தொகை ஒவ்வொரு தோட்டங்களுக்கு அமைவாக தயார்செய்துள்ள முறைமையைக் காட்டும் ஒரு ஆவணம் நிறுவனத்திற்கு இருப்பதுடன் அதன் சான்றுபடுத்தப்பட்ட ஒரு பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

கணக்காய்றிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பற்றிய விபரத்தைக் காண்பிக்கும் ஆவணங்களுக்கிடையில் இருக்கும் ரூபா. 168,874,507 பெறுமதியான வேறுபாடு பற்றி தற்போது பரீட்சித்தல்கள் இடம்பெறுவதுடன், நிலையான சொத்துக்கள் பற்றிய ஆவணங்களுக்குரிய சரிப்படுத்தல் 2022 வருடத்திற்கான நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற நிலுவை மற்றும் பிரதான காரியாலயத்தினால் பேணிவருகின்ற துணை ஏட்டுக்கு அமைவாக தாங்கி உயிரியல் சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி மற்றும் சேர்ப்பனவுகளுடன்

காட்டப்பட்டுள்ள நிலுவைகளுக்கிடையில் இருக்கும் வேறுபாட்டினை பரீட்சிப்பதுடன் அது தொடர்பான சரிப்படுத்தல்கள் 2022 வருடத்திற்கான நிதிக்கூற்றினைக் தயாரிக்கும் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

1.2.6 பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பல்வேறு வருடங்களாக கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக கடன்கொடுநர்களின் நிலுவைகளை உரிய முறையில் செலுத்தித் தீர்க்க முடியாதிருந்தது. என்றாலும், கூட்டுத்தாபனம் கடன்கொடுநர்களின் விபரங்களைத் திரட்டுவதுடன் அதற்கேற்ப காலங்கடந்த கடன்கொடுநர்களின் கடன்களை செலுத்துவதற்கோ அல்லது அந்த நிலுவையை மீண்டும் வருமானமாக பெறுவது தொடர்பாகவோ 2022 வருடம் முடிவுறுதற்கு முன்பு தீர்மானிக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

(ஆ) பல்வேறு வருடங்களாக கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கான பணத்தை உரியவாறு அனுப்ப முடியவில்லை. இந்தக் கொடுப்பனவுகளுக்குத் தேவையான நிதியை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதுடன் அந்தப் பணம் கிடைத்த பிறகு இந்தக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகிறோம்.

(இ) SLSPC/PL/TB/T-88/2010 மற்றும் SLSPC/PL/TB/T-88/ 2011 எனும் மரவிற்பனை தொடர்பான விலைமனுகோரலுக்கு பெற்றக்கொண்ட பணத்தை (மீளளிக்கப்பட வேண்டிய வைப்புப் பணம்) மீளளிக்கப்படாமைக்கான காரணம் வியாபாரிகளுக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாகும். இது தொடர்பான பரீட்சித்தல்களை மேற்கொண்டு 2023 இல் குறித்த பணத்தை கூட்டுத்தாபனத்தின் வருமானமாக கணக்கு வைப்பதற்கோ அல்லது அந்தப் பணத்தை குறித்த தரப்பினருக்கு வழங்குவது தொடர்பாகவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஈ) அறவிட முடியாதுள்ள கடன்பட்டோர் தொடர்பான விபரங்களைள் பரீட்சிப்பதற்கு தற்போது ஒரு உத்தியோகத்தர் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விபரங்கள் கிடைத்த பிறகு குறித்த பணத்தை அறவிட்டுக்கொள்ளல் அல்லது ஏடுகளிலிருந்து நீக்குவது தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஒரு குழுவினை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு பணிப்பாளர் சபை கூறும் தீர்மானங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

(உ) எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா. 1,916,092 இனை பெருந்தோட்ட அமைச்சுடன் கலந்துரையாடி அவற்றை ஏடுகளிலிருந்து நீக்கி விடவோ அல்லது அறவிடுவதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகிறோம்.

1.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை

(அ) *நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கியுள்ள ரூபா. 1,933,043 பெறுமதியான செயலற்ற கணக்கு மீதி 2012 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்கொணரப்பட்ட மீதிகளாக இருப்பதனால் இது தொடர்பாக பரீட்சித்து உரிய கணக்கு சீராக்கல்கள் 2022 நிதிக் கூற்றில் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.*

(ஆ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ரூபா. 235,826,809 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதி உருவாகியுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. என்றாலும், கூட்டுத்தாபனத்தின் சீரற்ற நிதி நிலைமையினால் இந்த நிலுவைகளை செலுத்தி முடியாதுள்ளது.

விபரம்	பணம் ரூபா.
முற்பணம் – ஓபல்கலை	4,480,000
பொலி கெமிக்ஸ்	715,389
பர்த் தோட்டம்	6,870,411
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம)	97,709,342
அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்	28,709,029
உரக் கூட்டுத்தாபனம்	35,931,679
சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி	36,410,959
இலங்கை கனிய மனல் நிறுவனம் – கடன்	25,000,000
மொத்தம்	235,826,809

நிலுவையை உறுதிப்படுத்துவது தொடர்பான கடிதங்களை நேரடியாக ஜனவசம கட்டிடத்தில் அமைந்துள்ள கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவித்ததுடன், அதன் பிரதிகளை எங்களுக்கு அனுப்புமாறும் அறிவித்தோம். அதற்கு அமைவாக, சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் லங்கா மினரல் ஸேன்ட்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் மாத்திரம் நிலுவைகளை உறுதிப்படுத்தும் கடிதங்களின் பிரதிகளை எங்களுக்கு அனுப்பி இருந்ததுடன் அவற்றின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

(இணைப்பு இல. 03 மற்றும் 04)

எவ்வாறாயினும், வேறு நிறுவனங்களிலிருந்து நிலுவையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனத்தின் ஏடுகளிலுள்ள குறிப்புகளை சரியாக கருத்திற்கொண்டு வருடாந்த நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

(இ) வெட்டுமர விற்பனை அடிப்படையிலான கடன் பெறுமதியான ரூபா. 2,801,000 தொகை 2016 இலிருந்து இருந்து வரும் மீதியாக இருப்பதுடன், இந்த மீதியின் இயல்பு, அது எவ்வளவு காலமாக இருந்து வருகின்றது, அது எவ்வாறு உருவாகியுள்ளது போன்ற விபரங்களைப் பரீட்சித்து பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இந்தத் தொகையை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகிறோம்.

(உ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள மீண்டும் செலுத்த வேண்டிய ரூபா. 6,379,370 பெறுமதியான விலைமனுக்கோரல் வைப்புப் பணம் 2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்கொணரப்பட்டுள்ள மீதியாகும். இது தொடர்பில் பரீட்சித்து பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 2022 இல் இந்தத் தொகையை நிதி ஏடுகளிலிருந்து நீக்கிவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை அறியத்தருகிறோம்.

(ஊ) இது தொடர்பாக பரீட்சித்து 2022 இல் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(எ) வன முகாமைத்துத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு 2009 இல் உறப்பட்ட செலவினமான ரூபா. 1,645,340 வினை தவறுதலாக நிதி நிலைமைக் கூற்றின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் அதனை 2022 இல் சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியத்தருகிறோம். அவ்வாறே, ரூபா. 6,705,259 என்பது 2010 வருடத்திற்கு முன்பிருந்தே முன்கொணரப்பட்ட நிலுவையாகும். இந்த நிலுவை உருவாகியுள்ள விதம் மற்றும் அதனைக் கணக்கிட்டுள்ள முறையைப் பரீட்சித்து 2022 இல் கணக்குச் சீராக்கல்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் தற்போது கூட்டுத்தாபனத்திலுள்ள ஆவணங்கள் 2021 வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கு வரும் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறோம்.

(ஐ) பிற்போடப்பட்ட சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ள ரூபா. 781,064 பணம் 2012 இலிருந்து முன்கொணரப்படுகின்ற நிலுவையாக இருப்பதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் ஆதனங்களை குத்தகைக்கு விடும் போது அந்த ஆதனங்களுக்கு பிரவேசிக்கும் பாதைகளை திருத்துவதற்கான செலவுகள் இதில் உள்ளடங்கும். அந்தத் தொகை உருவாகியுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

விபரம்	தொகை ரூபாய்.
அலகொல்ல தோட்டம்	9,013.00
கல்பில்ல தோட்டம்	62,159.44
ஹுன்னஸ்கிரிய தோட்டம்	588,762.33
ரங்களைத் தோட்டம்	121,129.00
மொத்தம்	781,063.77

மேலே கூறப்பட்ட வீதிப் பராமரிப்புச் செலவினங்களை 2012 இல் Ernst & Young கணக்காய்வு நிறுவனத்தின் ஆலோசனையின் அடிப்படையில் 10 வருடங்களுள் நீக்கி விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. என்றாலும், 2012 இற்குப் பிறகும் அந்த மீதியை பதிவழிக்கப்படவில்லை. ஆதலால், 2021.12.31 திகதிக்கு ரூபா. 438,730 நிலுவை மீதியாகவுள்ளது.

(ஒ) 2020.12.31 ஆந் திகதிக்கு கொட்டகங்கை, கோமரை, ஹெயாபார்க், ஹுன்னஸ்கிரிய, வைதலாவை மற்றும் வலஹந்துவைத் தோட்டங்களின் உரம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெருந்தோட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்களின் பௌதீக இருப்புடன் தொடர்புடைய உறுதிப்படுத்தல் அறிக்கைகளின் பிரதிகள் இத்துடண் இணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, அது தொடர்பான எழுத்துமூல ஆவணங்கள் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. (இணைப்பு இல. 5).

(ஓ) அறவிட முடியாதுள்ள கடன்பட்டோர் தொடர்பான விபரங்களைப் பரீட்சிப்பதற்கு தற்போது ஒரு உத்தியோகத்தர் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விபரங்கள் கிடைத்த பிறகு குறித்த பணத்தை அறவிட்டுக்கொள்ளல் அல்லது ஏடுகளிலிருந்து நீக்குவது தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஒரு குழுவினை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு பணிப்பாளர் சபை கூறும் தீர்மானங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

(ஒள) இந்த நிலுவைகள் 2012 ஆம் நிதியாண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டவை என்பதால் அப்பெறுமதிகள் தொடர்பான விபரங்களை 2022 நிதிக் கூற்றில் வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

2. வேறு சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைகள் பற்றிய அறிக்கை

2.2.2 சட்டவிதிகள் / கட்டளைகள் தொடர்பான குறிப்பீடுகள்

(அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 2020 இல் கீழே குறிப்பிடுகின்ற உத்தியோகத்தர்களுக்கே போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆர்.ஐ.பீ.எஸ்.எஸ். பண்டார – உள்ளகக் கணக்காய்வு (இந்த உத்தியோகத்தர் 2021.05.21 இல் சேவையிலிருந்து பதவி விலகியுள்ளார்).

திருமதி. பீ.வீ.எல்.சீ பெனரகம - முகாமையாளர் – காணிகள்

திரு. ஆர். சீ கஹவிட - முகாமையாளர் – பெருந்தோட்டங்கள்

குறித்த கொடுப்பனவுகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடனே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் போக்குவரத்து கொடுப்பனவு சம்பந்தமாக 2021.09.30 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அனுப்பிய கடிதம் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி முகாமையாளர் – காணி அவர்களுக்கு செலுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகள் 2022 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டன.

தோட்ட அதிகாரியாக நியமனம் பெற்றுள்ள திரு. ஆர்.சீ கஹவிட்ட அவர்கள் அந்தக் காலத்திலேயே முகாமையாளர் – பெருந்தோட்டம் எனும் பதவியில் பதில் கடமையாற்றியுள்ளார். தோட்ட அதிகாரி என்ற வகையில் அவரது நியமனக் கடிதத்தின் பிரகாரம் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக ஒரு மோட்டார் வாகனம் வழங்க வேண்டுமென்பதால் அவருக்கான மேற்பார்வை வாகனத்திற்குப் பதிலாக எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அதற்காக ஓட்டுநர் ஒருவர் வழங்கப்படவில்லை.

எனவே, மேற்பார்வை வாகனத்திற்குப் பதிலாக ஓட்டுநரும் இல்லாது ரூபா. 50,000 எரிபொருள் கொடுப்பனவினை வழங்குவது கூட்டுத்தாபனத்திற்கு அனுகூலமானது.

(ஆ) கூட்டுத்தாபனத் தலைவருக்கு தோட்ட மேற்பார்வை நடவடிக்கை மற்றும் ஏனைய வெளிக்கள கடமைகளுக்காக தேவைப்படும் எரிபொருள் அளவினை 2020 வருடத்திற்கான வருடாந்த செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கி அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த சுற்றறிக்கையின் வரையறைகளைக் கடந்து 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தலைவரின் வாகனத்திற்குப் பெற்றுக்கொண்டுள்ள எரிபொருள் சம்பந்தமான விபரங்களை 2022.08.26 ஆம் திகதி இடம்பெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(இ) கூட்டுத்தாபனத் தலைவருக்கு தோட்ட மேற்பார்வை நடவடிக்கை மற்றும் ஏனைய வெளிக்கள கடமைகளுக்காக தேவைப்படும் எரிபொருள் அளவினை 2020 வருடத்திற்கான வருடாந்த செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கி அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த சுற்றறிக்கையின் வரையறைகளைக் கடந்து 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தலைவரின் வாகனத்திற்குப் பெற்றுக்கொண்டுள்ள எரிபொருள் சம்பந்தமான விபரங்களை 2022.08.26 ஆம் திகதி இடம்பெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஓடும் நிலையில் இருக்கும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிததல்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை பரீட்சிப்பதற்குப்

பின்பற்றப்படும் முறைக்கேற்ப அதற்கு பாரிய செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக இது மிகவும் கஷ்டமானதொரு பணியாகும். அதே போன்று, கூட்டுத்தாபனத்தின் உழவு இயந்திரம் போன்ற வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை பரீட்சிப்பது தொடர்பாகவும் பிரச்சினை காணப்படுகின்றது. என்றாலும், 2023 இல் எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(உ) 2021 இலிருந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்கு லொக் புத்தகம் பேணப்படுவதாக அறியத்தருகின்றோம்.

(ஊ) (எ) நிறுவனத்தின் நீண்டகால நிதி நெருக்கடிகளின் காரணமாக ஊழியர் சேமலாப நிதியக்கொடை, ஊழியர் நம்பிக்கை நிதியக்கொடை மற்றும் பணிக்கொடைகள் உரியவாறு செலுத்தப்படாமையினால் இவ்வாறான மிகை விதிப்புக் கொடுப்பனவினை செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலுவையை செலுத்துவதற்கு திறைசேரியிலிருந்து நிதி கிடைத்த பின்னர் குறித்த கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

(ஏ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பாவனைக்கு எடுக்க முடியாத பாவனையிலிருந்து நீக்கும் நிலையில் இருக்கும் வாகனங்களை பாவனையிலிருந்து நீக்கும் நடவடிக்கையை 2023 இல் ஆரம்பபிப்பதாக அறியத்தருகின்றோம்.

(ஐ) 2021 இலிருந்து மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்கும் போது அவை தயார்செய்யப்பட்ட திகதிகளைக் குறிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றோம். 2021 இன் நிதிக் கூற்றுக்களைப் பரீட்சிப்பதற்காக வருகை தரும் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதான அறியத்தருகின்றோம்.

(ஒ) (ஓ) நிறுவனம் நீண்டகாலமாக நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதன் காரணமாக நிறுவனத்தினால் தேசிய இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் வருமான வரிகள் தொடர்பாக கவனம் செலுத்தவில்லை. எனவே, இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஔ) (ஃ) கூட்டுத்தாபனத்தின் 2023 வருடத்திற்கான வணிகத் திட்டம் மற்றும் அதன் அடிப்படையிலமைந்த செயல்திட்டம் என்பவற்றைத் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறியத்தருகின்றோம்.

(க) I 2023 ஆம் ஆண்டுக்கு தயார்செய்யவுள்ள செயல்முறைத் திட்டத்திற்கு அமைவாக காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கும் குறித்த அறிக்கையை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறியத்தருகின்றோம்.

ii 2020 வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது தாமதங்கள் இடம்பெற்றாலும் 2020 வரவு செலவுத்திட்டத்திற்கு 2020.02.12 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், குறித்த வரவு செலவுத்திட்ட ஆவணத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல.06)

(ச) கூட்டுத்தாபனத்திற்குரித்தான கம்மடுவை தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.87 பர்ச்சஸ் காணியை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகை வழங்குவதற்கு பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பெருந்தோட்டத் தொழிற்சாலை அமைச்சின் MPI/2/IND/98 ஆம் இலக்க மற்றும் 1998.12.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறித்த கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 07)

(ச) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.01 பர்ச்சஸ் காணியை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகை வழங்குவதற்கு பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பெருந்தோட்டத் தொழிற்சாலை அமைச்சின் MPI/2/SPC/காணி மற்றும் 1996.08.15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறித்த கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 08)

(ட) ஹுன்னஸ்கிரிய தோட்டத்தின் 40 பேர்ச்சஸ் காணியை வரையறுக்கப்பட்ட பீபல்ஸ் மீடியா கம்பனிக்கு 2008 இல் குத்தகைக்கு வழங்குவதற்கு குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக மக்கள் தோட்ட முகாமை மற்றும் அபிவிருத்தி அமைச்சின் PEMD/Ad/Ep/C/1 ஆம் இலக்க மற்றும் 2007.11.07 திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்தது. அதன் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 09)

(த) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கம்மடுவை தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.87 பர்ச்சஸ் காணியை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் போது அந்த நிறுவனத்துடன் குத்தகை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டடிருக்கவில்லை. ஆதலால், அரச மதிப்பீட்டின் அடிப்படையிலான குத்தகை வாடகை அறவிடப்படவில்லை. எனவே, உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு குறித்த நிறுவனத்தின் உடன்பாட்டினை கோரி 2020.12.23 மற்றும் 2021.11.22 திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு இது வரையில் குறித்த நிறுவனத்திலிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. மேலும், சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனத்துடன் இது தொடர்பாக 2021.03.16 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் ஒரு கலந்துரையாடல் நடந்தது. அங்கு ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு எமக்கு ஒரு திகதியை அறிவிப்பதாக கூறினாலும் அவ்வாறு இடம்பெறவில்லை. குறித்த உத்தியோகத்தர்களுடன் தொலைபேசி மூலம் தொடபுகொள்ள முயற்சித்தாலும் அதுவும் வெற்றிகரமாக அமையவில்லை. இது போன்ற நடைமுறைச் சிக்கல்களால் இது வரையில் உடன்படிக்கை கைச்சாத்தாகவில்லை. எனவே, பெருந்தோட்ட அமைச்சின் உதவியுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எதிர்பாக்கிறோம் என்பதை அறியத்தருகின்றோம்.

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து வரையறுக்கப்பட்ட ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்கு 02 ரூட் 06 பர்ச்சஸ் பரப்பு காணி ஹோட்டலின் நுழைவுப்பாதைக்கு 08 ஆம் இலக்க 2008.08.08 ஆம் திகதிய குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் 50 வருடங்களுக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது. குறித்த குத்தகைப் பணத்தைத் தீர்மானிக்கும் போது மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவில்லை. இது சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அவர்களின் ஆலோசனைகளுக்கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ப) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஓபல்கலை தோட்டத்திலிருந்து 01 ரூட் 39.07 பர்ச்சஸ் நிலப்பரப்பு வரையறுக்கப்பட்ட டயலொக் ப்ரோன்ட்பேன்ட் தனியார் கம்பனிக்கு 2000.01.01 ஆம் திகதிய 111 ஆம் இலக்க உடன்படிக்கை மூலம் குத்தகை விடப்பட்டுள்ளது. மதிப்பீட்டுப் பெறுமானத்தை விட மிகவும் குறைவானதொரு தொகையே குறித்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அவர்களின் ஆலோசனைகளின் படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ற) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து வரையறுக்கப்பட்ட ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்கு 02 ரூட் 06 பர்ச்சஸ் பரப்பு காணி குத்தகைக்கு வழங்கியபோது அமைச்சரின் அனுமதி பெறப்படவில்லை. இது சம்பந்தமாக பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அவர்களின் ஆலோசனைகளின் படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். (இந்த உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் மேலே (த) இல் குறிப்பிடப்பட்டுள்ளது).

2.2.3 இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவது தொடர்பாக குறித்த பாராளுமன்றச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள் மற்றும் கடப்பாடுகளுக்கேற்ப நிறுவனத்தின் நடவடிக்கைகளை நடாத்திச் சென்றிருக்கின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

2.2.4 கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற நிதி நெருக்கடிகள் காரணமாக நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது பற்றி சரியான எதிர்வுகூறலை கூற முடியாதுள்ளது. என்றாலும், 2023 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது தோட்டங்களின் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது தொடர்பாக விடயங்களை அதில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

4. ஏனைய கணக்காய்வு அவதானிப்புரைகள்

3.1 செயலாற்றுகை

(அ) *பெருந்தோட்ட அமைச்சின் தரவுகளுக்கமைவாக 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1482 கிலோ கிராமாக இருந்தாலும், 2020 இல் ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலையின் விளைச்சல் 1376.8 கிலோ கிராமாகும். கூட்டுத்தாபனத்தின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக 2019, 2020 மற்றும் 2021 களில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் தேயிலை விளைச்சல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.*

வருடம்	**ஹெக்டயருக்கு முடிவுத் தேயிலை விளைச்சல் (கி.கி)**
2019	*174 – 723*
2020	*201 – 991*
2021	*198 - 1131*

மேலே உள்ள அட்டவணையின் படி, 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 மற்றும் 2021 களில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் விளைச்சலை கருத்திற்கொள்ளத்தக்க அளவு அதிகரிக்க முடிந்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(ஆ) *கூட்டுத்தாபனத்தின் ஆவணங்களுக்கேற்ப 2020 ஆகும் போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக இருந்த நிலப்பரப்பு 4,189.06 ஆக இருந்ததுடன், அதில் கிட்டத்தட்ட 2,838 நிலப்பரப்பில் 100 வருடங்களை விட மிகவும் தொன்மையான தேயிலைப் பயிர்ச்செய்கையே காணப்படுகின்றது. அதில் 180 ஹெக்டயர் நிலப்பரப்பில் திறைசேரியின் நிதியுதவியுடன் மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

(இ) *கூட்டுத்தாபனத்தின் எழுத்துமூலமான ஆவணங்களின் படி 2019 இல் வெளிப்பெருந்தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேயிலை காணியின் பரப்பு 1391 ஹெக்டயராகும். அந்த ஆண்டில் வெளிப் பெருந்தோட்டக்காரர்களின் மொத்த தேயிலை உற்பத்தி 99,850 கிலோ கிராமாக இருந்தது. அந்த உற்பத்தி 2020 மற்றும் 2021 களில் முறையே 157,987 கி.கி மற்றும் 170,645 கி.கி ஆக இருந்தன.*

(ஈ) *அதற்கேற்ப 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 மற்றும் 2021 களில் தேயிலை உற்பத்தியில் கருத்திற்கொள்ளத்தக்களவு முன்னேற்றமடைந்துள்ளது. எவ்வாறாயினும், வெளிப்பெருந்தோட்டக்காரர்களுக்கு விளைச்சல் குறைவான தேயிலை நிலங்களே வழங்கப்பட்டுள்ளதுடன், 2020 இன் ஆரம்பத்திலிருந்தே உரம்*

பெற்றுக்கொள்வதற்கு இருந்த பிரச்சினைகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள 2018 /2019 வருடங்களுக்கான தரவுகளின் படி, இலங்கையில் ஒரு கிலோகிராம் உற்பத்திக்கான சாதாரண செலவு ரூபா. 484 ஆக இருந்தாலும், பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான சாதாரண உற்பத்திச் செலவு ரூபா. 547.77 ஆகும். கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 9 தோட்டங்களுக்கான வருடாந்த உற்பத்தி அலகின் செலவு ரூபா. 500 முதல் ரூபா. 1974 க்கு இடைப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

(ஊ) 2020 இன் ஆரம்பத்திலிருந்தே உரத்தைப் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குரியதாக இருந்ததனால் எதிர்பார்க்கப்பட்டவாறு தேயிலை உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை.

(எ) கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் 2020 க்கான வருடாந்த தேறிய விற்பனைப் பெறுமதி ரூபா. 386 – ரூபா. 470 க்கு இடைப்பட்டதாகவே இருந்தது.

(ஏ) 2020 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த நிலப்பரப்பு 11,012 ஹெக்டயர் ஆகும். அந்த மொத்த நிலப்பில் 4,189.06 ஹெக்டயர் பரப்பில் தேயிலைப் பயிர்ச்செய்கையும், 64.56 ஹெக்டயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கையும் இருப்பதுடன் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் வனப் பயிர்ச்செய்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பரப்பு 2,471.38 ஹெக்டயர் ஆகும். அதற்கு மேலதிகமாக, வீதி, கட்டிடங்கள், கற்பாறைகள் மற்றும் நக்கிள்ஸ் பாதுகாக்கப்பட்ட வலயம் உள்ளிட்ட பயிரிட முடியாத நிலப்பரப்பு கிட்டத்தட்ட 4,287.70 ஹெக்டயராகும். பயிர்செய்யாத நிலப்பரப்பில் பெரும்பாலான பகுதி நக்கிள்ஸ் பாதுகாக்கப்பட்ட வலயத்தினுள் அமைந்துள்ளதால் அந்த நிலப்பரப்பில் எவ்விதமான பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்ள முடியாது என்பதை அறியத்தருகின்றோம்.

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆவணங்களின் படி 2012 இல் கூட்டுத்தாபனத்தின் முடிவுத் தேயிலை உற்பத்தி (வெளிப் பெருந்தோட்டக்காரர்களிடமிருந்து எடுத்த உற்பத்தி உள்ளடங்கலாக) 2,102,344 கிலோ கிராமாக இருந்தது. அவ்வாறே, 2020 மற்றும் 2021 களில் கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்தி முறையே 1,742,363 மற்றும் 1,803,226 கிலோ கிராமாக இருந்தது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தேயிலை இடங்களின் நிலப்பரப்பு முறையே 4,189.06 மற்றும் 4,199.74 ஆகும். பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் மொத்த தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியினை உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியின் சதவீதமாக நோக்கும் போது அது 30% மற்றும் 31% ஆகும்.

(ஊ) இலங்கை இறப்பர் பரிசோதனை நிலையத்தின் தரவுகளின் படி ஒரு ஹெக்டயருக்கான நியம இறப்பர் செடிகள் 516 ஆக இருக்க வேண்டுமென்பதுடன், வெற்றிகரமற்ற காட்டுச் செடிகளின் எண்ணிக்கையையும் கருத்திற்கொள்ளும் போது ஒரு ஹெக்டயர் பரப்பில் இருக்கும் இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 300 – 500 ஆகும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வலஹந்துலை தோட்டத்தின் ஹெக்டயருக்கான சாதாரண இறப்பர் உற்பித்தி 456 கி.கி என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

3.2 ஆளணி நிர்வாகம்

(அ) (ஆ) (இ) கூட்டுத்தாபனத்தின் மொத்த அங்கீகரித்த ஆளணியினுள் ஒவ்வொரு பதிவி வகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை (நிரந்தரம் அல்லது ஒப்பந்த அடிப்படையில்) விஞ்சாது ஆளணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஏதேனுமொரு பதவிக்காக நிரந்த உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்க்காது அப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கத் தேவைப்படுமிடத்து குறித்த உத்தியோகத்தரின் ஒப்பந்தக் காலத்தை முடிவுறுத்த முடியுமென்பதனால் அது கூட்டுத்தாபனத்திற்கு கூடுதலான பயன்களைப் பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும். அதற்கேற்ப, நிறுவனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக வரையறுத்த ஆளணியினரைக் கொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளை தடைகளின்றி நடாத்திச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறியத்தருகின்றோம்.

(ஈ) நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிப்பது தொடர்பாக பெருந்தோட்ட அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 03 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம், திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக 2021.12.14 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் பெருந்தோட்ட அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. அதற்கேற்ப, பெருந்தோட்ட அமைச்சினால் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரைபு மூலத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மீண்டும் திருத்தி எமது நிறுவனத்திற்கு அனுப்பியதுடன், குறித்த ஆலோசனைகளின் படி நான்காவது தடவையும் திருத்தங்களைச் செய்து 2022.07.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

(உ) கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புக்கள் ஒப்பந்த அடிப்படையிலான குறுகிய கால நியமங்களாகும். நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது எப்போதும் தற்போது தயாரித்து அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப பகிரந்த அறிவித்தல்கள் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும். தற்காலிக நியமனங்களுக்கு பகிரங்க பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு அதிக செலவினை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், கூட்டுத்தாபனம் தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடி காரணமாக அவ்வாறான செலவுகளை மேற்கொள்வது மிகவும் சிரமமாகவே இருக்கும்.

3.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் அனுமதியின் கிட்டத்தட்ட 450 ஹெக்டயர் நிலப்பரப்பு காணியில் குடியிருக்கின்றவர்களுள் கிட்டத்தட்ட 05 பர்ச்ஸ் காணியில் உரிமை அனுபவித்துக்கொண்டிருந்த தல்வடம் கெதர ரன்ஜித் சுபசிங்ஹ மற்றும் சிந்தாமனி ஆகியோரிடமிருந்து காணியை மீண்டும் கையகப்படுத்திக்கொண்டது. அதே போன்று, கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதியின்றி குடியிருக்கும் நபர்களுக்கு எதிராகவும் மேலே குறிப்பிட்ட 445 பர்ச்சஸ் நிலப்பரப்பில் அனுமதியின் குடியிருக்கும் தரப்பினருக்கு எதிராகவும் வழக்குகள் தாக்கலிடப்பட்டுள்ளன.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் 2020 பெப்ரவரி 06 ஆம் திகதிக்கு முன்பு வெவ்வேறு தரப்பினர்களுக்கு குத்தகை வழங்கியுள்ள காணிகளில், அரச மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அறவிடாதிருக்கும் காணிகள் பற்றிய விபரங்களை பணீப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் ஆலோசனைகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம்.

2020 பெப்ரவரி 06 ஆம் திகதிக்கு பிறகு இது வரையில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எந்தக் காணியும் குத்தகைக்கு விடப்படவில்லை.